REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 டிசம்பர் 16 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 297 | Friday 16, December, 2022 | 24 பக்கங்கள் | 50/-


## கிறிஸ்மஸ் செலவை குறைத்து உக்ரைன் மக்களுக்கு உதவுங்கள்

### போப் பிரான்சிஸ் வேண்டுகோள்



கிறிஸ்மஸ் பண்டிகை செலவுகளை குறைத்துக்கொண்டு ரஷ்ய – உக்ரைன் போரால் பாதிக்கப்பட்டு கடும் குளிராலும் பசியாலும் 06

### பௌத்த மற்றும் பாலி பல்கலை சம்பவங்கள்

## ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகிடிவதை சம்பவங்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து முழுமையான அறிக்கையொன்றை தமக்கு பெற்றுத்தருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் தாக்கப்பட்டமை தொடர்பில் ஏற்கனவே அறிக்கையொன்றை 06

## இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க தென்னாபிரிக்கா இணக்கம்

### நீதி அமைச்சரிடம் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் அடிப்படை உரிமையை பாதுகாப்பதை மேலும் உறுதிப்படுத்துதல், மனித உரிமை ஆணைக்குழுவை பலப்படுத்தல் மற்றும் நாட்டின் சட்ட கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்தல் ஆகிய 06



### IMFக்கு அப்பால் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து

## 2023 இல் 8 பில்லியன் டொலரை எதிர்பார்த்திருக்கும் நிலையில்!

### இலங்கை பொருளாதாரம் குறித்து அலிசப்ரி கருத்து

இலங்கை அரசாங்கம் 2023ஆம் ஆண்டு 8 பில்லியன் டொலரை கடனாக எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



சர்வதேச நாணய நிதியத்துக்கு அப்பால், பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து அடுத்த ஆண்டு 5 பில்லியன் டொலர் வரை கடனை இலங்கை எதிர்பார்க்கிறது. அத்துடன் அரச சொத்துக்களை மறுசீரமைப்பதன் மூலம் 06

### சேவையை நிறைவேற்ற ஒருபோதும் தவறவே கூடாது

# பொதுமக்கள் சேவைக்கே அரச உத்தியோகத்தர்கள்

### தவறியமைக்கான காரணங்களை முன்வைக்கவும் கூடாது



### அரச அதிகாரிகள் திறமையாக செயல்பட வேண்டும் எனக்கு காரணங்கள் எதுவுமே தேவையில்லை

**பதுளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து**

அரச நிறுவனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்காத வகையில் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையைப் பெற்றுக் கொடுப்பது அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பாகுமென வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்கள் சேவையை நிறைவேற்றத் தவறியமைக்காக அரச உத்தியோகத்தர்கள் ஒருபோதும் காரணங்களை முன்வைக்கக் கூடாதென்றும் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே சட்டங்கள் மற்றும் சட்டக்கோவைகளை கேடயமாகப் பயன்படுத்த வேண்டுமே தவிர நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக அல்ல என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பதுளை மாவட்டச் செயலகத்தில் நேற்று (15) முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

இப்பகுதிகளிலுள்ள பைனஸ் மரங்களை அகற்றுவதற்கு முன்னர் அது தொடர்பிலான 06



24 வது கொடகே தேசிய சாகித்திய விருது வழங்கும் நிகழ்வு (15) நேற்று தேசிய நூலக சேவைகள் சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற போது ஈழத்து தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய பணிக்காக சிரிசுமன கொடகே தம்பதியினரை, வகவத்தின் ஸ்தாபக குழு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தது. நினைவுச்சின்னத்தை வகவத்தின் தலைவர் டாக்டர் தாஸிம் அஹமது வழங்குவதை காணலாம். இந்நிகழ்வை வகவத்தின் ஆலோசகர் மேமன் கவி, புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

### வடக்கு கிழக்கில் அதிக குளிர் காரணமாக

## இறந்த கால்நடைகளுக்கு நஷ்ட ஈடு விரைவில் கிடைக்கும்

### அரசு விசேட கவனம் என்கிறார் அமைச்சர் அமரவீர

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இறந்த கால்நடைகளுக்கான நஷ்டஈட்டை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பான



அமைச்சரவை பத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். குறித்த யோசனைக்கு 06

### நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில்

## தனித்துப் போட்டியிடுவது குறித்து பேச்சின் பின்பே முடிவு

**யாழ். விசேட நிருபர்**



தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுவது தொடர்பில், பங்காளிக் கட்சிகளுடன் சமரசமாக பேச்சு நடத்திய பின்னரே முடிவு எடுப்போமே தவிர தனித்து தீர்மானத்தை 06

## டயனாவுக்கு எதிரான பயணத்தடை தளர்வு



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை 5 நாட்களுக்கு தளர்த்துமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று (15) உத்தரவிட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சரின் பிறப்புச் சான்றிதழ், 06

### தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்ற சுமார்

## ஆறு இலட்சம் பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

### கட்டம் கட்டமாக தபாலில் அனுப்பிவைப்பு

தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்ற சுமார் 6 இலட்சம் பேருக்கு சாரதி அனுமதி பத்திர அட்டைகள் அச்சிட்டு தபால் மூலம் அனுப்பி வைக்க ஏற்பாடு 06



நாட்டிலுள்ள பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் சிறந்தவர்களை வருடாந்தம் தேர்ந்தெடுத்து 'ஒப்சேர்வர் மொபிடெல் விருது' வழங்கும் வைபவம் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் அரவிந்த டி சில்வா தலைமையில் நேற்று கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கொழும்பு மருதானை புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த துலிப் வெள்ளாலகே சிறந்த கிரிக்கெட் வீரராகவும் கம்பஹா ரத்னாவலி பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த விஸ்வி குணரத்ன சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்நிகழ்வில் கலந்துகொண்ட வெகுசன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் அனுஷா பெல்பிட்ட, சண்டே ஒப்சேர்வர் பிரதம ஆசிரியர் தினேஷ் வீரவன்ச, டெலிகொம் நிறுவனத்தின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: ருக்மல் கமகே)

## பிரபல குத்துச்சண்டை வீரரை கொடூரமாக தாக்கிய மர்ம கும்பல்

### கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை

இலங்கையின் பிரபல குத்துச்சண்டை வீரர் மீது மர்ம கும்பலொன்று கொடூரமான முறையில் தாக்குதலை நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தாக்குதலில் குத்



துச்சண்டை வீரர் எம்.எஸ். தினுஷ லக்ஷான் என்பவர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் 06

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் சுமார் 2 கோடி ரூபா பரிசு

### யாழ். முகவரால் விற்கப்பட்ட டிக்கட்



யாழ்ப்பாணம் சங்கானைப் பிரதேச தேசிய லொத்தர் சபையின் விற்பனை முகவரான த.சகீஜன் ஊடாக ஒரு கோடியே 97 இலட்சம் ரூபா பெறுமதியான அதிர்ஷ்ட லாப சீட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


நேற்றுமுன்தினம் சீட்டிழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத சீட்டிழுப்பின் ஊடாக ஆறு வெற்றி 06

### தமிழகத்திலிருந்து கடத்திவரப்பட்ட நிலையில்

## குருநகர் பகுதியில் 180 kg கஞ்சா தொகை கைப்பற்றல்

### கடற்படையினர் நேற்று அதிரடி

**யாழ். விசேட நிருபர்**



தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்ட 180 கிலோ கஞ்சா பொதிகளை கடற்படையினர் மீட்டுள்ளதுடன், அதனை கடத்தி 06

## புதிய வருடத்தில் புதிய கூட்டமைப்பு

### மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு

நாட்டின் எதிர்கால அரசியலுக்கான புதிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டணியை எதிர்வரும் ஜனவரி மாதம் அறிவிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 06






# கித்துல்கல பிரதேசத்தில் சுற்றுலா பயணிகளை அதிகரிக்க நடவடிக்கை

## அமைச்சர் ரோஹன திசாநாயக்க

**புலத்கோஹப்பிட்டிய குறுப் நிருபர்**

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை, கித்துல்கல பிரதேசத்துக்கு வரைவழைப்பது தொடர்பிலும் அதற்கு தேவையான அடிப்படை வசதிகளை இப் பிரதேசத்தில் ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க தெரிவித்தார்.

சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க, நேற்று (15) கித்துல்கல பிரதேசத்துக்கு அவசர கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,..



இதன்போது, அமைச்சர் கித்துல்கல பிரதேசத்தை அண்மித்த களனி கங்கையில் படகு சவாரி விளையாட்டில் ஈடுபடுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன், இது தொடர்பில் முறையான திட்டமிடலை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இந்த விளையாட்டில் ஈடுபடுபவர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.



மேலும் ப்ரோட்லன் நீர்மின் உற்பத்தி நிலையத்திலிருந்து களனி ஆற்றுக்கு திறந்து விடப்படும் நீர், படகு சவாரி விளையாட்டுக்கு போதுமானதாக இல்லையென அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாட உள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

சிவனொளிபாதமலைக்கு

# போதைப்பொருள் எடுத்து சென்ற பத்து பேர் கைது!

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.**

நுவரெலியா மற்றும் சிவனொளி பாதமலைக்கு சுற்றுலா வந்த குருநாகல்,வறக்காப்பொல, கம்பஹா பகுதிகளை சேர்ந்த கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களை எடுத்து வந்து 10 இளைஞர்கள் ஹற்றன் போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் மோப்ப நாய்களை கொண்டு வீதியில் தனியார் வாகனங்கள் மற்றும் பஸ்களை சோதனைச் செய்த போதே இவர்கள் கை செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் குற்றத்தடுப்பு பிரிவு உயர் அதிகாரியின் பணிப்புரைக்கிணங்க இவ்வாறான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஹற்றன் புகையிரத நிலையம்,பஸ் தரிப்பிடம், மவுசாகல சந்தி, தியகல சந்தி, ஹற்றன் மல்லிப்பூ சந்தி, கினிகத்தேன பொலிஸ் சந்தி, நோர்வூட் சந்தி போன்ற இடங்களில் விசேட சோதனைகள் நடைபெறுகின்றன.

# இரத்தினபுரி மாவட்டத்திற்கு புதிய உள்ளூராட்சி சபை உதவி ஆணையாளர்



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்திற்கு உள்ளூராட்சி சபை உதவி ஆணையாளராக மிலிந்த திசாநாயக்க நியமனமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் நேற்று முன்தினம் (14) ஆளுநர் அலுவலகத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், சப்ரகமுவ மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் தலைவர் சாந்தி விஜேராஜா, சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண ஆளுநர் அலுவலகத்தின் செயலாளர் எச். டி.சிசிர, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாத்தளை நகரில் புதிய இலங்கை வங்கிக் கிளை




**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை யடவத்த நகரில் இயங்கி வந்த இலங்கை வங்கி கிளை புதிய கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டட திறப்பு விழாவில் இலங்கை வங்கி மத்திய மாகாண உதவி முகாமையாளர் சரத் விஜேசிங்க, இலங்கை வங்கி செயற்திட்ட பொது முகாமையாளர் பியந்த சில்வா, யடவத்த பிரதேச செயலாளர், பிரதேச வங்கி முகாமையாளர் பலரும் கலந்து கொண்டனர்.

# நுவரெலியா ஹோட்டலில் தீ; ஒருவர் வைத்தியசாலையில்

நுவரெலியா சென் அன்றூஸ் வீதியில் உள்ள ஹோட்டலொன்றில் ஏற்பட்ட தீப்பரவலால் ஒருவர் காயமடைந்து, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டலிலுள்ள எரிவாயு அடுப்பில் ஏற்பட்ட வாயு கசிவால் இத் தீ விபத்து ஏற்படுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



இதனையடுத்து, பிரதேசவாசிகள், பொலிஸார் மற்றும் தீயணைப்பு பிரிவினரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். தீயால் ஹோட்டலுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# குயினா தோட்டத்தொழிலாளர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம்

பொகவானை குயினா தோட்டத்தின் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்று முன்தினம் (14) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களால் பறிக்கப்படும் கொழுந்து, டிஜிட்டல் தராசால் நிறுவை செய்யப்படுவதாகவும் இதனால் நாளாந்தம் பறிக்கும் தேயிலை கொழுந்தில் நட்டம் எற்படுவதாக தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக மலையக அரசியல்வாதிகளுக்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

# உடபலாத்த பிரதேச செயலகத்தால் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கௌரவம்



**மாவத்தகம தினகரன் நிருபர்**

உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கம்பளை உடபலாத்த பிரதேசத்தில் 75 மாணவர்களை கௌரவிக்கும் விழாவும், கலை நிகழ்வுகளும் உடபலாத்த பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

உடபலாத்த பிரதேச செயலகத்தின் சமூக சேவை பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக உடபலாத்த பிரதேச செயலக செயலாளர் திருமதி தென்னகோன், கௌரவ அதிதிகளாக எக்லட் யுன்னைட் ஸ்ரீலங்கா அமைப்பின் ஸ்தாபக தலைவர் இஹ்திசான் முகமட், மத குருக்கள் சார்பாக கிரிந்த ஹின்னரன் தெனிய விகரையின் விகாராதிபதி உல்பதாகம ஜினவன்ச ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டனர். எக்லட் யுன்னைடின் தலைவர் இஹ்திஷான் முகமட் உரையாற்றும் போது,..

இந்த பிள்ளைகள் இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட ஒரு வரம். இவர்கள் அனைவருக்கும் ஒரு திறமை இருக்கின்றது. அதை நாம் அடையாளப்படுத்தி சமூக மயப்படுத்தும் போது அவர்கள் சாதாரண பிள்ளைகளை விட பன் மடங்கு திறமையுடையவர்களாக மாறுகின்றனர். ஆகவே பெற்றோர்கள் எப்பொழுதும் போலே அவர்கள் பின்னணியில் இருக்க வேண்டும் என்றார்

# இராகலை – டெல்மார் மேல்பிரிவு தொழிலாளர்கள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்

இராகலை டெல்மார் மேல்பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் (14) காலை அடையாள பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டனர்.

தோட்ட நிர்வாகம் டெல்மார் மேல் பிரிவு தோட்டத்திற்குரிய தேயிலைக் காணிகளில்

'யூக்கலிப்டஸ்' மரக்கன்றுகளை நடுவதற்கு எடுத்த முயற்சியினை கண்டித்தே தொழிலாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

டெல்மார் தோட்டத்தை பிரவுன்ஸ் கம்பனி பொறுப்பேற்றதன் பின்னர், பல ஹெக்டேயர் தேயிலைக் காணிகளில் தேயிலை மரங்களுக்கு இடையிலும், ஓரங்களிலும் "யூக்கலிப்டஸ்" மரக் கன்றுகளை நிர்வாகம் நாட்டி வருகிறது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் தேயிலைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என சுட்டிக்காட்டும் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகம் " யூக்கலிப்டஸ் " மரங்கள் ஊடாக பாரிய இலாபத்தை அடைய திட்டமிட்டு தேயிலையை அழிக்க திட்டமிடுகிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் தேயிலை நிலங்களில் "யூக்கலிப்டஸ்" மரக்கன்றுகளை நடுவ



தால், தேயிலைக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டு பின் தேயிலை விளைச்சல் குறைந்து விடும்.இதனால் தொழிலாளர்கள் தொழிலை இழக்க நேரிடுவதுடன் தேயிலை மலைகள் காடாகும் எனவும் தெரிவிக்கின்றனர்.

உடப்புஸ்ஸலாவை எனிக் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் " யூக்கலிப்டஸ் " மரக்கன்றுகளை டெல்மார் தோட்ட நிர்வாகம் கொண்டு வந்து நடுவதற்கு தொழிலாளர்கள் நிர்வாகத்தினரால் பணிக்கப்பட்டுள்ள நிலையில்,தோட்ட நிர்வாகத்தின் பணிப்பினை நிராகரித்து கொண்டுவரப்பட்ட மரக்கன்றுகளை மீண்டும் வெளியில் எடுத்து செல்லும் படி வழியுறுத்தி பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

ஆ.ரமேஸ்

# ஹற்றனில் சமையல் எரிவாயு விநியோகத்தில் பாரபட்சம்

நான்கு நாட்களின் பின்னர் ஹற்றன் நகரில் லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்ட நிலையில், விற்பனை பிரதிநிதிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

ஹற்றன் நகருக்கு லிட்ரோ சமையல் எரிவாயு நேற்று முன்தினம் இரவு கொண்டு வரப்பட்டதுடன், அன்றைய தினம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சிலிண்டர்களே விநியோகிக்கப்பட்டதால், இருதரப்புக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு எரிவாயு சிலிண்டர்களே கிடைத்துள்ளதுடன், அவற்றில் ஒரு தொகை ஹோட்டல்களுக்கு ஒதுக்கப்பட்டதால், எரிவாயு கொள்வனவுக்காக வரிசைகளில் காத்திருந்த பலர் வெறுங்கையுடன் திரும்பும் நிலை ஏற்பட்டதால் இதன்போது அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

விற்பனை முகவர்கள் ஹோட்டல்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் போது, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலதிக தொகையைப் பெறுவதால், சாதாரண நுகர்வோருக்கு சிலிண்டரை விநியோகிக்க பின்வாங்குவதாகவும் நுகர்வோர் குற்றஞ் சுமத்துகின்றனர்.

# எட்டு கிராமங்களுக்கு எட்டு நாட்களாக மின்சாரம் இல்லை

## வலப்பனை பிரதேசத்தில் சூறாவளியால் சேதமடைந்த மின் கம்பங்கள் திருத்தப்படாததால் சம்பவம்

நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேசத்திற்கு உட்பட்ட தெரிப்பெய பொலிஸ் பிரிவு மற்றும் உடபுஸ்ஸலாவை பொலிஸ் பிரிவு ஆகிய எட்டு கிராமங்களுக்கு கடந்த (08.12.2022) காலை முதல் இதுவரை மின்சாரம் இல்லை என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த எட்டாம் திகதி வீசிய மினி சூறாவளியினால் தெரிப்பெய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெதிலந்த,பாலகம, உடகம,திக்கல மற்றும் பஸ்பனாவெல ஆகிய கிராமங்களில் பாரிய மரங்கள் மின்கம்பங்கள் மீது முறிந்து வீழ்ந்ததில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

அதேபோல உடபுஸ்ஸலாவை பொலிஸ் பிரதேசத்தில் மீப்பனாவ,எம்புலம்பா மற்றும் நுககொட ஆகிய கிராம பகுதிகளிலும் மின்சார கம்பங்களில் மரங்கள் வீழ்ந்து மின் தடை ஏற்பட்டது.

இந்த நிலையில் கடந்த எட்டு நாட்களாக மின்சார கம்பங்கள் சீர்செய்து வழமையான மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன் இக்கிராமிய பகுதிகளுக்கு மின் தடை தொடர்ச்சியாக இருக்கின்ற நிலையில் ஐந்தாம் தரம் புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது நிலையில் உள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதேபோல இக் கிராமங்களில் மினி சூறாவளிக்கு தமது வீடுகளை இழந்து தற்காலிக பொது தங்குமிடங்களில் சிறு குழந்தைகளுடன் வசிக்கும் மக்களும் மின்சாரம் இன்றி பாரிய அசௌகரிகங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

பிரதேச மக்கள் இது தொடர்பில் கொழும்பு மற்றும் கண்டியில் உள்ள இலங்கை மின்சார சபை தலைமையகத்துக்கு தொடர்பு கொண்டு முறையிட்டுள்ளனர். இவ்வாறு முறையிட்டுள்ளதால் தலைமையக ஊழியர்களை வரவழைத்து பிரதேசத்திற்கான மின்சார சீர்த்திருத்த பணிகளை செய்ய சொல்லுங்கள் என வலப்பனை பிரதேச மின்சார சபை ஊழியர்கள் மக்களிடம் தெரிவித்துள்ளதால் ஆத்திரம் அடைந்துள்ள பிரதேச மக்கள் வீதிக்கு இறங்கவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆ.ரமேஸ்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 16 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.53
லுஹர் - 12.07
அஸர் - 03.29
மஃரிப் - 05.58
இஷா - 07.14

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 01
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# கடன் சுமையற்ற, கடனை மீளச்செலுத்தும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவேன்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கு நிச்சயமாக பாடுபடுவேன் என வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடன் சுமையற்ற மற்றும் கடனை மீளச் செலுத்தக்கூடிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவேன் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடியதும் நாட்டுக்கு முதலீட்டு வாய்ப்புகளை கொண்டு வரக்கூடியதுமான நிறுவனக் கட்டமைப்பொன்றின் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை முதலீட்டு சபையின் முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவை, ஏற்றுமதி மேம்பாட்டு சபையுடன் இணைத்து பொருளாதார கூட்டுத்தாபனமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது தெரிவித்தார்.

இலங்கை ஜப்பான் உறவுகளின் 70 வருட பூர்த்தியை முன்னிட்டு டொயோட்டா லங்கா நிறுவனத்தினால் கடவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட மோட்டார் உதிரிப் பாகங்




கள் விநியோக நிலையத்தை (14) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான பொருளாதார வேலைத்திட்டத்தில் மாற்றம் ஏற்படாமையால் இன்று நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், அடுத்த வருடத்திற்குள் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்து பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"இன்று வியட்நாமின் பொருளாதாரம் போர்மியுலா வன் பந்தயக் கார் போலுள்ளது. நமது பொருளாதாரம் இன்னும் முச்சக்கர வண்டி போலுள்ளது. அப்படி இருப்பின் நாம் எப்படி சிங்கப்பூர் ஓட்டப் பந்தயத்திற்கு செல்வது? மற்ற நாடுகளுக்கு போர்மியுலா வன் பந்தயக் கார்கள் உள்ளன. நாங்கள் முச்சக்கர வண்டியில் சென்று போட்டியிடலாமா? மக்கள் தினமும் பயணம் செய்வதற்கே இது நல்லது. அதில் எந்த பிரச்சினையும் இல்லை. இது நன்றாக இருக்கிறது என்று மீண்டும் சொல்கிறேன். ஆனால் பந்தயத்துக்கு அது சரிவரப் போவதில்லை. நாம் எப்படி வெல்வது? அவ்வாறென்றால் நாம் ஒரு பந்தய காரைக் கண்டு பிடிக்க வேண்டும். ஒரு நல்ல இயந்திரம் இருக்க வேண்டும். அதாவது நல்ல

06

# பிரதமர் தினேஷுடன் இந்திய கடற்படை தளபதி ஹரி குமார் சந்திப்பு



இந்திய கடற்படைத் தளபதி, அட்மிரல் ஆர். ஹரி குமார், கொழும்பில் பிரதமர் அலுவலகத்தில் (14) பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்தார். இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் 'பிராந்தியத்திலுள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி' (SAGAR) என்ற எண்ணக்கருவின் கீழ் இலங்கை கடற்படையுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கான இந்தியாவின் முழுமையான உறுதிப்பாட்டையும் கடற்படை தளபதி பிரதமரிடம் வலியுறுத்தினார்.

## தலைமன்னார் துறைமுகத்தை

# தொழில்துறைமுகமாக மாற்ற ஆய்வு மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்பு

இலங்கையில் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தபட்டு வருகின்ற நிலையில், அது தொடர்பான கூட்டம் நேற்று ஜனாதிபதி தலைமையில் பதுளையில் இடம்பெற்றது. இதன் போது பதுளை மாவட்டத்தில் புயலால்



ஏற்பட்ட பாதிப்பு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தின் பின் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானிடம் ஜனாதிபதி தலைமன்னார் துறைமுகத்தை தொழில்துறைமுகமாக மாற்ற இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு தரப்பினரும் கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

# மருத்துவர்களின் கட்டாய ஓய்வு; வயதெல்லையில் திருத்தம்

## பிரதமரால் விசேட வர்த்தமானி வெளியீடு

லோரன்ஸ் செல்வநாயகம்

மருத்துவர்களின் கட்டாய ஓய்வுபெறும் வயதெல்லையை திருத்தம்செய்து பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.




அதன்படி விசேட மருத்துவர்கள், அரசாங்க மருத்துவ அதிகாரிகள், பல் சிகிச்சை மருத்துவர்கள், அரச பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்கள் ஆகிய பதவிகளில் உள்ளோருக்கான ஓய்வுபெறும் வயதில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த திருத்தத்துக்கமைய தற்போது சேவையிலுள்ள 63 வயதைப் பூர்த்திசெய்த மருத்துவர்கள் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி ஓய்வுபெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, தற்போது 62 வயதை நிறைவுசெய்துள்ள மருத்துவர்கள் தமது 63 வயது நிறைவுறும் போது ஓய்வுபெற வேண்டுமென்றும் தற்போது 61 வயதை நிறைவு செய்யும் மருத்துவர்கள் 62 வயது நிறைவுறும் போதும் ஓய்வு பெற வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 60 வயதை நிறைவுசெய்யும் மருத்துவர்கள் தாம் 61 வயது நிறைவுறும் போது ஓய்வுபெற வேண்டுமென்றும் 59 வயது நிறைவடைந்த மருத்துவர்கள் 60 வயது நிறைவடையும்போது ஓய்வுபெற வேண்டுமென்றும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய ஜனவரி முதலாம் திகதி ஜூன் 30 ஆம் திகதி வரையிலான காலத்தில் பிறந்த தினம் வருகின்ற மருத்துவர்கள் இவ் வருடத்தின் ஜூன் 30 ஆம் திகதி வரை சேவையில் ஈடுபட

06

# இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற 3,500 கிலோ பீடி இலைகள் பறிமுதல்

## தூத்துக்குடியில் 06 மீனவர்கள் கைது

திருச்சி எம்.கே ஷாகுல் ஹமீது

சுமார் 11 கோடி ரூபா பெறுமதியான 3,500 கிலோ பீடி இலைகளை தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற 06 பேரை இந்திய கடலோரக் காவல்படையினர் கைது செய்தனர்.



இலங்கை மதிப்பில் 11 கோடி ரூபா என தெரிவிப்பு

தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு பல்வேறு அத்தியாவசிய பொருட்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு வருகின்றன. அதேபோல் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள், பீடி இலை கடத்தலும் அதிகரித்துள்ளது. இதனால் கடலோர பகுதிகளில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தொடர்ச்சியாக கடத்தல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இந்த நிலையில் புதன்கிழமை தூத்துக்குடி கடலோர காவல் படையினர் ரோந்து கப்பல் வஜ்ரா மூலம்

06

# பொதுமன்னிப்பு காலத்தில் 15,476 வீரர்கள் விலக முடிவு

## இராணுவ ஊடகப் பேச்சாளர் ரவி ஹேரத் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

முப்படைகளிலிருந்தும் நிரந்தரமாக சேவையிலிருந்து விலகிக்கொள்வது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள பொதுமன்னிப்புக் காலத்துக்குள் 15,000க்கும் அதிகமானோர் சேவையிலிருந்து விலகிக்கொள்வதற்கு முன்வந்துள்ளனர்.

விடுமுறை பெற்றுக்கொள்ளாமல் சேவைக்கு சமுகமளிக்காதுள்ள முப்படையையும் சேர்ந்த படைவீரர்கள் நிரந்தரமாக சேவையிலிருந்து விலகுவது தொடர்பில் கடந்த நவம்பர் 15 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, நேற்று முன்தினம் 14 ஆம் திகதி வரை 15,476 படைவீரர்கள் தாம் நிரந்தரமாக சேவையிலிருந்து விலகிக்கொள்வது தொடர்பில் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேற்படி 15,476 படைவீரர்களில் 15,165 பேரை சேவையிலிருந்து விலக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 194 படைவீரர்கள் அவசியமான அறிக்கையை பெற்றுக்கொடுத்ததன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவரென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய ஆண்டில் பாராளுமன்ற அமர்வு ஜனவரி 05ஆம் திகதி

2023 வருடத்தின் பாராளுமன்ற அமர்வை ஜனவரி 05ஆம் திகதி நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

அன்றையதினம் மு.ப 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரையான காலப்பகுதி புனர்வாழ்வுப் பணியகச் சட்டமூலம் மற்றும் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலம் ஆகியவற்றின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதங்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளதாகவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

## பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில்

# வெகுஜன ஊடக நிறுவனங்கள் பாரிய நெருக்கடியான நிலையில்

## பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான தேசிய சபை உப குழுவில் ஊடகவியலாளர்கள் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் வெகுஜன ஊடகங்களை நடத்திச் செல்வதில் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதாக தேசிய சபையின் உப குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் (15) நடைபெற்ற பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய சபையின் உப குழுக் கூட்டத்திலேயே ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பொருளாதார சவால்களுக்கு மத்தியில் வெகுஜன ஊடக நிறுவனங்களில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக ரணவக்க தலைமையில் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு நேற்று (15) பாராளுமன்றத்தில் கூடியது. இதன்போதே இவ்விடயம் புலப்பட்டது.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை உள்ளிட்ட சம்பிரதாயபூர்வமான ஊடக நிறுவனங்கள், இணைய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். பொருளாதார நெருக்கடிக்கு

06

## இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில்

# முஸ்லிம்களின் உரிமைகள் புறந்தள்ளப்பட முடியாது

## அமைச்சர் ஹாபிஸ் நசீர் வலியுறுத்து

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து 13 ஐ அமுல்படுத்தக் கோரும் தமிழ் தலைமைகளும் இதே நிலைப்பாட்டிலுள்ள முஸ்லிம் தலைமையும், இணைந்த வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கான அதிகார பகிர்வு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதி தலைமையில் நடத்தப்படும் பேச்சுக்களில் அரசியலமைப்பின் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கோரியதையடுத்தே, அமைச்சர் நஸீர் அஹமட் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இனப்பிரச்சினை



தீர்க்கப்பட வேண்டும். இதில் நாங்கள் கரிசனையுடன் உள்ளோம். ஆனால், இத்தீர்வுகள் முஸ்லிம் சமூகத்துக்குப் பிரச்சினையாகிவிடக்கூடாது. வடக்கு,கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி கோரும் தரப்புக்கள், இணைந்த வட, கிழக்கில்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.62 | 256.22 |
| கனடியன் டொலர் | 263.80 | 276.03 |
| யூரோ | 382.17 | 397.91 |
| ஜப்பான் யென் | 2.6434 | 2.7541 |
| சிங்கப்பூர் டொலர் | 265.15 | 276.90 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 444.94 | 462.18 |
| சுவிஸ் பிராங்க் | 385.66 | 404.94 |
| அமெரிக்க டொலர் | 361.19 | 371.71 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 963.27 | கட்டார் ரியால் | 98.94 |
| குவைத் டினார் | 1,184.40 | சவூதி ரியால் | 96.59 |
| ஓமான் ரியால் | 943.27 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.87 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 01ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 21

## குறள் தரும் சிந்தனை



ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்

ஒருவருக்குக் கிடைத்த நற்பயன் என்பது அவர் அறிவில்லாத ஒருவருடன் கொண்டிருந்த நட்பைத் துறந்து விடுவதேயாகும்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நம்பிக்கை தரும் அழைப்பு

'நாட்டின் 2023 ஆம் ஆண்டுக்கான சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அனைத்துக் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டு வரவேண்டும்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின் போதே ஜனாதிபதி இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றினர். இக்கூட்டத்தின் போது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பல்வேறு விடயங்கள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இந்நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இதன் நிமித்தம் விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில், இந்த முக்கியத்துவம் மிக்க கொண்டாடத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முயற்சிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் இம்முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கதும் ஆகும்.

இந்நாட்டில் நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டில் உள்ளார். அந்த நிலைப்பாட்டை அவர் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளார். அந்த வகையில் இந்த வலியுறுத்தலும் குறிப்பிட்டத்தக்க ஒன்றாகும்.

இந்நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த அரசியல் தலைவர்கள், இது ஒரு பல்லின மக்கள் வாழும் நாடு என்பதை மறந்து முன்னெடுத்த சில வேலைத்திட்டங்களும் கொள்கைகளும் இனப்பிரச்சினை தோற்றம் பெற வழிவகுத்தன. ஆனாலும் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் அன்று முதல் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.இருந்த போதிலும் ஆளும் கட்சி முன்னெடுக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதைக் கொள்கையாகக் கையாண்டு வந்துள்ளன. இதன் விளைவாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் பல சந்தர்ப்பங்களில் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

அதன் காரணத்தினால்தான் இப்பிரச்சினைக்கு இன்னும் உறுதியான தீர்வு எட்டப்படாத நிலை நீடித்து வருகின்றது. நான்கைந்து தசாப்தங்கள் நீடித்து வருகின்ற இப்பிரச்சினையின் விளைவாக சுமார் மூன்று தசாப்தங்கள் ஆயுத மோதலுககு முகம் கொடுக்கும் நிலைக்கும் உள்ளானது. இப்பிரச்சினை நீடிப்பதால் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மைகள் கிடைக்காது. பாதிப்புகள்தான் அதிகம்.

அதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்புக்களை தேடித்தரக் கூடிய இப்பிரச்சினைக்கு உறதியான தீர்வு காணப்பட வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேரிக்கும் அனைத்துத் தரப்பினரதும் விருப்பமாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இவ்வாறான சூழலில் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வு காண்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார். அதன் வெளிப்பாடாக கடந்த நவம்பர் மாத இறுதிப்பகுதியிலும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அதற்கேற்ப இந்த சர்வகட்சிக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இது ஒரு முன்னேற்றகரமான பாராட்டத்தக்க முயற்சியாகும். இம்முயற்சியை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுத்து 75வது சுதந்திர தினத்திற்கு முன்னர் இணக்கப்பாட்டை எட்டுவது அவசியம்.

பல்லின வாழும் இந்நாட்டை இன மத பேதங்களுக்கு அப்பால் சகல மக்களும் ஒன்றுபட்டு வாழவும் கட்டியெழுப்பவும் வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அதற்கான வாய்ப்புகளும் சூழலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் வளமானதும் சுபீட்சம் மிக்கதுமான தேசத்தை உருவாக்கவும் கட்டியெழுப்பவும் கூடியதாக இருக்கும்.

இதைவிடுத்து இனப்பிரச்சினை நீடிப்பதன் விளைவாக நாடும் மக்களும்தான் பின்னடைவுக்கு உள்ளாவர். ஆனால் இன்றைய மக்கள் பிரதிநிதிகளுக்கு பாரிய பொறுப்பு உள்ளது. எதிர்கால தலைமுறையினருக்கு பின்னடைவுக்கு உள்ளான நாட்டை வழங்க முடியாது. வளம் நிறைந்த தேசமாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. அதன் காரணத்தினால் நாட்டின் எதிர்காலத் தலைமுறையினரின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவது அவசியம். அப்போது இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்கான உறுதியான இணக்கப்பாட்டை 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக அடைந்து கொள்ள முடியும். அதுவே இப்போதைய தேவை.

ஆகவே ஜனாதிபதியின் அழைப்பை சாதகமான முறையில் அணுகுவதோடு பொறுப்புணர்வுடன் செயற்பட அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும் என்றால் மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# பாதுகாப்பற்றதொரு இடமாகி போயுள்ளது பல்கலைக்கழகம்!



**பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களே தாக்குதல் நடத்தியதாகக் கூறுகிறார் விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் பேரா–சிரியர் அர்ஜுன பராக்கிரம**

பல்கலைக்கழகங்களில் போதுமான பாதுகாப்பு கிடைக்காது போனால், எதிர்காலத்தில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தினால் பல்கலைக்கழக நிருவாகத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது..

இதன் முதல்படியாக பேராதனை பல்கலைக்கழக கலைப்பீடத்தின் அனைத்து ஆசிரியர்களும் கலந்துரையாடி 14 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை அனைத்து கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளில் இருந்து விலகுவது என தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர்.

பேராதனை பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் கொடூரமான, மிலேச்சத்தனமான பயங்கரச் செயல்களுக்கு ஒருபொழுதும் இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்த விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம, பல்கலைக்கழகத்தில் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எவரும் செயற்பட முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் (14)நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம தெரிவித்ததாவது:

**பேரோசியர் அதுல சேனாரத்ன மீதான தாக்குதல் சம்பவத்தையடுத்து, கல்வி நடவடிக்கைகளிலிருந்து விலகிக் கொண்டனர் பேராதனை பல்கலைக்–கழக விரிவுரையாளர்கள் சங்கத்தினர்!**

"பேராசிரியர் அதுல சேனாரத்ன மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் தரம் பாராமல் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகம் எங்களுக்கு பாதுகாப்பான இடம் என்றுதான் இதுவரை நினைத்தோம். ஆனால் அது அப்படி இல்லை என்பதை இப்போது புரிந்து கொண்டோம்.

ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இந்த நேரத்தில் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு சட்டத்தில் நிலைநாட்டும் அமைப்புகள் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். இந்தச் சம்பவத்தில் கலைப்பீட மாணவர்களே ஈடுபட்டுள்ளனர் என்பது உண்மைகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான மாணவர்களை கலைப்பீடத்தில் தங்க வைக்க முடியாது. சட்டத்தை யாரும் கையில் எடுக்க முடியாது. இந்த மாணவர்கள் வெட்கப்பட வேண்டும்.

தங்களுக்கு கல்வியை போதிக்கும் ஆசான்களை இவ்வாறு நடத்துவது மிக மோசமான ஒரு செயற்பாடாகும். பல்கலைக்கழகத்தில் இதுபோன்ற பயங்கரவாத நடவடிக்கைகளை இனிமேல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனுமதிக்க முடியாது".


இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கலைப்பீடத்தின் அனைத்து ஆசிரியர்களும் கலந்துரையாடி 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை அனைத்து கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளில் இருந்து விலகுவது என அங்கு தீர்மானம் எடுத்தனர்.

"தாக்குதலில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். அரசியல் கட்சியில் உறுப்பினராக இருப்பதற்காக யாரும் சட்டத்தை கையில் எடுக்க முடியாது" எனவும் சங்கத்தின் தலைவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

எம்.ஏ.அமீனுல்லா...

# சென்னையில் நடைபெறும் சர்வதேச புத்தக கண்காட்சியில் தெளிவத்தை ஜோசப் எழுதிய சிறுகதை தொகுதி வெளியீடு



தமிழக எழுத்தாளர்களின் படைப்புகளே மலையகத்தில் 1960களில் அதிகம் செல்வாக்கு செலுத்திய நிலையில், மலையகம் மண்வாசைனை நிறைந்த படைப்புக்களையும், உலகம் திரும்பிப் பார்க்காத நாடற்ற இந்திய வம்சாவளி மலையக மக்களின் துன்ப துயரங்களையும் தனது எழுத்துக்கள் மூலம் நமது வாசகர்கள் முன்பாக வைப்பதில் அமரர் தெளிவத்தை ஜோசப் முன்னோடியாக திகழ்ந்தார்.

மலையகம் எனும் உணர்வுக்கு தமது எழுத்தாற்றலால் பலர் உருவம் கொடுக்க முற்பட்டனர். அந்த வகையில் முகிழ்த்தெமுந்தவர்களில் மலையக இலக்கியத்தின் அடையாளத்துக்கும் தனித்துவத்துக்கும் அணிசேர்ப்பவராக ஒரு முதன்மையாளராக தெளிவத்தை ஜோசப் இனங்காணப்படலானார்.

1960 களில் தமிழகத்தில் வெளிவந்த 'உமா' எனும் சஞ்சிகைக்கு தெளிவத்தை எழுதிய 'வாழைப்பழத்தோல்' என்ற சிறுகதையே அவரது முதல் சிறுகதையாக பதிவாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து இலங்கையின் முன்னணி பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் மற்றும் தமிழக கலைமகள் சஞ்சிகையிலும் எழுத ஆரம்பித்தார்.

1974 வீரகேசரியில் தொடராக வெளிவந்த 'காலங்கள் சாவதில்லை' எனும் நாவல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்து தெளிவத்தை ஜோசப் எனும் நாமத்தை இலக்கிய உலகில் ஆழமாக பதிவு செய்தது. அந்நாவல் சாகித்திய மண்டல பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டதில் இவருக்கான ஒரு அங்கீகாரத்தையும் வழங்கியது. யாழ் பல்கலைகழகத்தில் பொருளியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய மு. நித்தியானந்தன் தெளிவத்தையின் சிறுகதைகளைத் தொகுத்து (1979) 'நாமிருக்கும் நாடே' என்ற தொகுதியை வெளியிட்டார். ஆச்சிறுகதைத் தொகுதி அந்த ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருதினையும் தனதாக்கிக் கொண்டது. கே. வி. எஸ். மோகன் வெளியிட்ட கதம்பம் சஞ்சிகைகளில் வெளிவந்த 'பாலாயி' என்ற இவரது குறுநாவல் குறிப்பிடத்தக்க மற்றுமோர் படைப்பாகும்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் 1962 இல் ஆரம்பித்த போது உதவிச் செயலாளராகச் தெரிவு செய்யப்பட்ட இவர், தலைவராகப் பணியாற்றி என். எஸ். எம். இராமையாவின் மறைவைத் தொடர்ந்து 1989 முதல் தனது இறுதி மூச்சுவரை மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக செயலாற்றியிருந்தார். சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், இலக்கிய ஆய்வாளர் என்று பல்திறப்புலமையுடன் இறுதிவரையில் இலக்கியப் பணியில் தனனை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட இவர் ஒரு ஆவணச் சேகரிப்பாளராக பல்வேறு இலக்கிய ஆவணங்களைத் திரட்டிவைத்திருந்ததுடன் அவ்வப்போது இலக்கியப் பத்திகளையும் பத்திரிகைகளில் எழுதினார்.அத்தகைய அயராத இலக்கியப் பங்களிப்புக்காக பல்வேறு பல்கலைக்கழகங்கள் , இலக்கிய அமைப்புக்கள் பல விருதுகளை தெளிவத்தைக்கு வழங்கி கௌரவித்தன.

'மலையக சிறுகதை வரலாறு' எனும் ஆய்வுக்கட்டுரை தெளிவத்தையின் கனதிமிக்க இலக்கியப் பங்களிப்பை கூறிநிற்கும் மற்றுமோர் ஆவணமெனலாம். இத்தனைக்கும் மேலாக அவர் ஒரு நடமாடும் நூலகமாக விளங்கினார்.

தெளிவத்தையுடனான எனது முதல் தொடர்பு 1960 களில் முற்பகுதியில் கண்டியில் செய்தி ஆசிரியர் ராமு நாகலிங்கம் இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஏற்பட்டது.

தெளிவத்தையின் 88 ஆவது பிறந்த தின நிகழ்வை 2022 பெப்ரவரி மாதம் காலஞ்சென்ற பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தலைமையில் முன்னாள் அமைச்சர் பி. பி. தேவராஜ் முன்னிலையில் நானும் நண்பர் இலட்சுமணன் வேலு அவர்களும் இணைந்து கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தோம்.

தெளிவத்தையின் அறுபது சிறுகதைகளை தொகுத்து வெளியிடும் பணிகளில் நானும் லண்டனில் வாழும் மு.நித்தியானந்தனும் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாட்களிலேயே அவரின் மரணம் நிகழ்ந்தது. அவர் வாழும் போதே அந்த தொகுப்பை வெளியிட எண்ணியிருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது சாத்தியமாக வில்லை. எனினும் நண்பர் ஒளிவண்ணனால் வடிவமைக்கப்பட்ட சுமார் 620 பக்கங்கள் கொண்ட மாதிரி புத்தகத்தை கணணி மென்பதிவில் வாசித்து மகிழ்ந்தார் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்.

எதிர்வரும் ஜனவரியில் சென்னையில் நடைபெறும் சர்வதேச புத்தக கண்காட்சியில் தெளிவத்தை ஜோசப்பின் புதிய சிறுகதை தொகுதியை வெளியிட இருக்கின்றோம். இதுவரை வெளிவராமல் இருக்கும் தெளிவத்தையின் படைப்புக்களை நூலுருவில் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நாம் தொடர்ந்து முன்னெடுப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

எச்.எச்.விக்ரமசிங்க...

# ஆண்களைப் போன்று பெண்களுக்கும் சமூகத்தில் சமஉரிமை வழங்கும் ஈரான்

இஸ்லாமிய போதனைகள், சட்டங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள் எந்தவொரு சமூகத்திலும் வாழும் பெண்களுக்கு கண்ணிய மானதும் மரியாதைக்குரியதுமான வாழ்க்கைக்கான முழுமையான அமைப்பை வழங்குகின்றன. பெண்கள் மகள்களாகவும் சகோதரிகளாகவும் நேசிக்கப்படுகின்றனர். தாய் மற்றும் மனைவியாக மிகவும் கண்ணியப்படுத்துவதோடு ஒரு குடும்பத்தின் அச்சாணியாகத் தங்கள் பங்கைச் செயல்படுத்தவும் அதிகாரம் பெற்றவர்களாக விளங்கவும் இடமளிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்களுடன் ஒப்பிடும்போது இஸ்லாமிய அமைப்பில் பெண் குழந்தைகள் அதிக இரக்கத்துடனும், அன்புடனும், அக்கறையுடனும் நடத்தப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் இயற்கையான உடல், உள மற்றும் உணர்ச்சித் தேவைகளில் சிறப்புக் கவனம் செலுத்தி ஆண்களைப் போல் கல்வி கற்கிறார்கள். அவர்களின் உயிரியல் மற்றும் உளவியல் தேவைகளை கருத்தில் கொண்டு, அவர்கள் பெரியவர்களாக தங்கள் எதிர்கால பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகளுக்கு தயாராக உள்ளனர். அவர்களது கல்விக்கு வரம்புகள் மற்றும் தடைகள் கிடையாது. மேலும் ஈரான் இஸ்லாமிய குடியரசில் உயர்கல்வியில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ளனர்.



மருத்துவர்கள், பொறியியாளர்கள் போன்ற திறமையான துறைகளில் பெண்கள் நிபுணர்களாகத் திகழவும் இஸ்லாமிய அமைப்பில் சமமான வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் சிறந்த ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பேராசிரியர்களாகவும் அறிவுஜீவிகளாகவும் பங்களிக்கின்றனர். சமூக, கலாசார மற்றும் அரசியல் களங்களில் முக்கிய தலைமைப் பாத்திரங்களை வகிக்கவும் அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இஸ்லாத்தின் போதனைகளின் அடிப்படையில் பெண்பிள்ளைகளும் தாய்மார்களும் உயர் மதிப்பு பெற்றுள்ளனர். பெண்களுக்கு சொத்துரிமை, வாரிசுரிமை, வணிகம் மாததிரமல்லாமல் தொழில் செய்யவும் ஆண்களைப் போலவே அறிவைப் பெறவும் பெண்கள் உரிமை பெற்றுள்ளார்கள். அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களைத் திருமணத்திற்கும் கட்டாயப்படுத்த முடியாது, விவாகரத்து உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிராகக் குற்றங்கள் இழைப்போர் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். மேலும் அவர்கள் தங்கள் ஆண் சகாக்கள் போன்றே அனைத்து சமூக செயல்களிலும் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டனர்.

ஈரானின் இஸ்லாமிய சமூகத்தில் பெண்கள் தொழில்நுட்பத்துறைகள் முதல் அரசியல் வரை அனைத்துத் துறைகளிலும் மிகவும் சுறுசுறுப்பாக உள்ளனர். நவீன ஈரானிய சமுதாயத்தின் சமூக மற்றும் கலாசார சூழல் பெண்கள் எந்த துறையிலும் உயர்கல்வியை தொடர உதவுகிறது. உண்மையில் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின் முழுமையான அமைப்பை உருவாக்கிய ஒரே நாடு ஈரான்.

ஈரானில் இஸ்லாமிய சட்டங்களின்படி பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் ஆண்களுக்கு நிகரான சம்பளமும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. மேலும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 9 மாதங்கள் முழு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படுகிறது. அதேசமயம் இரட்டைக் குழந்தைகள் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருந்தால் குறிப்பிட்ட விடுமுறை 1 வருடம் ஆகும். மேலும் அவர்கள் தங்கள் குழந்தைக்கு 1 வருடம் தாய்ப்பால் கொடுக்க தினமும் 2 மணிநேரமும், அதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் வரை தினமும் 1 மணிநேரமும் வழங்கப்படுகிறது. தந்தைக்கு குழந்தை பிறந்தவுடன் 10 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படுகிறது. மேலும் இரட்டைக் குழந்தைகள் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருந்தால் விடுமுறை ஒரு மாதம் வரை நீடிக்கும்.

பாலினம் குறித்த இஸ்லாத்தின் சட்டங்கள் போதனைகள் மற்றும் நடைமுறைகளுக்கான காரணத்தை முழுமையாக நியாயப்படுத்துகின்றன. புனித குர்ஆன் மற்றும் ஹதீஸ் அடிப்படையிலான பகுத்தறிவின்படிஈரான் அதன் நவீன புரட்சிகர மற்றும் முற்போக்கான சமுதாயத்தில் பெண்களின் உரிமைகள் பற்றிய வழிகாட்டுதல்களை விளக்கி செயல்படுத்தியுள்ளது. பெண்கள் தங்கள் திறமைகள், ஆர்வங்கள், பாத்திரங்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அதிகாரம் பெறுகிறார்கள். அவர்கள் இன்றைய ஈரானில் கலாசார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் சட்டரீதியாகவும் மிக உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டுள்ளனர். ஈரானில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இஸ்லாத்தின் போதனைகளின்படி பெண்களின் உரிமைகள் நிறுவப்பட்டுள்ளன.

நவீன மேற்கத்திய வாழ்க்கை முறையானது பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரிக்கவும் எல்லா இடங்களிலும் அதிகரித்து வரும் வணிகங்களை நடத்துவதற்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் விளம்பரங்கள், திரைப்படங்கள் மற்றும் ஊடகங்களில் பெண்களின் உடல் அங்கங்களை மற்றும் நிர்வாணம் ஆகியவை பெண்களுக்கு பேரழிவு தரும் விளைவுகளுக்கு வழிவகுத்துள்ளன.

மேற்குலகில் வேலை நிலைமைகளில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு, பாலியல் துன்புறுத்தல்கள், கொடுமைப்படுத்துதல் பணியிட சூழல், நியாயமற்ற சம்பளம், அடக்குமுறையான மகப்பேறு விடுமுறை நிலைமைகள் மற்றும் மிகக் குறைந்த சலுகைகள் ஆகியவை சமூகத்தின் கலாசார மற்றும் சட்ட அமைப்பின் ஒரு பகுதியாகவே உள்ளது.

டொக்டர் ஷெர்வின் ஷெர்மா...

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாத்தின் பார்வையில் இளமைப் பருவம்

வாலிபம் என்பது மனித ஆளுமை வளர்ச்சிக் கட்டங்களில் மிக முக்கியமானதொரு கட்டமாகக் கருதப்படுகின்றது. அல்லாஹ்வின் அற்புதமான பல்வேறு வகைப் பாக்கியங்கள் வாய்க்கப்பெற்ற வசந்த காலமே கட்டிளமைப் பருவமாகும். சிறந்த உடல் பலமும், உளப்பலமும் உச்சளவில் சங்கமிக்கும் பருவமும் இது.

இவ்வாறு துடிப்பும், உற்சாகமும் நிறைந்த, உத்வேகமாக செயற்படுகின்ற எதிர்காலத்தைப் பற்றி இலட்சியக் கனவுகள் காண்கின்ற, மனதிற்கு இதமானதும் மகத்தானதுமான பருவமாக இளமைப் பருவம் உள்ளது. அதனால்தான் இளைஞர்கள் ஒரு சமூகத்தின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படுகின்றார்கள்.

அல்குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் இளைஞர்கள் பற்றியும் அவர்களது செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. அற்புதமான அழகும், இளமைத் துடிப்புமிக்க இளைஞராக இருந்த யூசுப் (அலை) அவர்கள் தனது மனோ இச்சையின் தூண்டுதலுக்கு ஆளாகாமல் கீழ்த்தரமான உணர்வுகளுக்கு எதிராகப் போராடி தனது கற்பொழுக்கத்தைப் பாதுகாத்துக் கொண்டார்கள். அந்த வரலாற்றை சூறா யூசுப் மிகத் தெளிவாக விளக்குகின்றது. யாரும் அறிந்திரா வண்ணம், மிக இலகுவாகத் தன் மனோ இச்சைக்கு வழிபட்டு ஆசையை தீர்த்துக் கொள்ள வாய்ப்பிருந்தும், அல்லாஹுதஆலா தனக்குத் தந்திருக்கின்ற இந்த வாலிபப் பருவமும், அதன் பலமும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைந்து கொள்வதற்கான முதலீடாகவே அமைய வேண்டும் என்பதில் யூசுப் (அலை) அவர்கள் உறுதியாக இருந்தார். கீழ்த்தரமான ஆசைகளுக்கு கட்டுப்பட்டு அற்ப இன்பத்தை அடைவதை விட காலமெல்லாம் சிறைவாசம் அனுபவிப்பது சிறப்பானது என அவர் எடுத்துக்கூறினார்.

இவ்வாறு தன் கட்டிளமைப் பருவத்தையும், அதன் அருட்கொடைகளையும் வீணடிக்காமல், இப்பருவத்தில் ஆர்ப்பரித்தெழுகின்ற தீய உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அல்லாஹ் விரும்புகின்ற பிரகாரம் தனது இளமையைக் கழிப்பவன் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு இயம்பினார்கள்.

**'எந்த நிழலும் இல்லாத நாளை மறுமை நாளில் ஏழு கூட்டத்தினருக்கு அல்லாஹ் அர்ஷின் நிழலைக் கொடுக்கின்றான். அதில், தனது வாலிபத்தை அல்லாஹ்வின் வணக்க வழிபாட்டில் கழித்த ஒரு மனிதன்'**

**(ஆதாரம் அபூதாவுத்)**

இது அல்லாஹுதஆலா தனது வாலிபத்தை முறையாகக் கழித்த ஒரு வாலிபனுக்கு கொடுக்கின்ற அதிஉச்ச கௌரவமாகும். எந்த ஒரு சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் பெரும்பாலும் அச்சமூகத்தின் வாலிபர்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது என்ற உண்மையை உலக வரலாறு எடுத்தியம்புகின்றது. குறிப்பாக இஸ்லாம் 23 ஆண்டு காலப்பகுதிக்குள் ஏற்படுத்திய மாபெரும் சமூகப் புரட்சியின் முகவர்களாவும், அதன் முன்னணி அங்கத்தவர்களாகவும் இருந்தவர்கள் வாலிபர்கள் தான் என்பதை இஸ்லாமிய வரலாற்றைப் படிப்பவர்கள் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்வார்கள்.

இஸ்லாம் அறிமுகமாகிய ஆரம்ப காலப் பகுதியில் அதற்கு ஏற்பட்ட கடுமையான சவால்களும் கொடுமையான சோதனைகளும் இஸ்லாத்தை பகிரங்கமாகப் பிரசாரம் செய்வதிலும், இஸ்லாத்தை தழுவிய ஒருவர் தனது இஸ்லாத்தை வெளிப்படுத்துவதிலும் மிகப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அச்சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களுக்காக தனது வீட்டைக் கொடுத்து அங்கிருந்து அவர்களது பிரசாரத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டை செய்து கொடுத்த அர்கம் பின் அபில் அர்கம் (றழி) அவர்கள் வெறும் 16 வயது நிரம்பிய வாலிபராகவே இருந்தார். ஷதாறுல் அர்க்கம் என்று அறியப்படுகின்ற அவரது வீடு இஸ்லாமிய தஃவா வரலாற்றின் மிகப் பெரும் சான்றாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது.

எகிப்து, சிரியா, ஈராக், வட ஆபிரிக்கா, மத்திய ஆசியா போன்ற பிரதேசங்களை வெற்றி கொள்வதிலும், ரோம், பாரசீக ஆதிக்கத்தை முறியடித்து இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்புவதிலும் இளைஞர்களின் பங்களிப்புமிகக் காத்திரமானது.

வட ஆபிரிக்காவை வெற்றி கொண்ட உக்பா பின் நாபிஃ 18 வயது நிரம்பியவராகவே இருந்தார். கொன்ஸ்தாந்தி நோபிள், ஸ்பெயினூடாக ஐரோப்பாவை இஸ்லாமிய வெற்றிக்கொடியின் கீழ் கொண்டு வரப் புறப்பட்ட தாரிக் பின் ஸியாத் 17 வயதுடையவராகவே இருந்தார்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஒரு சமூகத்தைச் சுமக்க வேண்டிய வாலிபர்கள் அச் சமூகத்தின் மிகப் பெரும் சுமையாக மாறி வருகின்றார்கள். உலகமயமாக்கல் ஏற்படுத்தியுள்ள சூழல் மாற்றங்களால் மிக மோசமான பாதிப்புக்குள்ளாகி இருப்பவர்கள் இளைஞர்கள் தான். நெஞ்சுரங் கொண்டவர்களாக இருக்கவேண்டிய வாலிபர்கள் கோழைகளாக மாறவும் உலகமயமாக்கல் துணை போயிருக்கின்றது என்றுதான் கூற வேண்டும். குறிப்பாக ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள் குற்றங்கள் உள்ளிட்ட பல்விதமான தவறான பழக்கவழக்கங்களும் நடத்தைகளும் இளைஞர்கள் மத்தியில் பரவுவதற்கு இது பெரிதும் உதவியுள்ளது.

இந்நிலையில் முஸ்லிம் சமூகத்திலுள்ள இஸ்லாமிய நிறுவனங்கள் இளைஞர்களை நெறிப்படுத்துவதற்குத் தேவையான காத்திரமான பங்களிப்புக்களைச் செய்ய வேண்டும். இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் முறையான வழிகாட்டல்களை செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்நிறுவனங்களையே சாரும். குறிப்பாக இளைஞர்களின் ஆரோக்கியமான ஆளுமை வளர்ச்சிக்கு சவாலாக அமையும் விடயங்கள் பற்றி பெற்றோர்களுக்கும் இளைஞர்களுக்கும் அறிவூட்டி வழிகாட்ட வேண்டும். அதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடாத்த வேண்டும். அத்தோடு இளைஞர்களின் நெறிபிறழ்வுக்கான காரணிகளை சரியாக அடையாளங்கண்டு, அவற்றில் இருந்து அவர்கள், தங்களைத் தூரமாக்கிக் கொண்டு செயல்படும் வண்ணம் மாற்று உபாயங்களை அவர்களுக்கு செய்து கொடுக்க வேண்டும். குறிப்பாக, வாலிபர்கள் அவர்களது ஓய்வு நேரங்களை முறையாக கழிப்பதற்கான ஏற்பாட்டை செய்து கொடுப்பது அவசியம்.

அவற்றில் வாலிபர்களை வாசிப்பு பழக்கமுள்ளவர்களாக மாற்றுவதற்கான ஏற்பாட்டை செய்தல். இதற்காக சகல வசதிகளைக் கொண்ட நூல் நிலையங்களை அமைத்து, வாலிபர்கள் அதன் பக்கம் ஈர்க்கப்படும் வகையில் நிகழ்ச்சி நிரல்களை வடிவமைத்து கொடுத்தல்.

இளைஞர்களை சோம்பேறிகளாக மாற்றும் செயற்பாடுகளிலிருந்து அவர்களை விடுவித்து பலசாலிகளாகவும், உடல் ஆரோக்கியமுள்ளவர்களாகவும் மாற்றுவதற்காக இஸ்லாமிய ஷரீஆவின் எல்லைக்குட்பட்ட விளையாட்டுகளில் அவர்களை ஈடுபடச் செய்தல். இதற்காக நவீன வசதிகளைக் கொண்ட விளையாட்டு மைதானங்களையும், விளையாட்டு உபகரணங்களையும் தயார்படுத்திக் கொடுத்தல். வாலிபர்களை சமூக சேவைகளில் ஈடுபடுத்தி, சமூக கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்று செயல்படுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல், இதற்காக சமூகம் சார்ந்த விவகாரங்களிலும், பொதுப் பணிகளிலும் அவர்களை முன்னிலைப்படுத்தி அறிவும், அனுபவமுள்ள பெரியோர்களை அவர்களுக்கான ஆலோசகர்களாகவும், நெறியாளர்களாகவும் செயற்படச் செய்தல்,

இளைஞர் ஒன்றுகூடல்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு முஸ்லிம் இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி உணர்த்தப்பட்டு, அவர்களது இஸ்லாமிய தனித்துவ அடையாளங்கள் பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை சமூக நிறுவனங்கள் தொடர்ச்சியாக செயற்படல் என்பவற்றைக் குறிப்பிட்டுக்கூற முடியும்.

இவ்வாறான ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்வதன் மூலமாகவே இஸ்லாமிய தனித்துவ அடையாளங்களுடன் மிளிரக்கூடிய பண்பட்ட ஒரு இளைஞர் சமூகத்தை உருவாக்க முடியும். அது நாட்டுக்கும் சமூகத்திற்கும் பயனளிக்கும் இளைஞர் சமூகமாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.&
PhD (International Islamic university, Malaysia)

# நோய்களைத் தவிர்த்துக் கொள்ளும் வழிமுறைகள்

இஸ்லாம் தொற்று நோய் உள்ளிட்ட எல்லா வகையான நோய்களின் தாக்கங்கள் தொற்றுக்களில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளது.

அந்த வகையில் **ஒரு தடவை உமர் (ரழி) அவர்கள் மக்களின் நிலையை ஆராய்வதற்காக சிரியா நாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள். சர்ஃக் எனும் இடத்தை அடைந்தபோது மாகாணப் படைத் தளபதிகளான அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரழி) அவர்களும் அவர்களின் நண்பர்களும் உமர் (ரழி) அவர்களைச் சந்தித்து சிரிய நாட்டில் கொள்ளைநோய் பரவியுள்ளது என்று தெரிவித்தனர்.**

**அதற்கு உமர் (ரழி) அவர்கள், 'ஆரம்பகால முஹாஜிர்களை என்னிடம் அழைத்து வாருங்கள்' என்று சொல்ல, அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். 'சிரியா நாட்டில் தொற்று நோய் பரவியுள்ள காரணத்தால் அங்கு போகலாமா? அல்லது மதீனாவுக்கே திரும்பிச் சென்றுவிடலாமா?' என்று ஆலோசனை கேட்டார்கள். இது தொடர்பாக முஹாஜிர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அவர்களில் சிலர், 'நாம் ஒரு நோக்கத்திற்காகப் புறப்பட்டுவிட்டோம். அதிலிருந்து பின்வாங்குவதை நாங்கள் உசிதமாகக் கருதவில்லை' என்றனர். வேறு சிலர், 'உங்களுடன் மற்ற மக்களும் நபித்தோழர்களும் உள்ளனர். அவர்களையெல்லாம் இக்கொள்ளை நோயில் தள்ளிவிடுவதை நாங்கள் சரியென்று கருதவில்லை' என்று கூறினர். அப்போது உமர் (ரழி) அவர்கள், 'நீங்கள் போகலாம்' என்று சொல்லிவிட்டுப் பிறகு, 'மதீனாவாசிகளான அன்சாரிகளை அழைத்து வாருங்கள்' என்று சொல்ல, அவர்கள் அழைத்து வரப்பட்டனர். அவர்களிடம் உமர் (ரழி) அவர்கள் ஆலோசனை கேட்டார்கள். அவர்களும் முஹாஜிர்கள் வழியிலேயே சென்று அவர்களைப் போன்ற கருத்து வேறுபாடு கொண்டார்கள்.**

**அப்போதும் உமர் (ரழி) அவர்கள், 'நீங்கள் போகலாம்' என்று கூறிய பிறகு, 'மக்கா வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டில் (மதீனாவுக்கு) ஹிஜ்ரத் செய்துவந்த குறைஷிப் பெரியவர்களில் யார் இங்கு உள்ளனரோ அவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள்' என்று சொல்ல, அவர்கள் அழைத்து வரப்பட்டனர். அவர்களில் எந்த இருவருக்கிடையேயும் கருத்து வேறுபாடு எழவில்லை. அவர்கள் அனைவரும், 'மக்களுடன் நீங்கள் திரும்பிவிட வேண்டும். அவர்களை இக்கொள்ளை நோயில் தள்ளிவிடக் கூடாது எனக் கருதுகிறோம்' என்றனர். அதன் பின்னர் உமர் (ரழி) அவர்கள் மக்களிடையே, 'நான் காலையில் என் வாகனத்தில் மதீனா புறப்படவிருக்கின்றேன். நீங்களும் வாகனத்தில் புறப்படுங்கள்' என்று அறிவித்தார்கள்.**

**அப்போது அபூஉபைதா (ரழி) அவர்கள், 'அல்லாஹ்வின் விதியிலிருந்து வெருண்டோடுவதற்காகவா ஊர் திரும்புகின்றீர்?' என்று கேட்க, உமர் (ரழி) அவர்கள், 'அபூஉபைதா! இதை உங்களைத் தவிர வேறேவரேனும் சொல்லியிருந்தால் நான் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். ஆம், நாம் அல்லாஹ்வின் ஒரு விதியிலிருந்து இன்னொரு விதியின் பக்கமே வெருண்டோடுகிறோம். உங்களிடம் ஓர் ஒட்டகம் இருந்து, அது ஒரு பக்கம் செழிப்பானதாகவும் மறுபக்கம் வறண்டதாகவும் உள்ள இரு கரைகள் கொண்ட ஒரு பள்ளத்தாக்கில் இறங்கிவிட்டால், செழிப்பான கரையில் நீங்கள் அதை மேய்த்தாலும் அல்லாஹ்வின் விதிப்படிதான் அதை நீங்கள் மேய்க்கிறீர்கள். வறண்ட கரையில் நீங்கள் அதை மேய்த்தாலும் அல்லாஹ்வின் விதிப்படிதான் அதை நீங்கள் மேய்க்கிறீர்கள் அல்லவா?' என்று கேட்டார்கள்.**

**அச்சமயம், தமது தேவையொன்றுக்காக வெளியே சென்றிருந்த அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரழி) அங்கு வந்தார்கள். அவர்கள், இது தொடர்பாக என்னிடம் ஒரு விளக்கம் உள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'ஓர் ஊரில் கொள்ளைநோய் பரவியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அந்த ஊருக்கு நீங்களாகப் போகாதீர்கள். நீங்கள் ஓர் ஊரில் இருக்கும்போது அங்கு கொள்ளைநோய் பரவினால் அதிலிருந்து வெருண்டோடுவதற்காக அவ்வூரைவிட்டு வெளியேறாதீர்கள்' என்று சொல்ல நான் செவியுற்றுள்ளேன் என்று கூறினார்கள். உடனே உமர் (ரழி) அவர்கள், (தமது முடிவு நபி (ஸல்) அவர்களின் வழி காட்டுதலுக்கேற்பவே அமைந்திடச் செய்ததற்காக அல்லாஹ்வைப் புகழ்ந்துவிட்டுத் திரும்பிச் சென்றார்கள்.**

***(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)***

கொள்ளை நோய் பரவுவதைத் தடுப்பதற்காக இஸ்லாம் கூறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை இதுதான். அதே சமயம் இஸ்லாம் மனிதர்களிடையே உருவாக்க விரும்பும் தூய்மை, சுத்தம், ஒழுக்க விழுமங்கள், நல்ல உணவு பழக்கவழக்கங்கள், ஆரோக்கியகரமான முன்னேற்பாடுகள், மன நிம்மதி தரும் வணக்க வழிபாடுகள் ஆகிய அனைத்தும் மனிதர்களுடைய ஆரோக்கியத்துடன் தொடர்புடையதாகவே இருக்கின்றது என்பதையும் இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பலவிதமான நோய்த் தொற்றுகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு 'உளூ' எனும் உடற்சுத்தம், பல்வேறு வடிவங்களில் உதவிகரமாக அமைகிறது.

தொற்று நோய் பரவாமல் தடுக்க இன்றைய மருத்துவ உலகம் அனைத்துக்கும் முதலாவதாக தூய்மையையே பரிந்துரை செய்கிறது. அதுவும் தண்ணீரால் உறுப்புகளைச் சுத்தம் செய்வதை வலியுறுத்துகிறது. தண்ணீரால் உறுப்புகளைச் சுத்தம் செய்வதையே இஸ்லாம் 'உளூ' என்ற பெயரில் அழைக்கிறது.

ஒரு முஸ்லிம் எப்போதும் உடற்சுத்தம் உடையவனாக இருக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது என்பதையும் மறக்க வேண்டாம். ஓர் இடத்தில் தொற்று நோய் பரவிவிட்டால் அது வேறோரு இடத்திற்குப் பரவாமல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம். தொற்றுநோய்க்கு உள்ளாகி இருப்பவர் மற்றவர்களுடன் கலந்திருத்தல் கூடாது. அது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள், **'நோயுற்ற மனிதரை ஆரோக்கியமானவருக்குப் பக்கத்தில் கொண்டு வரவேண்டாம்' என்று கூறினார்கள். (ஆதாரம் புகாரி, முஸ்லிம்).**

அதேநேரம் **'நோயுற்ற கால்நடைகள் நோயற்ற கால்நடைகளுக்கு அருகில் சென்று தண்ணீர் குடிக்க வைப்பதையும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்' (ஆதாரம் புஹாரி).**

ஆகவே நோய்களை தவிர்த்துக்கொள்வதற்காக இஸ்லாமிய வழிகாட்டல்களை கடைபிடித்து பயனடைவோம்.

அப்துர் ரஹ்மான்...

# பிள்ளைகளின் முக்கியத்துவம்

பிள்ளைகள் வளரும் பருவத்தில் அவர்களுக்கு ஆடை, உணவு, அரவணைப்பு தரும் அதே நேரத்தில் ஒரு சிற்பியைப் போன்று அவர்களுடைய செயல்கள் ஒவ்வொன்றையும் சீர்படுத்துவதில் அதிக கவனமும், அக்கறையும் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்மில் பலரும் நம்மிடம் இல்லாதவற்றை எண்ணி, எண்ணி புலம்புபவர்களாக இருக்கின்றனர். நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் என்னவெல்லாம் இருக்கிறது என்று அவர்களுடன் நம்மை ஒப்புமைப்படுத்திப் பார்ப்பதால் நமக்கென அல்லாஹ் அருளியுள்ளவைகளின் அருமை, பெருமைகளை அறியாதவர்களாக இருக்கிறோம். அதனாலேயே அல்லாஹ் நமக்கென அருளியுள்ளவற்றுள் மிகச் சிறந்த செல்வமான குழந்தைச் செல்வத்தைப் போற்றிக்கொண்டாடத் தவறிவிடுகிறோம்.

மனிதர்கள் அனைவருக்கும் பிள்ளைச்செல்வம் கிடைப்பதில்லை. அல்லாஹ் தான் நாடியவர்களுக்கே குழந்தைச் செல்வத்தை அளிக்கிறான். சிலருக்கு இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அருளியது போன்று ஆண் மக்களாகக் கொடுக்கிறான், அல்லது லூத் (அலை) அவர்களுக்கு அளித்தது போன்று பெண் மக்களாகக் கொடுக்கிறான். இன்னும் சிலருக்கோ நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கியது போன்று ஆண் மக்களையும், பெண் மக்களையும் கலந்து கொடுக்கிறான்.

எனினும், மக்கள் ஆண் பிள்ளைகளையே விரும்புபவர்களாக இருக்கின்றனர். ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் உள்ள குடும்பங்களில் சில பெற்றோர் மகன்களுக்குத் தரும் முக்கியத்துவத்தை, பெண் மக்களுக்குத் தருவதில்லை. இன்னும் அல்லாஹ் நாடியதாலேயே நம்மை, மனிதர்களாகப் படைத்துள்ளான். இவ்வுலகில் உயர்ந்த படைப்பாக மனிதர்கள் கருதப்படுகிறார்கள். மனிதப் படைப்பைப் பற்றி அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு சொல்லிக் காட்டுகிறான்.

**'நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகான அமைப்பில் படைத்திருக்கிறோம்'.**

**(அல்குர்ஆன் 95:4).**

இன்னும் நம்மில் பலர் நம்முடைய குழந்தைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் பிரார்த்தனை செய்பவர்களாக இருக்கிறோம். ஆனால் அதையும் தாண்டி, மறுமை நாள் வரை நம்மிலிருந்து வரக்கூடிய நம்முடைய சந்ததியினர் அனைவருக்கும் 'துஆ' (பிரார்த்தனை) செய்பவர்களாக இருக்க வேண்டும்.

ஒருவர் தன் மனைவியிடம் நெருக்கமாக இருக்கும் நேரத்தில் 'பிஸ்மில்லாஹ், இறைவா, சைத்தானை எங்களிடமிருந்து விலகி இருக்கச் செய். நீ எங்களுக்கு அளிக்கும் சந்ததியினரிடமிருந்தும், சைத்தானை விலகியிருக்கச் செய்' என்று பிரார்த்தனை புரிந்து, பிறகு அவர்களுக்குச் சந்ததி அளிக்கப்பட்டால், அந்தச் சந்ததிக்கு சைத்தான் தீங்கு செய்யமாட்டான்' என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பெற்றோர்கள் தங்களுக்கு குழந்தைகள் பிறப்பதற்கு முன்பாகவே அவர்களுக்காக 'துஆ' செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஜக்கரியா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் தனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியை தங்களின் முதுமைக்காலத்தில் கேட்டபொழுது, ஈஸா (அலை) அவர்களின் வருகையை முன்னறிவிப்புச் செய்யக்கூடியவரான யஹ்யா (அலை) அவர்களை, அல்லாஹ் மகனாக வழங்குகிறான்.

கருத்தரித்ததை அறிந்தவுடன் பெற்றோர் இருவரும் அக்குழந்தைக்காக 'துஆ' செய்ய வேண்டும். தாய்மைப்பேறு அடைந்தவர்கள், தொழுகைகளை விடாமல் தொழக்கூடியவர்களாகவும், குர்ஆனை ஓதக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். பொய், புறம் பேசாமல், நல்ல எண்ணங்களால் மனதை நிரப்புவதுடன், 'திக்ர்' செய்பவர்களாகவும் மாற வேண்டும். ஆறு மாதக்கருவாக சிசு இருக்கும் நிலையில் அதற்கு கேட்கும் சக்தியை அல்லாஹ் அளிக்கிறான்.

எனவே நம் குழந்தைகளுக்கு நல்லவற்றைக் கேட்கும் பாக்கியத்தை வழங்குவது நம் கையிலேயே இருக்கிறது. இறைவன் தன் திருமறையில், **'உங்களுடைய பொருள்களும், உங்களுடைய சந்ததிகளும் (உங்களுக்கு) ஒரு சோதனையாகவே உள்ளன. (இச்சோதனையில், நீங்கள் தேர்ச்சி பெற்றால் உங்களுக்கு) அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலி இருக்கின்றது' (அல் குர்ஆன் 64:15).**

செல்வத்தை அல்லாஹ்விற்கு விருப்பமான வழியில் செலவழித்து, பிள்ளைகளையும் அவன் விரும்பும்படி வளர்க்கும் பெற்றோர்களுக்கு அல்லாஹ்விடம் மகத்தான கூலி உள்ளது என்ற இவ் வசனத்தின் மூலம் பிள்ளைகளை வார்த்தெடுப்பதில் நாம் தேர்ச்சி பெற்றால் மறுமை நாளிலும் அல்லாஹ்வினால் நற்கூலி கொடுக்கப்படுவோம் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

மறுமையில் வெற்றி அடைவதற்கு பெற்றோர்கள் மட்டுமல்லாது, பிள்ளைகளும் தங்களின் அமல்களை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். சுவனத்திற்கு அனுப்பப்படும் பெற்றோர்களின், குறையற்ற அமல்களின் காரணமாக அல்லாஹ் அவர்களின் பிள்ளைகளையும் அவர்களுடன் சேர்த்து வைக்கக் கூடியவனாக இருக்கிறான். அதுபோலவே பிள்ளைகளின் நல்ல அமல்களின் பொருட்டு அவர்களுடன் சேர்த்து அவர்களின் பெற்றோர்களும் சுவனம் அனுப்பப்படுவதாக சொல்லப்படுகிறது.

நம் பிள்ளைகள் நம்முடைய அமானிதமாகவும் இருக்கிறார்கள். நம்மிடம் கொடுக்கப்பட்ட ஒரு அமானிதப்பொருளை எப்படி பத்திரமாக, கொடுத்தவரிடம் திருப்பிக்கொடுக்கிறோமோ, அதுபோன்று நம்முடைய மக்களை, அல்லாஹ்விடம் நன்மக்களாகத் திருப்பித்தரும் கடமையை பெற்றோர் இருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

குழந்தை வளர்ப்பு என்பது இலேசான காரியம் அல்ல. பிள்ளைகள் வளரும் பருவத்தில் அவர்களுக்கு ஆடை, உணவு, அரவணைப்பு தரும் அதேநேரத்தில் ஒரு சிற்பியைப் போன்று அவர்களுடைய செயல்கள் ஒவ்வொன்றையும் சீர்படுத்துவதில் அதிக கவனமும், அக்கறையும் எடுத்துக் கொள்ள வேண்டும். அன்பையும், கண்டிப்பையும் தேவைக்கேற்ப கொடுத்து, அவற்றுடன் இஸ்லாம் கூறும் நெறி முறைகளையும், விழுமியங்களையும் கற்பித்து வளர்க்க வேண்டும். பெற்றோர்கள் தான் பிள்ளைகளின் முதல் ஆசான் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஆகவே பெற்றோர்கள் சிறந்த ஆசிரியர்களைப் போன்று, மிகச் சிறந்த முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினால், அவர்கள் எதிர்காலத்தில் நல்ல மாணாக்கர்களாக, இம்மையிலும், மறுமையிலும் வெற்றி அடையக்கூடியவர்களாக மாறுவார்கள்.

பிந்த் இஸ்மாயீல்...

## ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு...

கோரியுள்ள ஜனாதிபதி அதற்கு மேலதிகமாகவே இந்த அறிக்கையையும் கோரியுள்ளார்.

சமூகத்தின் கௌரவத்துக்கு உரித்தான மகாநாயக்க தேரர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களை அசௌகரியத்திற்குள்ளாக்குவதை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளமுடியாதெனக்குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, அவ்வாறான சம்பவங்களுக்கு இடமளிக்கக்கூடாதென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அதேவேளை, மேற்படி சம்பவங்களின் பின்னணியில் செயற்படுபவர்கள் யார், அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யார், அவற்றுக்கு உறுதுணையாக செயற்படுபவர்கள் யார் என்றும் ஆராய்ந்து அதுதொடர்பிலான விபரங்களை தமக்குப் பெற்றுத்தருமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி அறிக்கை கிடைத்ததும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக விடுதிக்கு பொறுப்பானவரின் இல்லத்துக்கருகில் நடமாடிய மாணவர்கள் குழுவொன்று பெரும் சத்தமிட்டுள்ளதுடன் அதனைத்தொடர்ந்து விளையாட்டு மைதானத்துக்கருகே சென்று கூட்டம் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் அங்கிருந்து அவர்கள் கோஷங்களை எழுப்பி அச்சுறுத்தல்களை மேற்கொண்டுள்ளதாகவும் பல்கலைக்கழக விடுதி கட்டுப்பாட்டாளரான தேரரினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பில் ஊடகங்கள் சில செய்திகள் வெளியிட்டிருந்தன. அத்துடன் மாணவர் விடுதிகளில் பெரும் சத்தத்துடன் பாடல்களைப் பாடியுள்ளதுடன் அதனை நிறுத்துமாறு அவர்களுககு பணிப்புரைகள் வழங்கப்பட்ட போதும் அதற்கு கீழ்ப்படியாமல் அவர்கள் தொடர்ந்தும் செயற்பட்டதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க...

செயற்பாடுகளுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தென்னாபிரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ். ஈ. ஸ்சல்க் ஆகியோருக்குமிடையில் விசேட சந்திப்பொன்று நேற்று நீதி அமைச்சில் நடைபெற்றுது. அதன் போதே தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் இந்த சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நாட்டின் சட்டக் கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பிலும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் இனங்களுக்கிடையில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கு இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் நல்லிணக்க வேலைத்திட்டத்தை பாராட்டுவதாக தெரிவித்துள்ள தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர், அதற்கான செயற்பாடுகளை முறையாக முன்னெடுப்பதற்கு தமது நாட்டின் அனுபவம் மற்றும் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராகவுள்ளதாகவும் அதன்போது குறிப்பிட்டுள்ளார். நாட்டின் சட்டக் கட்டமைப்பு தொடர்பில் நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவினால் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டதுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை முறையாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அத்துடன் நாட்டின் சட்டக் கட்டமைப்பை பலப்படுத்துவதற்காக கடந்த சில மாதங்களில் 17 சட்டங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பொதுமக்கள் சேவைக்கே...

விஞ்ஞானபூர்வமான அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். ஆங்கிலேயர்கள் இந்நாட்டை ஆட்சி செய்த காலத்தில் பைனஸ் பயிர்ச்செய்கை இருக்கும்போதே தான் தேயிலையையும் பயிரிட்டனர். எனவே தவறான கருத்துக்களில் மாட்டிக் கொள்ளாதீர்கள். இதனால் பைனஸ் பயிர்ச்செய்கையை அகற்றுவதற்கு முன்னர் இது நீரேந்துப் பிரதேசங்களைப் பாதிக்கிறதா? என்பது தொடர்பில் விஞ்ஞானபூர்வமாக ஆராய்தல் வேண்டும்.

பைனஸ் பயிர்ச்செய்கையை நீக்கிவிட்டு டர்பன்டைன் பயிர்ச்செய்கையில் எதற்காக ஈடுபட்டீர்கள். டர்பைன்டைன் பயிர்ச்செய்கைக் காரணமாக நீரேந்துப் பிரதேசங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக இருந்தால் அப் பயிர்ச்செய்கையை நீக்கிவிடுங்கள்.

அரச அதிகாரிகள் திறமையாக செயல்பட வேண்டும். எனக்கு காரணங்கள் தேவையில்லை. அரச திணைக்களங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட வழியில்லை. அரசாங்கம் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

பெருந்தோட்டத் துறையில் சில அதிகாரிகள் சட்டக் கோவைகளை கேடயமாக வைத்துக்கொண்டு செயற்படுகின்றனர். 80 களில் இந்தச் சட்டத்தை தயாரிக்கும் போது இது குறித்து நான் கவனம் செலுத்தினேன்.

இப்பிரதேசத்திலுள்ள கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியபோது, ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக குறிப்பிடப்பட்டது. ஆசிரியர் நியமனங்களைப் பெற்று, ஓரிரு ஆண்டுகளில் அவர்கள் இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே நியமனம் பெற்று ஐந்து வருடங்களுக்கு இடமாற்றங்களை வழங்காமை தொடர்பில் கல்வியமைச்சும் மாகாண சபையும் இணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு புதிய காணிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டு அதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பதுளை மாவட்டத்தில் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக மஹியங்கனை பிரதேச வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக மாற்றுவதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும். அதேபோன்று, கிராதுருக்கோட்டையிலுள்ள சிறுநீரக மருத்துவமனையின் செலவுக்காக நிதியை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தியத்தலாவை ஆதார வைத்தியசாலை காரணமாக பண்டாரவளை வைத்தியசாலையின் அபிவிருத்தியில் பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் நாம் ஆராய்வோம்.

பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக மாற்றுவதற்கான பணிகள் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

பதுளை பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகளுக்கு அவசியமான அனைத்து காணிகளும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. இதன் எதிர்கால செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நமது நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டதனால், வெளிநாட்டு நன்கொடைகள் கிடைப்பது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பதுளை பொது வைத்தியசாலைக்கு அவசியமான உபகரணங்களைப் பெற்றக்கொள்வதற்கு அவசியமான பணத்தை வழங்குவதில் சற்று காலதாமதம் ஏற்படலாம்.

மேலும் இந்த வைத்தியசாலையில் சுற்றலாப் பயணிகளுக்காக அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் நாம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். அதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஹரீன் பெர்னாண்டோ, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான சாமர சம்பத் தசநாயக்க, தேனுக விதானகமகே, அரவிந்த குமார், பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் வடிவேல், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட மற்றும் மாவட்ட அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வர்த்தமானிக்கு நீதிமன்றம்...

நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இதையடுத்து முட்டைக்கான அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியை வழக்கு விசாரணை நிறைவடையும்வரை இடைநிறுத்தி இடைக்கால தடையுத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது.

இவ் வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரசன்ன டி சில்வா மற்றும் ப்ரேமா ஸ்வர்ணாதிபதி ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அச்சமயத்தில் நீதிமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைக்கும் போது நேற்று முன்தினம் கூடிய நுகர்வோர் சேவைகள் கவுன்சில் மூலம் வெள்ளை முட்டையின் விலையை 42 ரூபாவாகவும் சிவப்பு முட்டையொன்றின் விலையை 44 ரூபாவாகவும் உச்ச சில்லறை விலைகளாக தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார்.

அதன்போது, முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்ஸா தமது தரப்பினர் சார்பில் விடயங்களை முன்வைத்து மேற்படி தீர்மானத்துக்கிணங்க விலைகளை குறைப்பதில் முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் எவ்விதத்திலும் இணங்கபபோவதில்லையென்பதை குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையையும் விட குறைந்த விலையில் முட்டையை விற்பனை செய்வதென்பது எவ்விதத்திலும் முடியாதென்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி அந்த மனுவை விசாரணைக்கு எடுக்க உத்தரவிடுமாறும் கேட்டுக்கொண்டார்.

அதனை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்த வழக்கை பெப்ரவரி 06 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக தீர்மானித்தது.

அதேவேளை, கடந்த ஆகஸ்ட் 19 ஆம்திகதி நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியை வழக்கு விசாரணை நிறைவடையும்வரை இடைநிறுத்தி இடைக்கால தடையுத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

## தனித்துப் போட்டியிடுவது...

எடுப்போமென்று கூறவில்லையென தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேற்று தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக இல்லாமல், கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் அனைத்தும் தனித்தனியாக தேர்தல்களில் போட்டியடுவதென தீர்மானிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகிருந்தன. இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனிடம் கேட்ட போதே இவ்வாறு அவர் பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சி தனியாக போட்டிடுவதென்பது, தமிழரசுக் கட்சியின் தனி முடிவல்ல, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுடன் இணைந்தே இந்த முடிவை எடுக்க தீர்மானித்துள்ளோம்.

தற்போதுள்ள தேர்தல் முறையின் அடிப்படையில் நாங்கள் போட்டியிடுவோமாக இருந்தால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருக்கின்ற மூன்று கட்சிகளும் தனித்தனியே போட்டியிடுவதாக இருந்தால் கூடுதலான ஆசனத்தை பெறக்கூடிய வாய்ப்புள்ளது.

சில சபைகளில் அவ்வாறு போட்டிடுவதால் ஆசனங்கள் அதிகரிக்குமென கூற முடியாது. ஆனால் சில இடங்களில் அதிகரிக்கலாம். சில இடங்களில் குறையலாம். நாங்கள் பலமாக இருக்கின்ற பிரதேசங்களில் போட்டியிட்டால், எல்லா வட்டாரத்தையும் ஒரே கட்சி வெல்லுமாக இருந்தால் மட்டுமே விகிதாசாரத்தில் வருகின்ற ஆசனத்தை பெற்றுக் கொள்ள முடியும். ஒரே கட்சியாக போட்டியிட்டால் வட்டாரங்களில் கூடுதலாக வென்றால் விகிதாசார முறையில் நமக்கு ஆசனங்கள் கிடைக்காது.

இந்த கணக்கை அடிப்படையாக வைத்துத் தான் ஒரு தொழில்நுட்ப ரீதியாக நாங்கள் இதனை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றோம். இது சம்பந்தமாக பங்காளி கட்சிகளான பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதனுடனும் , சித்தார்த்தனுடனும் பேசியிருக்கின்றேன்.எனவே அவர்களுடன் பேசித்தான் இந்த விடயத்தை அறிவித்திருந்தோம்.

ஆனால் நாங்கள் இது தொடர்பாக இறுதி முடிவெடுக்கவில்லை. ஒவ்வொரு பிரதேசத்திலும், ஒவ்வொரு சபையிலும் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை வைத்து நாங்கள் அந்த முடிவை எடுப்போம். சில வேளைகளில் சில இடங்களிலே சேர்ந்து போட்டியிடலாம். சில இடங்களில் தனித்தனியே போட்டிடலாம். எனவே அந்தந்த சூழ்நிலைக்கேற்றவாறு தொழில்நுட்ப ரீதியாக அந்த தீர்மானங்கள் எடுக்கப்படும்.

பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து அவர்களுடன் சமரசமாக பேசித்தான் இந்த முடிவை எடுப்போமே தவிர நாங்கள் தமிழரசு கட்சியை தனித்து தீர்மானத்தை எடுப்போமென நாங்கள் கூறவில்லை. பங்காளி கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் பேசித்தான் முடிவை எடுப்போமென தெரிவித்தார்.

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால...

தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமலிருந்தமை காரணமாக நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய ஆலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி தாக்குதலில் மரணமடைந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிரதிவாதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவர் ஜனாதிபதி பதவி வகிக்கும் வரை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்றும் நீர்கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் தெரிவித்துள்ளார்.

50 இலட்சம் ரூபா முதல் ஆறு கோடி ரூபா வரை நட்டஈட்டைப் பெற்றுத்தருமாறு கோரி மேற்படி வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளதுடன் அந்த மனுமீதான விசாரணையின் போது அதுதொடர்பில் தெரிவித்துள்ள நீதவான், அரசியலமைப்பின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமையை பெறுத்தருமாறு விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளின் போதே நீதவான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## ஆறு இலட்சம் பேருக்கு...

செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட சாரதி அனுமதி பத்திர அட்டைகள் திணைக்களத்திற்கு பல மாதங்களாக கிடைக்காததால் தற்காலிகமாக செல்லுபடியாகும் அனுமதி பத்திரம் வழங்கப்பட்டது. அந்த அனுமதி பத்திரம் வழங்கப்பட்ட அனைவருக்கும் முறையாக அட்டைகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

திணைக்களத்திற்கு 5 இலட்சம் சாரதி அனுமதி பத்திர அட்டைகள் கிடைத்துள்ளதாக தெரிவித்த அவர், அட்டைகள் தட்டுப்பாடு காரணமாக ஒரு நாள் சேவையின் ஊடாக 50 அனுமதி பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்படுவதாகவும் அடுத்த வாரத்தில் இருந்து இந்த எண்ணிக்கை 300 ஆக அதிகரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## பிரபல குத்துச்சண்டை...

தொடர்பில் மேலும் தெரியவருவது, கண்டியில் இருக்கும் தனது வீட்டில் இருந்த அவரை, வைத்தியசாலை சந்திக்கு நபரொருவர் அழைத்துச் சென்றதாகவும், அங்கு இரண்டு முச்சக்கர வண்டிகளில் வந்த கும்பல் அவரை கொடூரமான முறையில் தாக்கிச் சென்றுள்ளதாகவும் தாயார் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளொன்று தொடர்பில் விபரம் அறிய வேண்டும் என தனது மகனை அழைத்து இவ்வாறு தாக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், கையடக்கத் தொலைபேசி வேலை செய்யாத காரணத்தினால், உறவினர்கள், நண்பர்கள்,தேடிய போது கடுமையான வெட்டுக்காயங்களுடன் தினுஷ லக்ஷான் தாக்கப்பட்டு, ஹந்தான பகுதியில் உள்ள பாழ் நிலத்தில் கைவிடப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து உடனடியாக கண்டி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும், பாதுகாப்புப் படையினர் சிலரே இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் தாயார் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கிறிஸ்மஸ் செலவை குறைத்து...

வாடும் உக்ரைன் மக்களுக்கு அனைவரும் உதவ வேண்டுமென போப் பிரான்சிஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

உக்ரைன் போர் ஆரம்பமாகி 10 மாதங்களை கடந்தும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்த போரால் இரு தரப்பிலும் ஏராளமான இராணுவ வீரர்கள் மற்றும் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த போரை உடனே நிறுத்த வேண்டுமென போப் பிரான்சிஸ் தான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் போப் பிரான்சிஸ் பேசும்போது, போரால் பாதிக்கப்பட்ட உக்ரைன் மக்கள் கடும் குளிரிலும், பசியாலும் வாடி வருகின்றனர். அவர்கள் இதயங்களில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படும் வகையில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் அமைய வேண்டும். அனைவரும் கிறிஸ்துமஸ் பண்டிகை செலவுகளை குறைத்துக் கொண்டு உக்ரைன் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என தெரிவித்தார்.

## குருநகர் பகுதியில் 180 kg...

வந்த குற்றச்சாட்டில் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

யாழ். குருநகர் கடற்பரப்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட படகொன்றை கடற்படையினர் வழிமறித்து சோதனையிட்ட போது, படகில் இருந்து கஞ்சா பொதிகளை மீட்டனர். அதனை அடுத்து படகிலிருந்த நபரை கைது செய்ததுடன், படகையும் கைப்பற்றினர்.

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில்...

இலக்கங்களையும் ஆங்கில எழுத்தையும் சரியாக பொருத்தி அன்றைய தினத்திற்கான சூப்பர் பரிசான 1,97,10,564 ரூபா வெல்லப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த முகவருடாக 2020 ஆம் ஆண்டு மூன்று கோடியே 71 இலட்சத்திற்கும் அதிகமான பணப்பரிசை வெல்வதற்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2023 இல் 8 பில்லியன் டொலரை...

அரசாங்கம் 3 பில்லியன் டொலர்களை திரட்ட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்கள் சிலவற்றை, மறுசீரமைப்பதில் ஜனாதிபதி ஆர்வமாக உள்ளார். அதன் மூலம் 2 முதல் 3 பில்லியன் டொலர்களை திரட்ட முடிந்தால், திறைசேரியின் இருப்புக்கள் பலப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சப்ரி தெரிவித்துள்ளார்.

## இறந்த கால்நடைகளுக்கு...

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தால், இறந்த கால்நடைகளுக்கான நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கால்நடைகள் இறந்தமைக்கு அதிக குளிரே காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

1,800 இற்கும் அதிகமான கால்நடைகள் இறந்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

## புதிய வருடத்தில்...

அனுராதபுரம் ஜய ஸ்ரீ மஹா போதியை வழிபடுவதற்காக நேற்று முன்தினம்(14) சென்றிருந்த போதே, அவர் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

## டயனாவுக்கு எதிரான...

தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று அழைக்கப்பட்டது.

டயனா கமகே சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான மூன்று நாட்களுக்கும் பின்னர் 28ஆம் திகதியிலிருந்து மூன்று நாட்களும் அவர் வெளிநாடு செல்ல வேண்டியிருப்பதால், பயணத்தடையை தளர்த்துமாறு கோரியிருந்தார்.

குறித்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, தடையை தளர்த்துவதற்கு இந்த உத்தரவை பிறப்பித்தார்.

## கடன் சுமையற்ற... (03ஆம் பக்கத் தொடர்)

பொருளாதாரம். அதுதான் இப்போது நாம் கட்டியெழுப்பும் பொருளாதாரம். இந்த நாட்டில் திறந்த பொருளாதாரத்தை உருவாக்கி அந்த இயந்திரத்தை உருவாக்குகிறோம். போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கி உலகத்துடன் போட்டியிடும் வகையில் இந்தப் பந்தய கார் தயாரிக்கப்படுகின்றது என்றார்.

## மருத்துவர்களின் கட்டாய... (03ஆம் பக்கத் தொடர்)

முடியும் என்றும் அதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்துக்குள் பிறந்த நாள் வருகின்ற மருத்துவர்கள் குறிப்பிட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை சேவையில் ஈடுபட முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தம் எதிர்வரும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறையிலிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு படகில்... (03ஆம் பக்கத் தொடர்)

தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த கடலோரக் காவல் படையினர் சந்தேகத்திற்கிடமான வகையில் சென்ற படகை சோதனையிட்டனர். அதில் பீடி இலை மூடைகள் இருந்ததும், அவற்றை இலங்கைக்கு கடத்த முயன்றதும் தெரியவந்தது. இதையடுத்து படகிலிருந்த 06 பேரையும் கைதுசெய்தனர்.

## வெகுஜன ஊடக... (03ஆம் பக்கத் தொடர்)

மத்தியில் தயாரிப்புக்கான செலவுகள் அதிகரித்திருப்பதால் விளம்பரங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் ஏறத்தாழ 70% வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக இங்கு தெரியவந்தது.

இரவு நேரங்களில் இடம்பெறுகின்ற மின்சாரத் துண்டிப்புக்கள் காரணமாக தொலைக்காட்சிகளுக்குக் கிடைக்கும் விளம்பரங்களின் அளவு குறைந்திருப்பதாகவும், தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் நிகழ்ச்சியொன்றைத் தயாரிப்பதற்காக அதிக செலவு ஏற்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

காகிதத் தட்டுப்பாடு உள்ளிட்ட உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளமையினால் நாளேடுகள் உட்பட வெளியீட்டுத் துறையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக பத்திரிகைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர். இந்நிலைமையினால் நாளேடுகளின் பக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். நாளேடுகளில் பக்கங்கள் குறைக்கப்படுவதால் பிராந்திய ஊடகவியலாளர்களின் செய்திகளுக்கு இடமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

சில பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் நிரந்தர ஊழியர்களுக்குக் கூட சம்பளம் வழங்குவதில் சிரமமான நிலை காணப்படுவதாகவும் இங்கு தெரியவந்தது. இந்நிலையில் நாளேடுகள் அச்சிடுவது 60%70% வரை குறைந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

## முஸ்லிம்களின் உரிமைகள்... (03ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம்களுக்கு வழங்கும் அதிகாரம் என்ன? இதுபற்றி அவர்கள் மனம் திறப்பது அவசியம். சூழ்நிலையைச் சமாளிக்கும் அறிக்கைகள் விடாமல், முஸ்லிம்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு பேசுவதே சிறந்தது.

இதே நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை உள்ளமை ஏற்புடையதல்ல. வடக்கு கிழக்கு இணைய வேண்டுமா அல்லது வடக்கும் கிழக்கும் வெவ்வேறாக பிரிந்திருக்க வேண்டுமா என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும். இணைய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ஹக்கீம் இருப்பாரேயானால் வடக்கு ,கிழக்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்போகும் அரசியல் தீர்வை அவர் தெளிவுபடுத்த வேண்டும். இவ்விடயங்கள் தொடர்பில் ஹக்கீமுக்கும், சுமந்திரனுக்கும் இதுவரை காலமும் இரகசியமாக நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெளிக்கொணரப்படுவது அவசியம். இவ்விரு மாகாணங்களும் பிரிந்திருக்க வேண்டுமென ஹக்கீம் கூறினால், அந்தந்த மாகாணங்களில் அபகரிக்கப்பட்ட, கையகப்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்கள் என்ற பொது அடையாளத்துக்குள் முஸ்லிம்களையும் உள்ளீர்க்கவே முயற்சிக்கப்படுகிறது. இப்பொது அடையாளத்துக்குள்ளும் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே ,13 ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுவது கள நிலவரங்களுக்குப் பொருந்தாது. இது அவரது தனிப்பட்ட விருப்பமே தவிர வடக்கு,கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷை அல்ல. எனவே, தீர்வு தொடர்பில் எவரும் எழுமாந்தமாகப் பேசக்கூடாது. வடக்கும், கிழக்கும் பிரிந்த மாகாணங்களாகவே இருப்பதானால், குறிப்பாக கிழக்கில் அபகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை, முஸ்லிம் பிரதேச செயலகங்களிடமோ அல்லது முஸ்லிம்களிடமோ ஒப்படைப்பது அவசியம். உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்கள் உள்ளன. அவற்றில் 04 முஸ்லிம் பிரதேச செயலங்களில் 27 வீதமாக உள்ள முஸ்லிம்களுக்கு 1.3 வீதமான காணிகளே உள்ளன. அதிகாரக் கெடுபிடிகள் மற்றும் அச்சுறுத்தல்களாலே இவர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன, கபடத்தனமாக பறிக்கப்பட்டன. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர், அபகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்படுவது அவசியம். மட்டுமல்ல காணிகளின் எல்லைப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்ட பின்னரே வட,கிழக்கில் முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாகினர். கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டன. மட்டக்களப்பில், முஸ்லிம்களின் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டன. இதனால்தான்,13 ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இவ்விடயத்தில் கடைப்பிடிக்கும் மௌனமும் கலைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச முதலீடுகளை வரவழைக்கும் புதிய நிதிச் சட்டங்கள் இந்தியாவில் கொண்டுவரப்படவுள்ளன



பல்வேறு வகையான நிதி மற்றும் முதலீட்டு நிறுவனங்கள் நிதி மற்றும் ஆதனங்களை கையாள்வதற்கு வழி செய்யும் சட்டம் இந்தியாவில் அறிமுகமாகவுள்ளது. குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரில் இதற்கு வசதி செய்யும் சர்வதேச நிதித் துறை சேவைகள் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

கடந்த நவம்பர் 30ம் திகதி சர்வதேச நிதித்துறை சேவைகள் நிலையத்துக்கான அதிகார சபை ஒரு நிபுணர் குழு அறிக்கையை வெளியிட்டிருந்தது. இந்தியாவின் திவாலாகும் நிறுவனங்கள் தொடர்பிலான சபையின் முன்னாள தலைவரான எம்.எஸ்.சாஹூவைத் தலைவராகக் கொண்ட ஒன்பது அங்கத்தவர் குழுவே இந்த ஆலோசனை அறிக்கையை தயார் செய்திருந்தது. இந்தியாவின் நிதி மற்றும் முதலீடுகள் தொடர்பான நிறுவனங்களுக்கு வழிகாட்டும் சட்ட ஏற்பாடுகள் இவ்வளவு காலமாக செயல்திறன் கொண்டவையாக இருக்கவில்லை. இந் நிறுவனங்கள் அதிகாரங்களுடன் நிதித் துறையில் செயலாற்றும் வகையில் புதிய சட்டம் கொண்டு வருவதற்கு வழிகாட்டும் வகையில் இந்த பரிந்துரைகள் அமைந்திருப்பதாக நிதிமுதலீட்டுத்துறை வட்டாரங்கள் கருதுகின்றன.

நிதி மற்றும் முதலீட்டுத்துறைகளில் சிறப்பாக செயல்படும் நாடுகளாக சிங்கப்பூரும் லக்ஸம்பேர்க்கும் விளங்குகின்றன. வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்களை வரவேற்றும் வகையில் இந்நாடுகளின் சட்ட ஏற்பாடுகள் அமைந்திருப்பதைப் போல இந்தியாவிலும் புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நீண்ட நாள் வேண்டுகோளை பிரதமர் மோடியின் அரசு ஏற்றுக் கொண்டிருப்பதையே இது காட்டுகிறது என்று இந்திய முதலீட்டு வட்டாரம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

பெருமளவு நிதியை ஆக்கபூர்வமாகக் கையாள்வதற்காக சகல வளங்களும் இந்தியாவில் காணப்பட்டாலும் சட்ட ஏற்பாடுகள் போதியதாக இல்லை என்பது வெகு நாட்களாக அவதானிக்கப்பட்டு வந்துள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் விருது;

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை மூன்றாம் இடம் பெற்று சாதனை



தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று (15) அலரி மாளிகையில் நடைபெற்றது.

தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் அரச பிரிவின் கீழ் அரச திணைக்களங்களுக்கிடையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை மூன்றாமிடத்தை பெற்று அதற்கான விருதையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டது. சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடமிருந்து தமக்கான விருதினையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

நோயாளிகளுக்கு உயர் தரமானதும் பாதுகாப்பானதுமான சுகாதார சேவைகளை வழங்கிவரும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை தாம் பங்கு பற்றிய முதல் தடவையிலேயே இவ்விருதை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜம்மு - காஷ்மீரில் உருவாகிவரும் புதிய தொழில் முயற்சியாளர்கள்

### பிரதமர் விருது வழங்கி ஊக்குவிக்க ஏற்பாடு



ஜம்மு காஷ்மீரில் வெற்றிகரமாக தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமான பிரதமரின் தொழில் வாய்ப்பு விருதுகளுக்கான போட்டியாளர்களைத் தெரிவு செய்யும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மத்திய அரசின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

ஜம்மு – காஷ்மீரின் மாநில அந்தஸ்து குறைக்கப்பட்டதோடு விசேட அந்தஸ்தும் நீக்கப்பட்ட பின்னர் புதிய முதலீடுகள், புதிய தொழில்முயற்சிகள் மற்றும் சுயதொழில்கள் வளர்ச்சி பெற ஆரம்பித்திருப்பதையடுத்தே அவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் சேவைகள் பிரிவில் மாத்திரம் பிரதமரின் தொழில்வாய்ப்பு திட்டத்தின் கீழ் 16,807 தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. விவசாய மற்றும் உணவு பதப்படுத்தல் பிரிவின் கீழ் 1770 தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத்திட்டத்தின் கீழ் தொழிலாளர் தரத்தில் இருந்தவர்களும், சிறு தொழில்களை நடத்தி வந்தவர்களும் அரச கடன் உதவிகளைப் பெற்று சிறுதொழில் அதிபர்களாக வரமுடிந்திருப்பதாக காஷ்மீர் நிர்வாக வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. தீவிரவாதிகளின் நடமாட்டம் தென்படக் கூடிய பரமுல்லா, புல்வாமா, கன்டர்பால், பன்டிபோரா மாட்டங்களில் தொழில் முயற்சிகள் 2122 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. கதர் மற்றும் கிராம கைத்தொழில் சபையும் இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில் பயிற்சி, வழிகாட்டல்களுடன் கடன்களையும் வழங்கி வருகிறது.

# வவுனியாவில் சட்டவிரோத மின் வேலியில் அகப்பட்டு இளைஞன் பலி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா, குடாகச்சக்கொடியில் சட்டவிரோத மின் வேலியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளதுடன், நாட்டு துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக மடுக்கந்தை பொலிஸார் தெரிவித்தனர். குடாகச்சகொடிய மேதாமாவத்தையைச் சேர்ந்த 25 வயதுடைய உமேஸ் லக்சன் என்ற இளைஞரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குடாகச்சக்கொடிய மானேரிகுளம் பகுதியில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக சென்ற இளைஞர் ஒருவர் அங்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்குண்டு பலியாகியுள்ளார்.

இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மடுக்கந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கட்டார் நாட்டின் தேசிய தினம் புதன் கிழமை (14) கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் இலங்கைக்கான தூதுவா் ஜெஸ்மின் பின் ஜபீர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நினைவுதின கேக்கினை அதிதிகளாகக் கலந்து கொண்ட சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களான அலிசப்ரி, ஹாபிஸ் நஸீர் அஹமட், விஜயதாச ராஜபக்ச, டக்லஸ் தேவனந்தா ஆகியோர் இணைந்து வெட்டுவதினைப்படத்தில் காணலாம்.

(படம் அஷ்ரப் ஏ சமத்)

# மாணிக்க வர்த்தகத்தில் 50வருடம் பூர்த்தி; இம்தியாஸ் கரீம் கௌரவிப்பு



பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த சமூக சேவையாளரும் மாணிக்க வர்த்தகருமான எம். ஸீ. எம். இம்தியாஸ், மாணிக்க வியாபாரத்தில் 50 வருடங்களை பூர்த்தி செய்ததற்காக கடந்த வாரம் சீனன்கோட்டை மாணிக்க வர்த்தக சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'சீனன்கோட்டை வர்த்தகர்களுக்கான கௌரவிப்பு' விழாவில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நினைவுச் சின்னம் விழாவின் பிரதம அதிதியும் சர்வதேச மாணிக்கக்கல் ஆலோசகருமான கலாநிதி ஏ. ரெட்டியினால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும். இளம் வயதிலிருந்தே மாணிக்க வியாபாரத்தில் ஈடுபட்ட இம்தியாஸ் கரீம், பேருவளை நகர சபையின் உறுப்பினராக சுமார் 17 வருடம் பணிபுரிந்து தான் சார்ந்த சமூகத்திற்கும் பல்வேறு சேவைகளையும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


திகதி 14.12.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4969
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.18,252,220.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 6 7 1 7 1 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 278
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.11,510,734.40
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 12 20 34 61
விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,500,000.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3211
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,008,800.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 10 40 48 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,620,582.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1424
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,112,760.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 0 7 8 3 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,064,324.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 999
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,687,680.00
வெற்றி இலக்கினம் Y வெற்றி இலக்கங்கள் 24 32 66 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 136,827,074.80

கோடி 28+ Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1317
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,369,380.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.286,398,226.00
ஆங்கில எழுத்து T சுப்பர் நம்பர் 03 வெற்றி எண்கள் 25 32 55 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



ST&S SINCE 1892 | softlogic Finance

## சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி மாபெரும் வாகன ஏலவிற்பனை

மாபெரும் வாகன ஏலவிற்பனை
74 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்களும் முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும்
2022 டிசம்பர் 22 வியாழக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

காா்கள்:

| | | |
|---|---|---|
| CBE-9XXX | டொயோட்டா விட்ஸ் | 2018 |
| CBC -4XXX | மஸ்டா DBA-MJ34S பிளயா் | 2017 |
| CAY-2XXX | சுசூகி ஸ்பெசியா | 2017 |
| CBB-3XXX | சுசூகி வெகன் R | 2017 |
| CAY-0XXX | ரெனவ்ல்ட் KWID | 2016 |
| CBA-1XXX | ஹொண்டா DBA-JF1 N பொக்ஸ் | 2015 |
| CAG-2XXX | சுசூகி அல்டோ LXI 800 | 2015 |
| CAO-6XXX | ஹொண்டா வெசில் | 2015 |
| CAV-7XXX | BMW DAA-FZ35 அக்டிவ் | 2015 |
| CAC - 3XXX | டொயோட்டா யாரிஸ் | 2014 |
| CAA-3XXX | ஹொண்டா வெசில் | 2014 |
| CAC-1XXX | டொயோட்டா DAA-ZVW30 பியா்ஸ் | 2012 |
| CAB - 0XXX | டொயோட்டா DAA-NHP10 அகுவா | 2012 |
| KN-1XXX | மாருதி அல்டோ | 2011 |
| KO 2XXX | அஉடி A62 0LT | 2010 |
| KK - 5XXX | மயிக்ரோ கைரோன் | 2008 |
| KM-1XXX | டொயோட்டா DBA-NZT260 அலியன் | 2008 |
| KM-1XXX | டொயோட்டா DBA-ZZT240 அலியன் | 2007 |
| KC-4XXX | மயிக்ரோ டிரன்ட் | 2006 |
| JV-8XXX | மாருதி ZEN VXI | 2005 |
| HZ - 2XXX | KIA சொரென்டோ 4X4 | 2004 |
| HW-1XXX | மிட்ஷுபிஷி கலன்ட் | 2003 |
| HG - 6XXX | நிசான் FB15 | 2000 |
| HD-4XXX | பெர்ஜோ 606 | 2000 |
| GN-9XXX | சுசூகி எஸ்குடோ | 1999 |
| 301-3XXX | டொயோட்டா RAV 4 SXA11 | 1996 |
| 19-9XXX | ஹொண்டா E-EG8 | 1993 |
| 64-7XXX | நிசான் GS பேர்ட் | 1991 |
| 14 SRI 9XXX | போர்ட் லாசர் | 1987 |

டபிள் கெப்ஸ் /சிங்கிள் கெப்ஸ்:

| | | |
|---|---|---|
| PS-4xxx | டாட்டா 207DI | 2011 |
| PP-0xxx | நிசான் நாவர | 2010 |
| PD -7xxx | நிசான் நாவர | 2007 |
| JA - 8xxx | டாட்டா 207DI | 2004 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| AAW-7XXX | பஜாஜ் 4S | 2015 |
| AAL-8XXX | TVS கிங் | 2013 |
| YE-7XXX | பஜாஜ் 4S | 2010 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| PJ-4xxx | சுசூகி HBD-DA17V எவேரி | 2017 |
| PI-7xxx | சுசூகி HBD-DA17 எவேரி | 2015 |
| PI-0xxx | சுசூகி EBD-DA64V எவேரி | 2013 |
| PF-8xxx | டொயோட்டா LDF-KDH201V ரெஜியஸ் | 2010 |
| PA-7xxx | டொயோட்டா லைட் ஏஸ் | 2001 |
| GX-8xxx | நிசான் GA-VAJC23 | 1998 |
| 252-2xxx | மஸ்டா SSF8W | 1994 |
| 252-3xxx | நிசான் | 1994 |
| 252-2xxx | இசுசு U WFR62DV | 1993 |
| 250-6xxx | டொயோட்டா LH119 | 1991 |

லொறிகள் /டிரக்குகள் /டிப்பா்கள் / டுவல் பா்பஸ்

| | | |
|---|---|---|
| DAG-8xxx | JMCGL லைட் டிரக் ST-06 | 2018 |
| DAD-0xxx | மஹின்ட்ரா B M T பிளஸ் MDI | 2016 |
| DAA-7xxx | டாட்டா சுப்பர் ஏஸ் | 2015 |
| DAB-4xxx | மஹின்ட்ரா மெக்ஸிமோ பிளஸ்-VX | 2015 |
| DAE-3xxx | லங்கா அசோக் லேலண்ட் டோஸ்ட் LS | 2014 |
| PX-6xxx | டாட்டா ஏஸ் EX2 | 2014 |
| PV-1xxx | டாட்டா ஏஸ் EX | 2013 |
| LP-1xxx | இசுசு TQG-NPR85AN எல்ப் | 2013 |
| LJ-5xxx | லங்கா அசோக் லேலண்ட் ஈகொமெட் | 2011 |
| LI-7xxx | லங்கா அசோக் லேலண்ட் ஈகொமெட் | 2008 |
| LE-7xxx | JAC HFC5040K | 2007 |
| LD-4xxx | JAC HFC1040K | 2007 |
| LC-2xxx | லங்கா அசோக் லேலண்ட் ஈகொமெட் | 2006 |
| JQ - 3xxx | லங்கா அசோக் லேலண்ட் ஈகொமெட் | 2004 |
| LL-2xxx | மிட்ஷுபிஷி UFE516BN | 2000 |
| GI-9xxx | நிசான் அட்லஸ் | 1996 |
| GL-5xxx | மஸ்டா பொங்கோ | 1995 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BIS-8xxx | ஹொண்டா டியோ dx | 2020 |
| BIB-6xxx | TVS ஸ்போட் | 2019 |
| BIN-4xxx | TVS அபாச்சி | 2019 |
| BIV - 3xxx | TVS நின்ரக் | 2019 |
| BIV-0xxx | ஹீரோ பிலசா் | 2019 |
| BHV-0xxx | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2018 |
| BHE-8xxx | பஜாஜ் பல்சா் 150 | 2018 |
| BHM-1xxx | ஹீரோ பிலசா் | 2018 |
| BIA-6xxx | ஹொண்டா நவி | 2017 |
| BHG-2xxx | மஹின்ட்ரா ரொக்ஸ்டா் | 2017 |
| BGV-9xxx | மஹின்ட்ரா ரொக்ஸ்டா் | 2017 |

பார்வையிடல் - ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில் 2022 டிசம்பர் 19 திங்கள் முதல் 21 புதன் வரை (காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2022 டிசம்பர் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
Celebrating 125 Years
011 2671468 | www.sandslanka.com

# கிழக்கின் குரல்



## பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவை; புதிய செயலியை அறிமுகப்படுத்த ஏற்பாடு

### மட்டக்களப்பு மாநகர சபையில் கலந்துரையாடல்

மட்டக்களப்பு விசேட நிருபர்



உள்ளூராட்சி மன்றங்களில் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு பதிலளித்தல் பொறிமுறையை வினைத்திறனுடன் செய்வதற்காக மட்டக்களப்பு மாநகர சபைக்கு புதிய செயலியொன்றை உருவாக்கவுள்ளதாக, இலங்கை உள்ளூராட்சி மன்றங்களினுடைய சம்மேளனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பெருமாள் பிரதீப் தெரிவித்தார்.

சகவாழ்வு மூலம் சமூகத்துக்கும் அரசாங்க அதிகாரிகளுக்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில் புதிய தகவல் தொழில்நுட்ப வசதிகளை அமுலாக்கம் செய்வது தொடர்பான கலந்துரையாடலொன்று, மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்று (15) நடைபெற்ற போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களின் நேரத்தையும் பணத்தையும் மீதப்படுத்தும் வகையில் WhatsAPP, இணையம், 24 மணிநேர HOT Line, சிவப்பு மற்றும் கறுப்பு நிற Tag குகள் என்பனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மாநகர சபையிடம் பொதுமக்களால் கோரப்படும் சேவைகளை வழங்குவதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட வேண்டிய கால எல்லை, கோரப்படும் சான்றிதழ் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுமக்கள் தகவல்களைக் கோருமிடத்தில் அவற்றை வழங்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக பிரதி ஆணையாளர் உ.சிவராஜாவை அணுகுதல், சோலை வரிகளைப் பெறுவதற்கான பொறிமுறை உள்ளிட்ட திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இறக்காமம் பிரதேச சபையில் WhatsAPP செயலி ஏற்கெனவே நிறுவப்பட்டு சேவைகள் இடம்பெற்று வருவதுடன், காரைதீவு மற்றும் பொத்துவில் பிரதேச சபைகளுக்கும் இச்செயலி நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திராய்மடுவில் மாவட்ட செயலகம் இலகு பாதைக்கான கலந்துரையாடல்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கான புதிய கட்டடத் தொகுதி மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திராய்மடுவில் நிர்மாணிக்கப்படும் நிலையில், இதற்கான இலகு பாதை அமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று, மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் ஏற்பாட்டிலும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இக்கலந்துரையால் நடைபெற்றது.

இப்புதிய கட்டடத் தொகுதியானது, மட்டக்களப்பு நகருக்கும் மாவட்ட செயலகம் தற்போது இயங்கி வரும் மட்டக்களப்பு கோட்டைப் பகுதியிலிருந்து வடக்காக சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இந்நிலையில் வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, வவுணதீவு உள்ளிட்ட தூர இடங்களிலிருந்து அலுவல்களுக்காக மக்கள் அதிகளவில் வரலாமென்பதால் இலகு மற்றும் குறுந்தூர வீதிகளை அமைத்தல், அகலப்படுத்துதல், கனரக வாகனங்கள் செல்லும் வகையில் வீதியை மேம்படுத்துதல் தொடர்பில் ஆராயப்பட்டன.

அத்துடன், தூர இடங்களிலிருந்து கடமைக்கு வரும் உத்தியோகத்தர்கள், குறுகிய நேரத்தில் புதிய மாவட்ட செயலகத்துக்கு வருவதற்கு புதிய வீதிகளை அமைப்பதற்கான சாத்தியவளக் கூறுகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

## 'தண்ணீருக்கு எத்தனை கண்கள்' நூல் அறிமுக நிகழ்வு நாளை

திராய்க்கேணி மருதமுனை தினகரன் நிருபர்கள்

உலகக் கவிஞர் சோலைக்கிளியின் 'தண்ணீருக்கு எத்தனை கண்கள்' நூல் அறிமுக நிகழ்வு நாளை (17) காலை 9.30 மணிக்கு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அருட்தந்தை அன்பு ராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், பேராசிரியர் றமீஸ் அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

## காரைதீவில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளருக்கு பாராட்டு



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் ய.அனிருத்தனுக்கு காரைதீவில் பாராட்டு நிகழ்வு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

நாவலர் ஆண்டையொட்டிய சிறப்பு நிகழ்ச்சிகள் காரைதீவு விபுலானந்த அடிகளாரின் மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போதே, இப்பாராட்டு நிகழ்வு நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரனின் உன்னதமான பணியை பாராட்டிய அதேவேளை, புதிய பணிப்பாளர் அனிருத்தனுக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டப்பட்டார்.

இதேவேளை, இலங்கை வானொலியில் அறநெறி சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அம்பாறையைச் சேர்ந்த 127 மாணவர்களுக்கு அதிதிகளால் பரிசுகள் வழங்கப்பட்டன.

## திருமலையில் பெண்களின் உரிமைகளை வலியுறுத்தி விழிப்புணர்வூட்டும் வீதி நாடகம்



கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்

பெண்களின் உரிமைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வீதி நாடகமொன்று, திருகோணமலை நகரில் நேற்று(15) நடைபெற்றது.

பெண்களின் உரிமைகள் தொடர்பான 16 நாள் செயல்முனையொட்டியும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டியும் இவ்வீதி நாடகத்தை அகம் மனிதாபிமான வள நிலையம் நடத்தியது.

இதன்போது பெண்கள் உடல், உள ரீதியாக எவ்வாறு துன்புறுத்தப்படுகிறார்கள், பெண்கள் எவ்வாறான சாதனைகளை புரிந்துள்ளார்கள், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது எவ்வாறு என்பது உள்ளிட்ட பல விடயங்களை விழிப்புணர்வூட்டும் வகையில் இவ்வீதி நாடகம் அமைந்திருந்தது.

## மட்டக்களப்பில் சிறப்பாக நடைபெற்ற அண்ணாவிமார்களுக்கான மாநாடு

கல்லடி குறூப், மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்



பாரம்பரிய கலையான கூத்துக் கலையில் பல்துறை ஆற்றல் மற்றும் திறமை வாய்ந்த அண்ணாவிமார்களுக்கான மாநாடொன்று, மட்டக்களப்பின் பிள்ளையாரடி தமிழ்ச்சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இம்மாநாட்டின் போது, 4 அண்ணாவிமார்களுக்கு தலைக் கூத்தர் விருதும் 4 அண்ணாவிமார்களுக்கு மாண்புறு விருதும் 2022ஆம் ஆண்டுக்கான இளம் அண்ணாவிமார் விருது 43 அண்ணாவிமார்களுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் தென்மோடி வரவாட்டம், வடமோடி வரவாட்டம், விலாசம் வரவாட்டம், நகைச்சுவை கூத்தின் வரவாட்டம் ஆகிய பாரம்பரிய கலையம்சங்களும் அரங்கேற்றப்பட்டன.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தங்கராசா மலர்ச்செல்வனின் தொகுப்பில் உருவான 'தெய்' எனும் சிறப்பு நூல் வெளியிடப்பட்டதுடன், இந்நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சனி ஸ்ரீகாந்துக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்ஷன் வழங்கி வைத்தார்.

## மட்டக்களப்பில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 170ஆவது ஜனனதின நிகழ்வு



மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனின் ஏற்பாட்டில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 170ஆவது ஜனன தின நிகழ்வு, அவ்வாச்சிரம மண்டபத்தில் மிகச் சிறப்பாக நேற்று (15) நடைபெற்றது.

கல்லடி இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவாதனந்தாஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பூஜை, ஹோமம், பஜனை ஆகியன நடைபெற்றன.

அத்துடன், அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் திருவுருவப்படம் தாங்கிய ரத பவனியும் கல்லடியில் நேற்று முன்தினம் (14) மாலை நடைபெற்றது.

## ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் தென்னங்கன்றுகள் நடும் திட்டம்

ஆரையம்பதி தினகரன் நிருபர்



மட்./ ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் வெற்று நிலமாகக் காணப்பட்ட சுமார் முக்கால் ஏக்கர் காணியில் தென்னம் கன்றுகளை நடும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அவற்றினால் கிடைக்கும் பயன்களை மாணவர்களின் கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் நோக்கிலேயே, இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, மட்டக்களப்பு தெங்கு பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் பிரேமியா ரவிராஜிடம் அப்பாடசாலை அதிபர் என்.சந்திரலிங்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, ஒருதொகை தென்னம் கன்றுகள் வழங்கப்பட்டன. இக்கன்றுகளை வழங்கும் நடவடிக்கையில் ஆரையம்பதி கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் நேசமணி ஜெயந்தன், மட்டக்களப்பு பிரிவு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், தினேஷ் பண்டார ஜெயதிலக்க, பிராந்திய முகாமையாளர் காமினி சமரகோன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தென்கிழக்கு பல்கலையின் கழிவுநீர் பிரச்சினைக்கு தீர்வு



கல்முனை மத்திய தினகரன், சாய்ந்தமருது விசேட நிருபர்கள்

தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கான விடுதியிலிருந்து கழிவுநீர் வெளியேறும் நிலையில், கழிவுநீர் தொட்டியை உடனடியாக சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அப்பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

மேற்படி விடுதியிலிருந்து கழிவுநீர் வெளியேறுகின்ற பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தந்த பல்கலைக்கழக விடுதிகளுக்குப் பொறுப்பான பணிப்பாளருக்கும் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இக்கழிவுநீர் வெளியேறுவது தொடர்பான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச சபையில் அண்மையில் நடைபெற்ற போது,

கழிவுநீர் வெளியேறுவதால் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. இந்நிலையிலேயே, கழிவுநீர் தொட்டியை உடனடியாக சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## கஞ்சாவுடன் கைதான ஒருவருக்கு விளக்கமறியல்

கந்தளாய் தினகரன் நிருபர்

கஞ்சா வைத்திருந்த ஒருவரை இம்மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

அக்போபுர பகுதியைச் சேர்ந்த 38 வயதுடை இந்நபர், 680 கிராம் கஞ்சாவை வைத்திருந்தமை தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, இந்நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து கஞ்சாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்நிலையில், கந்தளாய் நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இந்நபரை அண்மையில் ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் வழங்கப்பட்டது.

## கிண்ணியாவில் வீட்டுக்கு வீடு டெங்கு ஒழிப்பு

கிண்ணியா தினகரன் நிருபர்

கிண்ணியாவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் வீட்டுக்கு வீடு டெங்கொழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிண்ணியா பிரதேச செயலக ஊழியர்கள், கிண்ணியா சுகாதார பணிமனை ஊழியர்கள், கிராம மட்ட சங்க உறுப்பினர்கள் இணைந்து டெங்கொழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருவதுடன், முனைச்சேனை உள்ளிட்ட பகுதிகளில் அண்மையில் டெங்கொழிப்பு முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்கள் தமது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்கும் வகையில் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வேலைத் திட்டமானது, தொடர்ந்து கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 31 கிராம அலுவலகர் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

## போதைப் பாவனைக்கு எதிரான கருத்தரங்கு

ஒலுவில் மத்திய விசேட நிருபர்

போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அட்டாளைச்சேனை அரபா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் (17) நடைபெறவுள்ளதுடன், இதற்கு முன்னதாக போதைப்பொருளுக்கு எதிரான நடைபவனியொன்றும் இடம்பெறவுள்ளது.

'நாம் ஊடகர் பேரவை' நடத்தும் இக்கருத்தரங்குக்கு, அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் வை.எம்.எம்.ஏ அமைப்பின் அட்டாளைச்சேனை கிளையினர் அனுசரணை வழங்குகின்றனர்.

எதிர்காலச் சந்ததியினரை போதைப் பழக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கான இக்கருத்தரங்கை, எதிர்காலத்தில் ஏனைய இடங்களிலும் நடத்த 'நாம் ஊடகர் பேரவை' திட்டமிட்டுள்ளது. சனிக்கிழமை காலை நடைபெறும் போதைப்பொருளுக்கு எதிரான கருத்தரங்கு மற்றும் நடைபவனியில் கலந்து கொள்ளுமாறு பொதுமக்களும் அழைக்கப்படுகின்றனர்.



தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில், உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தையும் கண்காட்சியும் நடைபெற்றன. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலில், முள்ளிப்பொத்தானை சந்தைக் கட்டடத்துக்கு அருகில் நடைபெற்றது. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இச்சந்தையும் கண்காட்சியும் நடைபெற்றன.

(படம்: தம்பலகாமம் குறூப் நிருபர்)

# முல்லைத்தீவில் மாடுகள் கடத்தல்; கால்நடை வளர்ப்போர் பாதிப்பு

## மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் கையளிப்பு

*பரந்தன் குறூப் நிருபர்*



முல்லைத்தீவு மாவட்டத்தின் உண்ணாப்பிலவு மற்றும் கள்ளப்பாட்டு ஆகிய பகுதிகளில் வாழ்வாதரத்திற்காக வளர்க்கப்படும் கால்நடைகள் கடத்தப்படுவதை தடுக்குமாறு கோரி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கால்நடை வளர்ப்போர் மகஜர் ஒன்றை நேற்று கையளித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் உண்ணாப்பிலவு மற்றும் கள்ளப்பாட்டு பகுதிகளில் தொடர்ந்து கால்நடைகளை கடத்தும் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதாக கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். எனவே அவற்றை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு வழிவகை ஏற்படுத்தி தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதனுக்கு கால்நடை வளர்ப்போர் வேண்டுக்கோள் விடுத்துள்ளனர்.

வாழ்வாதாரமாக தமக்கு சோறு போடும் மாடுகளை கடத்திச் சென்று இறைச்சி விற்பனை நடைபெறுவதாக கால்நடைவளர்ப்போர் குற்றம் சாட்டுகின்றனர். எனவே அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஒருசில மாதங்களுக்குள் 47 மாடுகள் கடத்தப்பட்டுள்ளதாகவும் கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த மாவட்ட அரசாங்க அதிபர் உடனடியாக தாம் பொலிஸாருடனும் பிரதேச சபை தவிசாளருடனும் கதைத்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

# நாய்களை விழுங்கிய முதலை மடக்கிப் பிடிப்பு



*யாழ்.விசேட, சாவகச்சேரி விஷேட நிருபர்கள்*

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் இரண்டு நாய்களை உயிருடன் விழுங்கிய முதலையை ஊரவர்கள் மடக்கி பிடித்துள்ளனர். முதலை எட்டடி நீளமானது என தெரியவருகின்றது. சாவகச்சேரி சிவன் கோவிலடியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றினுள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு உட்புகுந்த சுமார் எட்டடி நீளமான முதலை நாய்கள் இரண்டை விழுங்கி விட்டு அசைய முடியாத நிலையில் அங்கேயே உறங்கியுள்ளது.விடுதி பணியாளர்கள் காலையில் நாய்களை காணவில்லை என தேடிய போது, விடுதி வளாகத்தில் முதலை ஒன்று உறக்கத்தில் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர். பின்னர் அயலவர்களின் உதவியுடன் முதலையை உயிருடன் பிடித்து மரமொன்றில் கட்டி வைத்து இதுதொடர்பில் வனவிலங்கு பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவித்துள்ளனர். அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து முதலையை மீட்டு சென்றுள்ளனர். கடந்த மாதமும் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் முதலை ஒன்று குடிமனைக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வல்லிபுர ஆழ்வார் ஆலய மார்கழி மாத பூஜை

யாழ். வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய மார்கழி மாத நோன்புப்பூஜை இன்று முதல் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

தினந்தோறும் அதிகாலை 5 மணிக்கு ஆயத்த மணியோடு சுப்ரபாதமும் அதனைத் தொடர்ந்து திருப்பள்ளியெழுச்சி, உதய பூஜையும் 5.45 க்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூஜையும் காலை 6.15 க்கு வசந்த மண்டப பூஜையும் இடம்பெறும்.

நண்பகல் 12 மணிக்கு உச்சி கால பூஜையும் 3.45 க்கு அவல் பூஜையும் 4.15க்கு சுற்றுப் பூஜையும் மாலை 5 மணிக்கு அர்த்தசாம பூஜையும் இடம்பெறும்.

ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் அதிகாலை 4.30க்கு ஆயத்த மணியோடு சுப்ரபாதமும் அதனைத் தொடர்ந்து வழமையான பூஜைகள் இடம்பெறுவதோடு, மாலை 5.30 க்கு அர்த்தசாம பூஜையும் இடம்பெறும்.

# 'நினைவழியா பதிவுகள் சில' நூல் வெளியீடு

*தலைமன்னார் விஷேட நிருபர்*

மன்னார் பேசாலை பத்திமா கழகத்தின் வெளியீடாக ஓய்வுநிலை பாடசாலை அதிபர் கலாபூஷணம் எஸ்.ஏ.மிராண்டா எழுதிய 'நினைவழியாப் பதிவுகள் சில' தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பேசாலை பத்திமா மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நாளை (17) காலை 9.30 மணிக்கு பத்திமா கழகத்தின் தலைவர் திரு.சூசை புறுனோ டயஸ் தலைமையில் இடம்பெறுகின்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரும் பேசாலை பங்குதந்தையுமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்துகொள்ளவுள்ளார்.

# யாழ். பல்கலை முகாமைத்துவக் கற்கை பிரிவு மாணவர்களுக்கு இலங்கை வங்கி விருது

*பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வழங்கப்படும் தொழில் நிருவாகமாணி, வணிகமாணி ஆகிய





இரண்டு பட்டப்படிப்புகளிலும் முன்னணி பெறும் மாணவர்களுக்கு வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை வங்கியினால் "இலங்கை வங்கி விருது"வழங்கப்படவுள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு, நேற்றைய தினம் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், இலங்கை வங்கியின் சார்பில் அதன் வட மாகாண உதவிப் பொது முகாமையாளர்

வி. சிவானந்தனும் கையெழுத்திட்டனர். விருதுக்கான வைப்புச் சான்றிதழ் பல்கலைக்கழக நிதியாளர் கே. சுரேஸ்குமாரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்களும், இலங்கை வங்கி பிராந்திய உதவி முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் வங்கியியலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் தொழில் நிருவாகமாணி, வணிகமாணி ஆகிய பட்டங்களைப் பெறும் மாணவர்களில் முதனிலை பெறும் மாணவர்களுக்கு வருடாந்தம் தங்கப் பதக்கத்தையும், சான்றிதழையும் வழங்குவதற்கென இலங்கை வங்கியினால் ரூபா பத்து இலட்சம் இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பெயரில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் இலங்கை வங்கி விருதுக்கான தங்கப்பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.



யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜை இலங்கை-இந்திய தொடர்பாளரும் இலங்கை-இந்திய மீனவர் சங்கத் தலைவருமான மணவை அசோகன் மரியாதையின் நிமித்தம் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் எடுத்துக் கொண்ட படம்.

# அல்வாய் வடக்கில் இரு தரப்பினரிடையே மோதல்

*நாகர்கோவில் விஷேட நிருபர்*

அல்வாய் வடக்கு பகுதியில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் ஒன்றரை வயது ஆண் குழந்தை உட்பட ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை (14) நள்ளிரவு 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி இறுதியில் மோதலில் முடிந்துள்ளது.

வாள்கள், பொல்லுகள் கொண்டு இரு தரப்பினரும் தாக்குதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 7 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒன்றரை வயது ஆண் குழந்தை, 18 வயது யுவதி ஒருவர் உட்பட 32, 38, 22, 21, 40 வயதுகளையுடைய 5 ஆண்கள் என ஏழுபேர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தினால் பால்நிலை வன்முறையை கண்டித்து நெல்லியடி நகரப்பகுதியிலிருந்து பேரணியொன்று நேற்று வியாழக்கிழமை (15) முற்பகல் இடம்பெற்றது.பால்நிலை வன்முறைக்கு எதிராக 16 நாள் செயற்பாட்டில் இடம்பெற்ற இப்பேரணியில் அரச உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பகுதியிலும் உள்ள பெண்கள், உதவி பிரதேச செயலாளர் உட்பட உத்தியோகத்தர்கள் நெல்லியடி வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.நெல்லியடி நகரிலிருந்து ஆரம்பமான பேரணி, பிரதேச செயலகம் வரை சென்று அங்கு கண்டன கூட்டம் நடைபெற்றது. (கரவெட்டி தினகரன், நாகர்கோவில் விஷேட நிருபர்கள்)

# யாழில் மஞ்சளுடன் கைதானவர்களுக்கு ஒரு இலட்சம் அபராதம்; மஞ்சள் அரசுடைமை

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மஞ்சளுடன் கைதான இருவருக்கும் மல்லாகம் நீதவான் நீதிமன்றம் ஒரு இலட்ச ரூபாய் தண்டப்பணம் அறவிட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட மஞ்சளை அரசுடமையாக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் அண்மையில் 2 ஆயிரத்து 448 கிலோகிராம் மஞ்சளுடன் சுதுமலை பகுதியைச் சேர்ந்த இருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றின் ஆஜர்படுத்தினர். விசாரணைகளில் போது இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, ஒரு இலட்சம் ரூபாய் தண்டப்பணம் நீதிமன்றத்தினால் அறவிடப்பட்டுள்ளது. சான்று பொருளாக நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட 2448 கிலோ மஞ்சளையும் அரசுடைமையாக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவர் இலங்கை வருகை



சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவரும்ரோட்டரிக் கழகத்தின் முதல் பெண் தலைவியுமான ஜெனிபர் ஜோன்சன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்புக்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். இதன்போது இலங்கையிலுள்ள ரோட்டரிக் கழகங்க அங்கத்தவர்களைச் சந்தித்திருந்தார். கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் ரோட்டேரியன் புகுது டீ சொய்சா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவரின் வருகைக்கான நினைவுச் சின்னமாக 50ரூபாய் பெறுமதியான முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரி விஷேட நிருபர்

# வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகள் திருட்டு; நால்வர் கைது

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் வீடொன்றினை உடைத்து தங்க நகைகளை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் நால்வரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து 14 பவுண் நகைகளையும் மீட்டுள்ளனர்.

புலோலி சாரையடி பகுதியிலுள்ள வீடொன்றில் வசித்தவர்கள் கடந்த 7ஆம் திகதி வைத்தியசாலை சென்றிருந்த வேளையில், வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள், வீட்டினுள் இருந்த நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றிருந்தனர்.


அதுதொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். அதற்கமைய இதுதொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களிடமிருந்து தாலிக்கொடி, மோதிரம் உள்ளிட்ட 14 பவுண் நகைகளை மீட்டுள்ளதாகவும், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நகர்வலம்



# தேசிய மீலாத் தின ஞாபகார்த்த முத்திரை வெளியீடு




புத்தசாசன மதவிவகார அமைச்சு முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்துடன் இணைந்து ஒழுங்கு செய்த 2022ஆம் ஆண்டின் தேசிய மீலாத் தின ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் நிகழ்வு புதன்கிழமை (14) கொழும்பு 10, தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. முஸ்லிம் சமய பண்பாட்லுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார 'நளீமிய்யா கலாபீட பள்ளிவாசல் பொறிக்கப்பட்ட' முதல் முத்திரையை உத்தியோகபூர்வமாக அமைச்சர் அலிசப்ரியிடம் கையளித்து வெளியிட்டு வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் உட்பட இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்தசாசன மதவிவகார அமைச்சின் செயலாளர் சோமரட்ன விதான பத்திரன, சர்வமத பெரியார்கள், நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் அகார் மொஹமட், நளீமிய்யா பரிபாலன சபை சிரேஷ்ட உறுப்பினர் காமில் நளீம், ஜம்இய்யதுல் உலமா சபை, சீனன்கோட்டை பள்ளிச்சங்கங்களின் உறுப்பினர்கள், புத்திஜீவிகள், முக்கியஸ்தர்கள், ராபிததுந் நளீமிய்யீன் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள்; ஏ.எஸ்.எம்.ஜாவித், அஷ்ரப் ஏ சமத்

## ஐ.நா பிரதிநிதி ஹனா சிங்கர் – ரிஷாட் எம்.பி சந்திப்பு!



ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு (13) இலங்கைக்கான ஐ.நா தூதரகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் அவற்றிலிருந்து மீண்டெழுவதற்கான வழிவகைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், சர்வதேச முகவராண்மைகளின் ஆதரவுடன் முன்னோக்கி செல்லும் முறைமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதேவேளை, ஐ.நா வதிவிடப் பிரதிநிதி இலங்கைக்கு ஆற்றிய அளப்பரிய பணிகளுக்கு நன்றியினை தெரிவித்த ரிஷாட் எம்.பி, தனது சேவைக்காலத்தை நிறைவு செய்யவுள்ள ஐ.நா வதிவிடப் பிரதிநிதிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.



ஆறுமுகம் ரவீந்திரன் குருசாமியின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது வீட்டில் நேற்று சக்தி பூஜை நடைபெற்றது. இதில் ராஜ ராஜேஸ்வரி கோவில் ரவீந்திர குமார் குருசாமி, இரத்தினபுரி ஐ.தே.க அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார், ராஜராஜேஸ்வரி கோவில் தலைவர் திருக்கேஷ் செல்லச்சாமி ஆகியோருடன் கலந்துகொண்டபோது எடுத்த படம்.

## பாணந்துறை நகர சபை பட்ஜெட் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

2023ஆம் வருடத்திற்கான பாணந்துறை நகர சபையின் வரவு செலவு திட்டம் இரகசிய வாக்கெடுப்பின் போது மூன்று மேலதிக வாக்குகளினால் நிறைவேறியது.

ஐக்கிய தேசிய கட்சியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாணந்துறை நகர சபையின் வரவு செலவுத் திட்ட விவாதம் தலைவர் நந்தன குணதிலக தலைமையில் நேற்று (15) சபை மண்டபத்தில் இடம்பெற்றது. எதிர்கட்சித் தலைவர் ராஜீவ வீரமன் , ஆளும் கட்சி மற்றும் ஜேவிபி உறுப்பினர்கள் பலரும் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

நகர சபையின் தலைவர் விவாதத்தின் முடிவில் வரவு செலவுத் திட்டத்துக்கான சபையின் இணக்கப்பாட்டை கோரியபோது ஜேவிபி உறுப்பினர் கே.சந்திம பிரேரனை கோரினார். இதனையடுத்து சபை வாக்கெடுப்பு நிலைக்கு தள்ளப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்க வாக்கெடுப்பைக் கோர ஆளும் தரப்பு உறுப்பினர் இரகசிய வாக்கெடுப்பு கோரி பிரேரித்தனர்.

இதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இரகசிய வக்கெடுப்புக்கும் பகிரங்க வாக்கெடுப்புக்கும் தலா ஒன்பது சமநிலை வாக்குகள் கிடைத்தன. இதனால் தலைவரின் தீர்மானிக்கும் வாக்கின் மூலம் இரகசிய வாக்கெடுப்புக்கு ஆதரவாக பத்து வாக்குகள் கிடைத்தன. இதன் பிரகாரம் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவாக 10 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் கிடைத்தன. ஒரு வாக்கு செல்லுபடியற்றதாக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அந்நிய செலாவணியை ஈட்டுவதற்காக அநுராதபுரத்தில் வல்லாரை செய்கை

அநுராதபுரம் தினகரன் நிருபர்



வெளிநாட்டு அந்நியச் செலாவணியை ஈட்டும் நோக்கில் அநுராதபுரம் மாவட்டத்தில் வல்லாரை (கொட்டுகொள) செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இச்செய்கையின் முதற்கட்ட பணிகள் அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியாகத்தர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தின் பூரண கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவின் கறம்பாவ தீபதிகம, கல்கடவள, கல்பொத்தேகம , சாலியபுர உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு 1/4 (கால்) ஹெக்டயார் நிலப்பரப்பில் வல்லாரைச் செய்கையினை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைப்பது மட்டுமின்றி செய்கையாளர்களும் பயன் அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தின் நடுகை முன்னேற்றம் குறித்து மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜீ.சேனாரத்ன மற்றும் விவசாய திணைக்கள அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிட்டதுடன் செய்கையாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உடப்பு புளிச்சாக்குளம் வீதியை செப்பனிட கோரிக்கை



உடப்பு குறூப் நிருபர்

உடப்பு, புளிச்சாக்குளம் பிரதான வீதி அண்மையில் பெய்த மழை காரணமாக பாதையில் சில இடங்களில் பாரிய குழிகள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் இந்த வீதியூடாகச் செல்லும் பொது மக்கள் மற்றும் வாகன சாரதிகளும் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதி நீண்ட காலமாக செப்பனிடபடாமல் காணப்படுவதை பலரும் சம்பந்தப்பட்டோரிடம் தெரிவித்தும் இதுவரை இவ்வீதி செப்பனிடப்படாததால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இதனை செய்து தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இந்தியாவிற்கான இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயம் தனது 20வது தூதரக முகாமை கடந்த 14 ஆம் திகதி நடத்தியது. இதன்போது கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா பயனாளிகளுக்கு கொன்சியூலர் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் பிரஜாவுரிமைச் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழகம் முழுவதிலும் உள்ள 18 புனர்வாழ்வு முகாம்களில் இருந்து வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் கலந்துகொண்டனர்.






## திறப்பனை பொலிஸ் நிலைய வளவில் மரக்கறி தோட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்



திறப்பனை பொலிஸ் நிலையத்தின் பிரதான நிர்வாக கட்டிடத்திற்கு முன்பாக உள்ள தோட்டப்பகுதியை அழகுபடுத்தும் வகையில் பூச்செடிகளை வளர்ப்பதற்கு பதிலாக மரக்கறி தோட்ட வேலைத்திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்தும் முன் மாதிரி வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திறப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கயான் சமரக்கோனின் ஆலோசனையின் பேரில் , திறப்பனை பொலிஸில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இந்த தோட்ட உற்பத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இங்கு கத்தரி, முட்டைகோஸ், பாக்கு, தம்பலா, மிளகாய், வெள்ளரி, பூசணி, வட்டக்காய், பீர்க்கு, பாகற்காய், தக்காளி போன்ற பல்வேறு பயிர்கள் இங்கு பயிரிடப்பட்டுள்ளன.



இந்தியா சேலம் மனம் மன்றம் 47 ஆம் ஆண்டு விழாவில் காலடியெடுத்து வைத்துள்ளது. அதனடிப்படையில் திருச்சி இனிய நந்தவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் சந்திரசேகரனது கலை இலக்கியப் பணியைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# தேசிய இளைஞர் படையணி 20 ஆவது ஆண்டு நிறைவு



இலங்கை இளவயதினரை மிகவும் சமநிலையாக மீளுருவாக்கம் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள அரச நிறுவன கட்டமைப்பில், தமக்கு உரித்தளிக்கப்பட்ட இலங்கை இளவயதினரை மீளுருவாக்கம் செய்யும் தேசிய பணிப்பொறுப்பை இருபது ஆண்டு காலமாக இலக்குடன் நிறைவேற்ற அர்ப்பணிப்பு செய்த தேசிய இளைஞர் படையணி தனது 20 ஆவது ஆண்டு நிறைவை பெருமையுடன் கொண்டாடுகிறது. அது மட்டுமன்றி, இளைஞர்களின் பெருமையையும், பலமான நாட்டுக்காக எதிர்காலத்துக்கு பொருத்தமான வகையில் இளைஞர்களை வலுப்படுத்தி வருகிறது.

2002 ஆண்டின் 21 இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் கருத்திட்டமாக நிறுவப்பட்டு 2003 அக்டோபர் 10 ஆம் திகதிய 1309/17 இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்குமாறு 012003 இலக்க இளைஞர் படையணி உத்தரவின் மூலம் இளைஞர் படையணி செயற்படுத்தப்பட்டது.



அவ்வாறு இயங்க ஆரம்பித்த தேசிய இளைஞர் படையணி அரச நிறுவனம் என்ற வகையில் 2002 டிசம்பர் 17 திகதி டி.பி.ஜாயா மாவத்தையிலுள்ள தற்போதைய மஹாவலி கட்டடத்தில் கேர்ணல் சன்ன குணத்திலக்க தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. பயிற்சி பெறும் இளைஞர், யுவதிகள் 'ரேன்ஜர் தலைவர்கள்' எனும் பெயரில் அழைக்கப்பட்டு. முதலாவது பாடநெறி எம்பிலிப்பிட்டிய, எரமினியாய, ஹெய்யன்துடுவ, ரன்டெம்பே ஆகிய 04 ரேன்ஜர் தலைமைத்துவ பயிற்சி நிலையங்களில் ஆரம்பமானது. இரண்டாவது பாடநெறி தொடக்கம் பயிற்சி பெறும் இளைஞர் யுவதிகள் 'ரேன்ஜர்கள்' என அழைக்கப்பட்டு இற்றை வரை நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 57 தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் வரை அதிகரித்துள்ளது. தொடக்கத்தில் ரேன்ஜர் தலைவர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 1000 வரையான பயிலுனர்கள் தற்போது இளைஞர் படையணி பயிற்சி நிலையங்களில் உடற்பயிற்சி போதனாசிரியர்களாக கடமையாற்றுகின்றனர்.

தேசத்தை பலப்படுத்துவதற்காக திறன்மிக்க இளைஞர்களை தாய்நாட்டுக்கு வழங்கும் தேசிய பணியை நிறைவேற்றுதலை தனது முதன்மை குறிக்கோளாக கொண்ட தேசிய இளைஞர் படையணி பல்வேறு அமைச்சுகளின் கீழ் இயங்கி வந்ததுடன், தற்போது விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

சவால்களை வெற்றி கொள்ளும் இளைஞர்களுக்காக ஆளுமை விருத்தி மற்றும் மென் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான பல பாடநெறிகள் தேசிய இளைஞர் படையினால் இளைஞர் தலைமுறைக்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்காகவே திட்டமிடப்பட்ட நிபுணத்துவ அறிவைக் கொண்ட போதனாசிரியர்கள் குழாத்தை கொண்டுள்ள நாவுல வெளிக்களப் பயிற்சி நிலையம் இளைஞர் படையணி இளைஞர் யுவதிகளுக்காக மட்டுமன்றி, வெளிவாரி சேவை நிறுவனங்களின் ஆளணி உறுப்பினர்களுக்கும் முறைப்படியான வெளிக்களப் பயிற்சி வழங்கும் விஷேடமான நிறுவனமாகும்.

சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்துக்காக திறமைமிகு தொழில் வாண்மையாளர்களை உருவாக்குவதற்காக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பை இலக்காக கொண்டு திறமையான விரிவுரையாளர் குழுவின் மேற்பார்வையில் தம்புல்ல *LaHotelier* ஹோட்டல் பயிற்சி பாடசாலை பல பாடநெறிகளை மேற்கொண்டு வருகிறது. அதன்போது *House Keeping, Front Office, Food & Beverage, Pastry & Bakery, International Cooker* ஆகிய பாடநெறிகள் தொடர்பான இலவச பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு ஹோட்டல் துறையில் கௌரவமான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

அடிப்படை பயிற்சிக் காலத்தினுள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி பயிற்சிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற இலங்கை பௌத்த அக்கடமி ஊடாக உயர் சான்றிதழ் வழங்கப்படுவதுடன், இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து தகவல் தொழில்நுட்ப துறையில் உயர் கல்வி கற்க எதிர்பார்க்கும் இளைஞர், யுவதிகளுக்காக வாய்ப்பு வழங்கி பிரயோக தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்ட பாடநெறிக்கான பயிற்சிகள் தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன், பல வேலைசார் தொழிற்பயிற்சி பாடநெறிகளுக்காக விஷேடமான நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்து, அந்த தொழிற்பயிற்சி பாடநெறிகளை கற்று உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளை பெறுவதற்கான வழிகாட்டல்களை இளைஞர், யுவதிகளுக்கு வழங்கும் செயற்பாடுகளில் தேசிய இளைஞர் படையணி ஈடுபட்டு வருகிறது. லங்கா ஹொஸ்பிற்றல் (தனியார்) நிறுவனத்தின் இணை நிறுவனமான லங்கா ஹொஸ்பிற்றல் அக்கடமி ஊடாக மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணியாளர் பாடநெறி, *RSM* கனரக வாகன பாடசாலை ஆகியவற்றுடன் இணைந்து உள்நாட்டு, வெளிநாட்டு நிர்மாண துறையில் நிலவும் தொழில் வாய்ப்புகளுக்கு இலங்கையில் உள்ள தொழிலற்ற இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன், பெக்கோ, லோடர் இயக்குனர் மற்றும் எஸ்கவேற்றர் இயக்குனர் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. *CINEC Campus* நிறுவனத்தினால் நடத்தப்படும் *Marine Welder Fitter, Lathe Machine Operation, Aluminum Fabricating Technician, Welding Technology (4G)* ஆகிய பாடநெறிகளுக்கு முழுமையான புலமைப் பரிசில் தேசிய இளைஞர் படையணியினால் பயிலுனர்களுக்கு வழங்கப்படுகிறது. அத்துடன், வயம்ப தொழில்நுட்ப கல்லூரியால் நடத்தப்படும் ஹோட்டல் பயிற்சி பாடநெறிக்கு முழுமையான புலமைப் பரிசில் வழங்கி, அவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து தொழிற் பாடநெறிகளும் கற்பிக்கப்படும் போது 14 நாட்கள் ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவ பயிற்சி தேசிய இளைஞர் படையணியினால் இலவசமாக வழங்கப்படுகிறது.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள உலக கிராம போக்கை வெற்றிகொண்டு, எதிர்காலத்தில் வெற்றி பெறவேண்டியது விவாதத்துக்கு அப்பாற்பட்டது என்பதனால் இளைஞர், யுவதிகளின் எழுத்தறிவை அதிகரிப்பதற்காக மொழியால் இளைஞர்களை பலப்படுத்துவதற்கு தேசிய இளைஞர் படையணி நிலையங்களில் மொழி ஆய்வுகூடங்கள் உருவாக்கப்பட்டு ஜப்பான், சீன, இஸ்ரேல் மற்றும் கொரிய மொழி ஆற்றலை வழங்குதலும், அதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கு உரிய அடிப்படை தகைமையுடனான மொழி ஆற்றல் வழங்கப்படுகிறது.

ஜோர்தான் வெளிநாட்டு வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் ஜூகி மெஷின் பாடநெறி பயிற்சியை வழங்கி, அவர்கள் ஜோர்தான் நாட்டில் வேலை வாய்ப்பில் ஈடுபடுத்தப்படுவதுடன், ஜோர்தான் தொழிற்பயிற்சி பெற்ற தேசிய இளைஞர் படையணியில் பயிற்சி பெற்ற மூன்றாவது அணியும் தமது கனவை நனவாக்கி தற்போது ஜோர்தான் நாட்டுக்கு சென்றுள்ளனர்.

நாட்டின் உந்து சக்தி என்ற வகையில் இளைஞர்கள் நாட்டின் தேசிய அனர்த்தங்கள் அல்லது தேசிய தேவைகளின் போது முன்வர வேண்டிய பொறுப்புடையவர்கள் எனப்படுகின்றனர்.

சொந்த வீடு கனவாக இருந்த சகோதர மக்களுக்கு நிழல் வழங்கும் நோக்கத்துடன், ஒரு நிலையத்திலிருந்து ஒரு வீடு என்ற வகையில் 58 வீடுகளை நிர்மாணிக்கும் 'நட்பு இல்லம்' (செனெஹெ பியஸ) வீடமைப்பு திட்டத்தின் மூலம் அநாதரவான 58 குடம்பங்களுக்கு வீடு அமைத்து வழங்கும் திட்டத்தின் முதற் கட்டம் தற்போது நிறைவடைந்து, சில நிலையங்கள் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விளையாட்டு திறமைக்கான இளமைக்குரிய பண்புகளை மெருகூட்டி பாடநெறி காலப்பகுதியில் பயிலுனர்கள் வில்வித்தை, வொலிபோல், நெற்போல், வளித்துப்பாக்கி மற்றும் இலக்கை நோக்கி சுடுதல் ஆகிய விளையாட்டுக்களில் பயிலுனர்களை ஈடுபடுத்தி, விளையாட்டு ஆற்றல் உள்ள வெளிவாரி இளைஞர், யுவதிகளையும் அழைத்து, அவர்களை தேசிய மட்ட விளையாட்டு வீரர்களாகவும், வீராங்களைகளாகவும் பயிற்றுவித்தலும் திவுலப்பிற்றிய தேசிய படையணி பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளப்படுகிறது. நடனம், பாடல் மற்றும் இசை ஆற்றல் உள்ள இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்து உரிய பயிற்சி வழங்குவதன் மூலம் தேசிய மட்ட கலைஞராக மிளிரச் செய்வதற்காக யக்கல இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் அழகியல் பயிற்சி



அலகு நிறுவப்பட்டுள்ளது.

இளமையின் தாய்வீடாக மாறியுள்ள தேசிய இளைஞர் படையணியின் நற்பயணத்துக்கு ஆசிர்வாதம் வழங்குவதற்கு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்ஹ, அமைச்சின் செயலாளர் மருத்துவ கலாநிதி அமல் ஹர்ஷ டி சில்வா, தேசிய இளைஞர் படையணியின் தற்போதைய முன்னோடி கேர்னல் தர்ஷன ரத்நாயக்க உள்ளிட்ட அனைத்து ஆளணியினரும் இந்த சந்தர்ப்பத்தில் இணைந்து கொள்கின்றனர்.

**ஷலினி மனீஷா**
**தொடங்கொட ஊடகப் பிரிவு,**
**தேசிய இளைஞர் படையணி**

---

கொழும்பு – அஸ்ரா லங்கா முஸ்லிம் அமைப்பின் (ALMA) முன்னாள் தலைவர் மற்றும் அந்த அமைப்பின் தற்போதைய நம்பிக்கையாளர் உபைதுர் ரஹ்மான் மஹ்மூத் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ (ACYMMAC) பேரவையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களை அண்மையில் கட்டுக்கலையில் சந்தித்து உரையாடினார். இந்த சந்திப்பின் போது அகில இலங்கை வை.எம்.எம்.ஏ (ACYMMAC) பேரவையுடன் தொடர்ந்தும் இணைந்து செயலாற்ற விருப்பம் கொண்டுள்ளதாக தெரிவித்தார். அத்தோடு 160, கிளைக்கொண்டு இயங்கும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ (ACYMMAC) பேரவையின் செயற்பாடுகளையும் பாராட்டினார்.அஸ்ரா லங்கா முஸ்லிம் அமைப்பு (ALMA) கடந்த நான்கு வருடங்களாக வை.எம்.எம்.ஏ (ACYMMAC) பேரவையினால் நடைமுறைப்படுத்தப்படும் ரமழான் உலர் உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் போது தனது ஒத்துழைப்புக்களை வழங்கி வருவது மெச்சத்தக்கது. அதற்காக அந்த அமைப்புக்கு பெருமனதுடன் நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்த சந்திப்பின் போது வை.எம்.எம்.ஏ. (ACYMMAC) பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் உட்பட வை.எம்.எம்.ஏ. (ACYMMAC) பேரவையின் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



## தேசாபிமானி விருது



இறம்பொடை கிளன்லொட்ஜ் ஸ்ரீ ஞானவரதர் ஐயப்ப ஆலய குருக்கள் மகேஸ்வர குருக்களுக்கு சமூக சேவைக்கான தேசாபிமானி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டத்தில் அகில இலங்கை சமூக,கலாசார சுற்றுப்புறச்சூழல் அதிகார சபை ஊடாக இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது. இவரின் சமூக சேவையையும் ஆன்மீக சேவையையும் கருத்திற்கொண்டு இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---



அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஸ்ஹாக் ரஹ்மான் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட 5 இலட்சம் ரூபா செலவில் கெகி/உட நிதிகம அல் மினா மகா வித்தியாலயத்தில் சுற்று மதிலின் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனை பாராளுமன்ற உறுப்பினர் அதிகாரிகளுடன் பார்வையிட்ட பின்னர் எடுத்துக் கொண்ட படம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)






கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா, பாடசாலை அதிபர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது.இதன்போது பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் மாணவ தலைவர்கள் சத்திய பிரமாணம் செய்வதையும் காணலாம்.

(படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

### கற்பித்தல் – கற்றல் செயற்பாட்டை மாற்றுகின்ற மாணவர்களை

# மையமாகக் கொண்ட கல்விமுறை விரைவில் அறிமுகம்



தேசிய கல்வி நிறுவனம் - பணிப்பாளர் நாயகம், -கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன

தேசிய கல்வி நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகமாக செயற்படுபவர் கலாநிதி சுனில் ஜயரத்ன நவரத்ன அவர்கள். அவர் இந்நாட்டு அரச சேவையில் பல்வேறு பதவிகளை வகித்த சிறநத புத்திஜீவியாவார்.

1973 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு இணைந்து வர்த்தக நிர்வாக பட்டப்படிப்பை கற்ற அவர் 1974ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் பணியாற்றி தனது பட்டப்படிப்பை முடித்த பின் 1978 ஆம் ஆண்டு ருஹுனு பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இணைந்து ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தனது அறிவை பகிர்ந்துகொண்டார். அந்தப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக பிரிவை ஆரம்பிப்பதற்கு பங்களிப்புச் செய்ய அவரால் முடிந்தது. 1984ஆம் ஆண்டு உயர் கல்வி அமைச்சினால் கிடைத்த புலமைப்பரிசில் மூலம் ஜப்பான் சென்று அங்கு தனது கலாநிதிப் பட்டத்தை பெற்று அமெரிக்கா, அவுஸ்திரேலியா அல்லது ஐரோப்பிய நாடு ஒன்றுக்குச் செல்ல வாய்ப்பு இருந்தபோதும் மீண்டும் நாட்டுக்கு சேவை செய்யும் நோக்குடன் நாடு திரும்பினார். "பாடசாலை, தொழில் சந்தை, அரசியல், கலை, இளைஞர் சேவை திட்டப் பாடசாலை" என்ற பல நிகழ்ச்சிகளை முன்னெடுத்து இந்நாட்டு இளைஞர் யுவதிகளின் திறமையை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் வெளிப்படுத்தி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பை பெற்றுக்கொடுத்து பெரும் சேவை ஒன்றை இந்நாட்டுக்காக மேற்கொண்டார். பின்னர் மலையக அபிவிருத்தி மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் செயலாளராகவும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையும் உயர் கல்வி அமைச்சின் செயலாளராகவும் அவர் இந்நாட்டுக்கு பெரும் சேவை ஆற்றினார். தற்போது தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக செயற்பட்டு 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருந்துகின்ற ஸ்மார்ட் பிள்ளை ஒன்றை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்ற புதிய கல்வி சீர்திருத்த நடவடிக்கையுடன் பாடுபட்டு வருகிறார்.

இலங்கையின் பொது கல்வியின் அபிவிருத்தி மற்றும் நவீனத்துவத்திவ் மேம்பாடுக்காக தலைமை ஏற்கின்ற இந்நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனம் தேசிய கல்வி நிறுவனமாகும். கௌரவ கல்வி அமைச்சர் சுசில் பிரெமஜயந்த அவர்களின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலுக்கு அமைய தற்போது மிக வெற்றிகரமாக செயற்பட்டு வரும் அரசின் புதிய கல்வி சீர்திருத்த செயற்பாடு மற்றும் அதற்கான தேசிய கல்வி நிறுவனத்தின் பணிகளை செயற்படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரத்ன அவர்கள் முதற்கொண்டு அதிகாரிகள் அந்தப் பொறுப்புக்கு தோள் கொடுத்து செயற்பட்டு வருகின்றனர். வெற்றிகரமான இந்த கல்வி சீர்திருத்தத் திட்டத்திற்கு 09 பிரதான அம்சங்கள் இடம்பெற்றிருப்பதோடு அவைகளில் பாடத்திட்ட சீர்திருத்த பகுதிகள் தொடர்பில் பொறுக்கு வழங்கப்பட்டிருக்கும் தேசிய கல்வி நிறுவனம் தற்போது கல்வித் துறையில் புதிய பாதையைத் தேடி சீர்திருத்தங்களை மேற்கொண்டு கல்வித் துறைக்கு அத்தியாவசியமான பல சேவைகளை செய்து கல்விமூலம் பயனுள்ள பல சேவைகளை அறிமுகம் செய்து முறையாக ஒழுங்குபடுத்தி 21ஆம் நூற்றாண்டில் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான குடிமகனை உருவாக்கும் பெரும் சேவையை மேற்கொண்டு வருகிறது. அது தற்போதைய கல்விக்கு உரிய முதல் பொறுப்பாகும். அதன்படி நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார மற்றும் சமய புத்தெழுச்சிக்குத் தேவையான பயன்தரும் குடிமக்களை உருவாக்குகின்ற பெரும் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பது தேசிய கல்வி நிறுவனத்திற்காகும். இந்நாட்டுக்கு புதிய கல்வி சீர்திருத்தம் ஊடாக சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் இதன் வழி உருவாகின்ற புதிய பிள்ளைகள் எவ்வாறானவர்கள்? அதற்காக தேசிய கல்வி நிறுவனத்தின் பணிகள் இடம்பெறுவது எவ்வாறு என்பது மற்றும் 2023ஆம் ஆண்டாகும்போது தேசிய கல்வி நிறுவனத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்பார்ப்புகள் என்ன? என்பது பற்றி சமூகத்தை அறிவூட்டுவது இந்தக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும். அதன் தற்போதைய பணிப்பாளர்நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன அவர்கள் நாட்டின் அபிவிருத்தியில் தேசிய கல்வி நிறுவனத்தின் பணி மற்றும் எதிர்கால திட்டங்களை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

## 2022 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவனம் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு முடிந்ததா?

கடந்த இரண்டு ஆண்டுகளை எடுத்துக்கொண்டால் பல சவால்களுக்கு மத்தியில் கடந்து சென்றது. கொவிட் இருந்தது. பொருளாதார நெருக்கடி வந்தது. இவை அனைத்துக்கு மத்தியிலும் நாம் ஒருநாளும் இந்த நிறுவனத்தை மூடவில்லை. தொடர்ச்சியாக பணியாற்றினோம். கல்வி சீர்திருத்தங்க செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டோம். அதற்காக முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றினோம். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளை எடுத்துக்கொண்டால் கல்விக் கல்லூரிகளின் டிப்ளோமா பட்டம் வழங்க எம்மால் முடியாமல்போனது. ஆனால் கடந்த மாதத்தில் நாம் பன்னிரண்டாயிரம் பேருக்கு அண்மையில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கினோம். மேலும் இரண்டாயிரம் பேருக்கு பட்டம் வழங்கப்படவுள்ளது.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் மொடியுலர் முறை அறிமுகம் செய்கிறோம். அந்த மொடியுலர் முறை பரீட்சித்துப் பார்க்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் முழுமையாக கற்பித்தல் மற்றும் கற்றல் முறை மாற்றத்திற்கு உட்படுகிறது.

ஆசிரியர்கள் குறைவாக கற்பிக்கும் மாணவர்கள் அதிகம் கற்கும், செயற்படும் மிக மகிழ்ச்சியாக கற்கும், பரீட்சை சுமை குறைவாக உள்ள முக்கிய முறை ஒன்றின் கீழ் இந்த மொடியுலர் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. அது தற்போது வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மொடியுலர் முறையை தேர்வு செய்த 100 பாடசாலைகளுக்கு தரம் 1, தரம் 06 மற்றும் தரம் 10க்காக பரீட்சித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதனால் கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டின் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கூட நாம் எமது பணியை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு அர்ப்பணிப்போடு செயற்பட்டோம். எமது இலக்கிற்கு எம்மால் செல்ல முடிந்தது. இதற்கிடையெ சில சிக்கல்கள் எழுந்தன.

## தேசிய கல்வி சீர்திருத்தம் மற்றும் கொள்கையை செயற்படுத்தும்போது தேசிய கல்வி நிறுவனத்தின் அடிப்படை பங்களிப்பு?

தேசிய கல்வி நிறுவனம் உருவானது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் கல்வி அமைச்சராக செயற்பட்ட 1985 ஆம் ஆண்டிலாகும். அது 28ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலமாகும். அதனுடன் 1986இன் 30ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் தான் கல்விக் கல்லூரி நிறுவப்பட்டது. இவை இரண்டும் ஒன்றாகச் செல்லும் இரு சட்டங்கள். அதில் கல்வி தொடர்பில் கொள்கை ஒன்றை தயாரித்தல், கௌரவ கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல், 1 தொடக்கம் 3ஆம் தரம் வரை பாடசலை பாடத் திட்டத்தை மேம்படுத்தி உலகுக்கு பொருந்துகின்ற வகையில் இற்றைப்படுத்தல் ஆகியவை தேசிய கல்வி நிறுவனம் அடிப்படையாக எதிர்பார்க்கின் நோக்கங்கள் சிலவாகும். தற்போது இந்த நிறுவனம் மூலம் பாலர் பாடசாலை பாடத்திட்டம் முதல் தரம் 13 வரை பாடத்திட்டத்தை தயாரித்தல் மேற்கொள்ளப்படுவதோடு கல்விக் கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து, அதற்கு தேவையான பாடத்திட்டத்தை தயாரித்தல் அந்த ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்த மற்றும் அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கல் இதன்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அதேபோன்று அதிபர்கள் உட்பட கல்வித் துறையில் இருக்கின்ற அனைவருக்கும் பயிற்சி அளித்தல், அந்த அனைவரும் தொழில்முறையாக மேம்படுத்துவது மேற்கொள்ளப்படுகிறது. பட்டத்துடன் ஆசிரியராவதற்குத் தேவையான தொழில் தகைமை, பலவற்றை இங்கு கற்பதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. ஆசிரியர் ஒருவரின் தொழில்முறையை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில் தகைமை, நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிற்சிக் கற்கை மற்றும் பட்டப்படிப்புகள், பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, முதுமாணி ஆகிவை பெற்றுத்தரப்படுகின்றன. எதிர்காலத்தில் கலாநிதிப் பட்டமும் இந்த நிறுவனத்தின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக நாடு முழுவதும் இருக்கின்ற தேசிய கல்வி நிறுவனத்தின் கற்றல் நிலையங்கள் செயற்படுகின்றன.

## தற்போது உள்ள கல்வி மற்றும் அறிமுகப்படுத்தும் மொடியுலர் கல்வி முறைக்கு இடையே உள்ள மாற்றம் என்ன?

தற்போது இருக்கின்ற கல்வி மூலம் மனனம் செய்யு பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட மாணவர்களையே உருவாக்குகிறது. அதாவது 3சு பிள்ளை ஒன்றையாகும். சநயனைபெஇ ரசவைபை யசவைாஅநவைஉ யனெ ளரடிதநஉவ மஙெடநனபந பிள்ளை.

ஆனால் இருபத்தி ஓராம் நூற்றாண்டுக்கு அந்தப் பிள்ளை போதுமாக இல்லை. இருபத்தி ஓராம் நூற்றாண்டுக்கு தேவையாக இருப்பது பிரச்சினைகளை தீர்க்க முடியுமான படைப்பாற்றல் உடைய பிள்ளைகளாகும். தொழில்முயற்சி மனநிலையைக் கொண்ட பிள்ளை. மற்றவர்களுடன் வேலை செய்ய முடியுமான பிள்ளை. அதனுடன் சிறந்த தொடர்பாடல் இருக்கின்ற பிள்ளை. அத்தோடு தமது நாட்டைப் பற்றி நினைக்கின்ற பிள்ளை. அடுத்தது ஊடக அறிவு மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு, டிஜிட்டல் அறிவு, நிதி அறிவு போன்ற பல விடயங்கள் பற்றி புதிதாக தெரிகின்ற பிள்ளை. அவ்வாறான ஒரு பிள்ளையை தான் புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் நாம் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கிறோம். இந்த மொடியுலர் முறை மூலம் அவ்வாறான ஒரு பிள்ளை இருக்கும் பரீட்சை முறை ஊடாக ஒருபோதும் உருவாகாது.

பாடசாலையில் இந்தப் பிள்ளைக்கு தனியாகவன்றி குழு ஒன்றாக கல்வி கற்க விட வேண்டும். மற்றது இணையதளத்தை பயன்படுத்தி குறித்த பாடத்திற்குத் தேவையான தகவல்களை கண்டறிந்து தமது அறிவை வீட்டில் இருக்கும் சமூகத்தின் அறிவை பயன்படுத்தி குழு ஒன்றாக ஆசிரியர்களுக்கு இது பற்றி ஒப்படை மேற்கொள்ள வேண்டி வரும். இந்த கல்வி முறை மூலம் பிள்ளைகள் சுயமான கற்றலுக்குச் செல்கிறார்கள்.

## எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாடத்திட்டத்தை மாற்றுவது சற்று சவாலானது தானே?

ஆம். அது தான் இப்போது நடைபெறுகிறது. எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் இந்த மாற்றம் நிகழ்கிறது. இந்தப் பாடத்திட்ட மாற்றம் முன்னர் செய்தது போன்ற மாற்றம் அல்லத. இம்முறை ஒட்டுமொத்த கல்வி முறையும் மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகிறது.

## எதிர்வரும் புத்தாண்டான 2023 எவ்வாறான ஓர் ஆண்டாக இருக்கும்?

நாட்டின் திருப்புமுனையாக கல்வி சீர்திருத்தங்களில் பாடத்திட்ட சீர்திருத்தத்திற்கு அடித்தளம் ஒன்று போடப்படுகின்ற ஆண்டாக எதிர்வரும் ஆண்டு மற்றும் 2024ஆம் ஆண்டு இருக்கும். கடந்த இரண்டரை ஆண்டு முழுவதும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடத்திட்டத்தை சீர்திருத்துவதற்கு பேச்சுவார்த்தை நடத்தினோம். அதன்படி சிறந்த கருத்துகளை பெற்று அதனை திட்டமிட்டிருக்கிறோம். மொடியுலர் தயாரித்திருக்கிறோம். அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் தரம் 1, தரம் 6, தரம் 10 ஆகிய வகுப்புகளில் இந்த பரிட்சாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த பரீட்சித்தல் மூலம் தேவையான மாற்றங்களுக்கு உட்படுத்தி 2024ஆம் ஆண்டு 1, 6, 10 தரங்களில் முழுமையாக தற்போதிருக்கும் கல்வி மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகிறது.

## அது எவ்வாறு நிகழ்கிறது என்பதை கூறுவதொன்றால்?

தற்போது எமது நாட்டிடம் ஆங்கிலேயர்களால் அறிமுகம் செய்யப்பட்ட கல்வி முறையே உள்ளது. அவர்களுக்கு தேவை அவர்களின் காணி, தோட்டம், தொழிற்சாலையை நிர்விக்கின்றவர்களை உருவாக்குவதாகும். இந்த கல்வி முறை மூலம் பிள்ளைகளுக்கு வாசிக்க முடியும், எழுத முடியும். கணக்குப் போட முடியும். ஆனால் இவைகள் மாத்திரம் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை வெற்றிகொள்ள போதுமானதல்ல. இதுவரை கற்ற பிள்ளைகள் கோட்பாடுகளை மனனமிட்டு வந்தவர்கள். ஆனால் இன்றைய காலத்தின் பிள்ளைகளுக்கு இதற்கு அப்பால் சென்ற திறமைகள் தேவை என்பது தெரிகிறது. பிள்ளைகள் படைப்பாற்றல் கொண்டவர்களாக இருக்க வேண்டும். புத்தாக்க சிந்தனையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். புத்திசாலித்தனத்துடன் இருக்க வேண்டும. சிக்கல்களை தீர்க்கின்ற திறன் இருக்க வேண்டும். மற்றது மற்றவர்களுடன் வேலை செய்யும் திறன் இருக்க வேண்ம். எந்த ஒருவரும் மற்றவர்களுடன் பிரச்சினை ஏற்படுத்தாது செயற்படுவதற்கு மற்றவர்களுடன் ஒத்துழைப்போடு வேலை செய்யும் திறனை வளர்க்க வேண்டும். அது தற்போதுள்ள கல்வியில் பார்க்க முடியாது. ஏனென்றால் பிள்ளை தனியாகக் கற்பதாலாகும். மற்ற விடயம் தான் சிறந்த தொடர்பாடல் உடையவர்களை உருவாக்குதல். இது தான் இருபத்தி ஓராம் நூற்றாண்டின் கல்வித் திறன் என்பது. கல்வித் திறனின் கீழ் மேல் குறிப்பிட்ட நான்கு விடயங்களும் இருக்க வேண்டும். இருக்க வேண்டிய மற்றது அறிவுத் திறன், ஊடக அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகிய அனைத்தும் உள்ளடங்கும்.

தற்போது சமூக ஊடகங்கள் உட்பட அனைத்து ஊடகங்களினதும் நல்லது கெட்டதை சரியாக தெரிந்துகொள்ளும் திறனை பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும். அன்று பிள்ளைகளுக்கு கைபேசி தடை செய்யப்பட்டது. ஆனால் இன்று பிள்ளைகள் அதன் ஊடாகத் தான் கல்வி பெறுகிறார்கள். அப்போது அவர்கள் இந்த சாதனங்களை சரியாக தெரிந்துகொள்ள வேண்டி இருக்கும். அப்படி இல்லாமல் தவறாக பயன்படுத்தினால் பிரச்சினைக்கு உள்ளாவது பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் இன்று தொழில்நுட்பம் மிக வலுவானது. இந்த தொழில்நுட்பத்தில் இருக்கின்ற நல்லது கெட்டதை புரிந்துகொண்டு அதற்கமைய பிள்ளைகளை உருவாக்க வேண்டும். மற்ற விடயம் தான் தகவல் அறிவு. சாதாரண பிரச்சினை ஒன்றை தீர்க்கும்போது தகவல்களை பெற்று அவைகளை பகுப்பாய்வு செய்து அதன்படி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

## இந்த புதிய கல்வி முறை மூலம் உருவாகின்ற பிள்ளைகளிடம் இருந்து எதிர்பார்க்கின்ற பண்புகள் என்ன?

புதிய சீர்திருத்தங்கள் மூலம் சாதாரண கல்வி மூலம் வெளிப்படுகின்ற பிள்ளைகளின் ஆறு பண்புகளை நாம் எதிர்பார்க்கிறோம். இதுவரை இருந்த கல்வியினால் சிறந்த பிரஜைகள் உருவாகுவதாகவே நாம் கூறி வந்தோம். ஆனால் இந்த சிறந்த பிரஜை யார் என்பது இதுவரை காலமும் வரையறுக்கப்படவில்லை. நாம் அதுபற்றி பேசினோம். அது கல்வி எது என்ற விடயத்தை பற்றியாகும். அதன்படி புதிய சீர்திருத்தம் வழியாக கட்டியெழுப்பப்படுகின்ற பிள்ளையிடம் ஆறு பண்புகள் இருக்க வேண்டும் என்று நாம் கண்டறிந்தோம்.

அதன்படி சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தின் பின் வெளியே வருகின்ற பிள்ளை தேசிய அபிவிரத்திக்கு செயல்திறனுடன் பங்களிப்புச் செய்ய முடியுமான ஒருவராக இருக்க வேண்டும். அவ்வாறான ஒரு பிள்ளை தேசிய கல்வி மூலம் உருவாக வேண்டும். இங்கு அவர் பட்டதாரியாக இருக்க வேண்டியதில்லை. அவர் ஒரு கட்டிட பணியாளர், தச்சர் ஆகக் கூட இருக்க முடியும். ஆனால் தமது தொழிலில் ஒழுக்கத்தை பேணும், தொழிலுடன் தொடர்புபட்ட புதிய உபகரணங்களை பயன்படுத்தும், தாம் செய்கின்ற அந்த செயற்பாட்டை சரியான மனசாட்சியுடன் செய்கின்ற ஒருவர் என்ற வகையில் அதற்கு தேவையான சிந்தனையுடன் கல்வி பெற்று வர வேண்டும். தற்போதைய கல்விப் போக்கு மூலம் அவ்வாறான நபர்கள் உருவாவதில்லை. அதேபோன்று செயல்திறன் பங்களிப்பு மற்றும் செயல்திறன் கொண்ட பயன்மிக்க ஊழியர்களாக இருக்க வேண்டும். ஸ்மார்ட் சுய தொழிலாளராக இருக்க வேண்டும். ஏனென்றால் இன்று இருப்பது தமக்கு கிடைக்கின்ற சம்பளத்துக்காவது பணியாற்றாதவர்கள் தான். இதன் வழி நாம் எதிர்பார்ப்பது தமக்குக் கிடைக்கும் சம்பளம். வருமானம் போன்று இரண்டு மூன்று மடங்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் ஒருவரை உருவாக்குவதாகும். முதலில் நாட்டைப் பற்றி நினைக்கின்ற பின்னர் தமது நிறுவனத்தைப் பற்றியும் மூன்றாவது தமது குடும்பத்தை பற்றியும் இறுதியாக தம்மை பற்றியும் நினைக்கின்ற ஒருவரை உருவாக்குவதே எமது நோக்கம். கல்வி மூலம் ஊழியர்களை மாத்திரம் உருவாக்க வேண்டும் என்றே நாம் நினைக்கிறோம். ஊழியர்களை மாத்திரமல்ல சுய தொழிலில் ஈடுபடுகின்ற மற்றும் மற்றவர்களுக்கு வேலை வழங்க முடியுமான தொழில் முயற்சியாளர்களையும் நாம் நாட்டுக்காக உருவாக்க வேண்டும்.

## இதன் ஊடே செயற்படுத்தப்படுகின்ற பரீட்சை முறை என்ன?

பரீட்சை முறையை எடுத்துக்கொண்டால் அது தேசிய பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற பரீட்சை முறையே செயற்படுகிறது. அதேபோன்று பாடசாலையில் செய்கின்ற கற்றலுக்கு அதிக இடம் அளிக்கப்படுகிறது. பரீட்சைக்கு தோற்ற முடியாதபோதும் பாடசாலையில் செய்கின்ற செயற்பாடுகளில் இந்தப் பிள்ளை ஏ அல்லது பி என்பதையும் திறமையான பிள்ளை என்பதை கண்டறிய முடியும். அனைத்து பிள்ளைகளும் சிறு வயதில் இருந்து ஒரு தொழிலுக்கு விருப்பம் இருக்கும். எழுத்தில் விருப்பம் இருக்கும் ஒருவரானால் அவர் ஊடகவியலாளர், எழுத்தாளராக தேவையான உதவிகளை செய்கிறோம். புகைப்படப்பிடிப்பில் விருப்பமாயின் அவர் புகைப்படப்பிடிப்பாளர். அந்த வகையில் முன்னேறிச் செல்ல உதவுகிறோம். விஞ்ஞானம், தொழில்நுட்பத்திற்கு விருப்பம் தெரிவிப்பதாயின் அதன் வழி முன்னேறிச் செல்ல உதவுகிறோம். பிள்ளைகளின் திறமையை கண்டறிந்து அதற்கு உதவுவதும் ஆதரவு அளிப்பதற்குமான கல்வி முறை ஒன்று தான் இவ்வாறு கொண்டுவரப்படுகிறது. அதேபோன்று புத்தகங்களில் இருக்கின்றவற்றை மனனம் செய்து தலைக்குள் புகுத்தும் கல்வி முறையல்ல. புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் பாடசாலை கல்வித் திட்டம் முழுமையாக மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகிறது. இங்கு முன்னர் போன்று புத்தகங்களை மனனமிட்டு பரீட்சையில் எழுதுவதை எதிர்பார்ப்பதில்லை. அதற்கு பதில் பாடசாலை தவணைக்கு பதிலாக செமஸ்டர் வருகிறது. பாடப் புத்தகத்திற்கு பதில் பயிற்சிப் புத்தகம் (மொடியுலர்) வருகிறது. இந்த மொடியுலருக்கு அமைய அறிவை எல்லா இடங்களில் இருந்தும் பெற்றுக் கொள்ள முடியும். பாடாசலையில் இருந்து, வீட்டில் இருந்து, சமூகத்தில் இருந்து பெறலாம். 10 வாரங்கள் மொடியுலர் தான் இருக்கின்றது. வருடத்தை 14 வாரங்களுக்கு பிரித்து அதில் 10 வாரங்கள் கட்டாயம் பிள்ளைகள் கற்கின்றனர். இது செயல்திறன் கொண்ட கற்றல் முறை. வகுப்பு அறைக்குள் இருந்து ஆசிரியர் கூறுபவற்றை கேட்டிருப்பதல்ல. உதாரணமாக வகுப்பின் மாணவர்கள் குழுக்களாக பிரிக்கப்படுகின்றனர். மொடியுல் அவர்களினடம் இருக்கிறது. இங்கு ஆசிரியர் செய்வது கற்பித்தலன்றி வழிகாட்டலாகும். ஒவ்வொரு மொடியுலரிலும் பிள்ளைகள் தமக்கு இருக்கின்ற விடயங்களை விட அதிக தகவல்களை தேடிப் பெற்று தேவையெனில் இணையதளத்தில் கூட தகவல்களை சேகரித்து அதன்படி கற்கின்றனர். கற்று குழுவாக வகுப்புக்கு முன்னால் வந்து ஆசிரியருக்கு முன்னால் அந்த விடயங்களை முன்வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பிள்ளைகள் குழு ஒன்றாக ஒன்றிணை செயற்பட கற்கிறார்கள். தலைமைத்துவத்தை வழங்க கற்றுக்கொள்கிறார்கள். புத்தகத்திற்கு மட்டுப்படாது தகவல்களை தேடி கற்கிறார்கள். அந்தத் தகவல்கள் தொடர்பில் உரையாட பழகுகிறார்கள். அவ்வாறு தேடிய விடயங்களை நாடக அடிப்படையில் அல்லது கவிதையாக முன்வைக்க பழகுவார்கள். பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக தீர்ப்பதற்கு பழகுவார்கள். அதற்குத் தான் நாம் புள்ளிகள் வழங்குகிறோம். இல்லாமல் ஓர் ஆண்டு முழுவதும் கற்று எழுதுகின்ற மூன்று மணி நேர பரீட்சைத் தாளுக்கு புள்ளிகள் வழங்குவதில்லை. இதன் கீழ் பிள்ளைகள் கற்றலில் செயல்திறன் கொண்டவர்களாகின்றனர். அது மாத்திரம் அல்ல ஊருக்கு, சுற்றுச்சூழலுக்கு தாம் கற்றவற்றை செயற்படுத்துவார்கள். சுற்றாடல் அழிவடைந்து இருப்பதாயின் அதற்கு தீர்வு காண்பது எப்படி? குப்பை பிரச்சினை ஒன்று இருப்பதாயின் அதற்கு தீர்வு வழங்குவது எவ்வாறு என்பது போன்றவற்றை புதுப்புது முறைகளில் தீர்வு காண்பதற்கு இதன்மூலம் பிள்ளைகள் முன்வருகிறார்கள். வெறுமனே கோட்பாடுகளை கற்று பயனில்லை. கோட்பாடுகள் எவ்வறு சுற்றுப்புற நிலைமையுடன் பொருந்தச் செய்வது என்பது பற்றி பிள்ளைகளுக்கு இதன்மூலம் அறிவு கிடைக்கிறது. இவ்வாறு பிள்ளைகள் செயல்திறன் மிக்க, நடைமுறை சாத்தியமான கல்வி ஒன்றுடன் தொடர்புபடுத்துவதற்கே நாம் இப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

## இந்த முறையின்கீழ் புள்ளி மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது எவ்வாறு?

ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் கற்று மூன்று மணி நேர பரீட்சையிலேயே அனைத்தையும் செய்கிறார்கள். ஆனால் இந்த முறை முழுமையாக மாறுகிறது. மதிப்பாய்வு (குழசஅயவைநந) மற்றும் மதிப்பீடு (ழரஅஅயவைநந) அதாவது, அன்றாட திறன் அடிப்படையில் புள்ளி வழங்கப்படுகிறது. கல்வி அமைச்சு, பரீட்சை ஆணையாளர் அலுவலகம், புத்தகப் பதிப்பு நிறுவனம், மாகாண சபை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தலையிட்டு இந்த செயற்பாட்டை மேற்கொள்கின்றனர். இங்கு 70 புள்ளிகள் வகுப்பில் கற்பவற்றுக்கு வழங்கப்படும். 30 புள்ளிகள் அளவு கோட்பாட்டு ரீதியான அறிவுக்கு வழங்கப்படும். பிள்ளைகள் அன்றாடம் பாடசாலைக்கு வருகிறார்களா, வீட்டில் வேலை செய்து வருகிறார்களா, பயிற்சிப் புத்தகம் ஒன்றை வைத்திருகிறார்களா மற்றும் நேரத்திற்கு வேலை செய்கிறார்களா என்பது பற்றி தேடிப் பார்த்து அவைகளுக்கு புள்ளிகள் வழங்குகிறோம்.

இலங்கையில் பத்தாயிரம் பாடசாலைகள் உள்ளன. 15000 அதிபர்கள் இருக்கிறார்கள், 4000 ஐ.எஸ்.ஏக்கள் உள்ளனர். கல்வி நிபுணர்கள் நாட்டின் எல்லா இடங்களிலும் உள்ளனர். இந்த மாற்றங்களை செய்வதற்கு இந்த அனைவரும் பங்களிப்புச் செய்கிறார்கள். ஆசிரியர் வழங்கும் புள்ளிகள் மற்றொரு குழுவின் மூலம் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறது. அதனால் பிள்ளைகளுக்கு அநீதி ஏற்படுவதற்கு இருக்கும் வாய்ப்பு மிகக் குறைவு.

## பாடப் புத்தகங்கள் இல்லாமல் போகுமா?

பாடப் புத்தகங்களுக்கு பதில் மொடியுலர் அறிமுகப்படுத்தப்படும். மொடியுலர் ஒன்று என்பது பிள்ளைகளுக்குத் தேவையான அறிவு மாத்திரமன்றி திறமையையும் அதிகரிக்க தேவையான வழிகாட்டலுடன் மதிப்பிடல் என்பதாகும். இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மொடியுலரை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டலையே மேற்கொள்வார்கள். இல்லாமல் ஆசிரியர் பிள்ளைகளுக்கு முழுமையாக கற்பிக்கச் செல்வதில்லை. அப்போது பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்படும். இங்கு வகுப்பறைக்குள் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. பயிற்சி பெறுகின்றபோதே கற்கின்றனர். அப்போது பிள்ளையின் குழு உணர்வு அதிகரிக்கும். பிரச்சினை ஏற்படும்போது பேசி தீர்வைப் பெற முடியும். மின் உபகரணங்கள், இணையதளம், பாடசாலையில் இருக்கின்ற தொழில்நுட்பம் மற்றும் அது தவிர ஸ்மார்ட் கைபேசி ஒன்று இருந்தால் இந்த மொடியுலரை செயற்படுத்துவதற்கு அது மிக முக்கியமாகிறது. தேர்வு செய்யப்பட்ட நூறு பாடசாலைகளுக்கு இந்த மொடியுலர் முறை 2023 ஆம் ஆண்டில் பரீட்சித்தல் முறையாக செயற்படுத்தப்படும். சம்பிரதாயமான கற்பித்தலில் ஆசிரியர் கற்பிக்கிறார் பிள்ளைகள் கேட்கிறார்கள். இந்த முறையில் பிள்ளைகள் செயற்பட்டு கற்கிறார்கள். ஆசிரியர் பின்னால் நின்று அவர்களுக்கு தேவையான வழிகாட்டலை செய்வார். இந்த புதிய கல்வி சீர்திருத்தம் செயற்படுத்தப்படுவதுடன் தற்போதுள்ள பாடப் புத்தகங்கள் தேவையெனில் உதவிப் புத்தகமாக பயன்படுத்தவும் முடியுமாக இருக்கும்.

## தற்போதிருக்கும் கல்வி முறை நாட்டின் எதிர்கால பயணத்திற்கு தடகலாக ஏன் பார்க்கிறீர்கள்?

தற்போதுள்ள கல்வி முறையில் கொட்பாட்டு ரீதியான கற்றல் மாத்திரமே இடம்பெறுகிறது. ஆசிரியர் கற்பிக்கிறார். பிள்ளைகள் மனனமிடுகிறார்கள். 21ஆம் நூற்றாண்டின் கல்வியில் இவ்வாறு செய்ய முடியாது. திறமை அடிப்படையில் பிள்ளைகள் செயற்பட முடியும். அதற்கமைய பேச முடியும். சுதந்திரமாக தொடர்பாடலில் ஈடுபட முடியும். ஆக்கத்திறனுடன் முன்வைக்க முடியும். அணி ஒன்றாக வேலை செய்ய முடியும். அவ்வாறு செயற்பாடு கொண்ட கற்பித்தல் தான் 21ஆம் நூற்றாண்டுக்கு தேவையாக உள்ளது. அதற்காக இருக்கும் கல்வி முறை மாற்றப்படுகிறது. தற்போதுள்ள கல்வியில் இருப்பது மேம்போக்கான கற்றலாகும். எப்படியாவது மனனமிட்டு பரீட்சையில் எழுவிட்டால் அத்தோடு முடிந்தது. ஆனால் 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவை ஆழமான கற்றல் முறை. விடயங்களை தேடி, அதனை பகுப்பாய்வு செய்து தீர்வு தேட முடியுமானவர்களே தேவையாக உள்ளனர். தற்போதுள்ள முறையை மாற்ற வேண்டுமாயின், பிள்ளை 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருந்த வேண்டுமாயின், அவரிடம் தர்க்கரீதியான சிந்தனை அதாவது மனனம் செய்யாது தர்க்கரீதியில் கண்டறிந்து செயற்படுவதாகும். ஆக்கத்திறனுடன், மற்றவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படக்கூடிய, சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டவராக இருக்கின்ற தகவல்களை சிறந்த முறையில் பொருத்தி தர்க்க ரீதியில் முன்வைக்கும் திறன், பல்வேறு ஊடகங்களை கையாளக்கூடிய திறமை, சரியான முறையில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் திறன், நெகழ்வுப் போக்குடன் செயற்படும் திறன், குழு ஒன்றுக்கு தலைமை வகிக்கும் திறன், தலைமை ஏற்று ஒரு விடயத்தை ஆரம்பிக்கும் திறன், குறைந்த வளத்துடன் அதிக நன்மை பெறும் பயன்மிகு திறமை மற்றும் சமூகத்துடன் செயற்படும் திறமை ஆகிவை அந்த பன்னிரண்டு விடயங்களாகும். இந்த பன்னிரண்டு திறன்களையும் உருவாக்க முடியுமான முறையில் பாடத்திட்டம் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

## பரீட்சைக்கு கேள்வி தயாரிக்கும்போது பின்பற்றப்படுகின்ற செயல்முறையை தெளிவுபடுத்துங்கள்?

பரீட்சையில் கேட்கப்படுவது நடைமுறை ரீதியான கேள்விகள். உதாரணமாக பச்சைக் கொச்சிக்காய் விலை பெப்ரவரி, மார்ச் ஆகும்போது அதிகரிப்பதை பார்க்கும்போது அந்தப் பிரச்சினையை அவதானித்து பொருளாதார விஞ்ஞானத்தின் கேள்வி நிரம்பல் கோட்பாட்டை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்து அவ்வாறு நடக்காமல் இருக்க முன்மொழிவுகளை தரவும் என்று கேள்வி தயாரிக்க முடியும். தினசரி காலை மற்றும் மாலை ஏற்படுகின்ற வாகன நெரிசலுக்கு கேள்வி நிரம்பல் கோட்பாட்டுக்கு அமைய தீர்வு காண்பது போன்றவற்றையும் இங்கு குறிப்பிட்டு கூற முடியும். பிள்ளைகள் கற்கும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி ஆசிரியர்கள் சொல்லிக்கொடுக்க வேண்டும். மேலும் தற்போது நாட்டில் உள்ள டொலர் பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை, மின்சார பிரச்சினை, எரிவாயு பிரச்சினை, உணவுப் பிரச்சினை போன்ற பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மற்றும் அந்தத் தீர்வுகளை முன்மொழிவதற்கும் மேல் நிலை வகுப்புகளின் பிள்ளைகளுக்கு இந்த புதிய கல்வி முறையில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**துஷாரி நெரஞ்சா விக்ரமசிங்க**
**படம் - மாலன் கருணாரத்ன**

# டொலர் சம்பாதிக்கும் ஊழியர்களை பாதுகாக்கின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்



## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிக்குழு தலைவர், மஹேந்திர குமாரசிங்க

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிகத்தின் தற்போதைய தலைவராக மகேந்திர குமாரசிங்க அவர்கள் செயற்படுகிறார். பல தனியார் நிறுவனங்களில் பொறுப்புகளை வகித்த அவர் தற்போது வெளிநாட்டு வேலையாப்பு துறைக்கு பொறுப்பான அமைச்சர் மனுஷ நாணயக்கார அவர்களின் அழைப்புடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவராக பணியை ஆரம்பித்ததோடு இலங்கையில் அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை மேற்கொள்வதற்கு தேவையான வழிகாட்டலை செய்வது அவரின் முக்கிய பணியாக உள்ளது.

வெளிநாட்டுக்குச் சென்றிருக்கும் இலங்கை தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அண்மைக் காலத்தில் ஊடகங்கள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

வெளியாகி இருக்கும் தகவல்களின்படி அவர்களின் பெரும்பாலானவர்கள், சுற்றுலா விசா மூலம் வெளிநாடு சென்றிருப்பவர்களாவர். "சரியான பாதையில் வெளிநாடு செல்லுங்கள்..." என்று எத்தனைதான் கூறினாலும், அதனை கேட்காது பல்வேறு மோசடியான வழிகளில் வெளிநாடு செல்வதன் மூலம், பிரச்சினைக்கு உள்ளாவது அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மாத்திரமல்ல, நாடு ஒன்றாக அது ஒரு கறுப்புப் புள்ளியாகும். அவர்களின் பிரச்சினைக்காக தலையிடுவது மற்றும் அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்காக அந்த நாட்டுக்கு தண்டப் பணத்தை செலுத்த வேண்டி ஏற்படுவது இலங்கை அரசுக்காகும். வாய்ப்புகள் இருப்பதனால், அவ்வாறு செய்யாது சரியான பாதையில் வெளிநாடு செல்லுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக தலைவர் மகேந்திர குமாரசிங்க அவர்கள் வலுயுறுத்துகிறார். இலங்கை மக்கள் வேலை தேடி வெளிநாடு சென்று பிரச்சினையில் சிக்குவது தொடர்ந்து நிகழக்கூடாது என்பதாலேயே அவர் இதனை கூறுகிறார். "உலகளாவிய பெருந்தொற்றுக்குப் பின்னர் இலங்கையர்கள் அதிகம் வெளிநாடு செல்வதில் ஈடுபாடு காட்டும் போக்கு ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலைமையும் அவர்கள் இவ்வாறு வெளிநாடு செல்வதற்கு தாக்கம் செலுத்தியுள்ளது. அதன்படி 2022 ஆம் ஆண்டில் 53,702 பணியாளர்களும், 2021ஆம் ஆண்டு 122,865 பணியாளர்களும் மற்றும் 2022 ஜனவரி தொடக்கம் நவம்பர் இறுதி வரை 285,000 பணியாளர்களும் வெளிநாட்டில் தொழில் பெற்று எமது அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

- தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் 34%
- தேர்ச்சி பெறாத ஊழியர்கள் 30%
- வீட்டுப்பராமரிப்பு உதவியாளர்கள் 24%
- தொழில்முறை தரத்திலான தொழில்கள் 5%
- எழுதுவினைஞர் துறை 4%
- நடுத்தர அளவிலான தொழில்கள் 3%
- 1 வீதத்தினர் பகுதித் தேர்ச்சி தொழில்களுக்காக பதிவு செய்துள்ளனர். அதில் அதிகமானவர்கள் மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக்காகவே சென்றுள்ளனர்.

இந்த ஆண்டு முடிவின்போது 300,000 அளவு தொழிலாளர்கள் வெளிநாடு செல்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். குறிப்பாக கூறுவதென்றால், நாம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்புகின்ற நிறுவனம் ஒன்றல்ல. வெளிநாடு செல்கின்ற நபர்கள் மற்றும் அதற்காக செயற்படுகின்ற முகவர்களை பதிவு செய்கின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற அரச நிறுவனமாக எமது நிறுவனம் உள்ளது.

அதனால் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் வசதிக்காக செயற்படுகின்ற அதேநேரம், முகவர்களை ஒழுங்குமுறைப்படுத்தி அவர்களுக்கு உள்ள தடங்கல்களை அகற்றுவது, எமது பணிகளில் உள்ளடங்கும். அதேபோன்று வெளிநாடு செல்கின்ற தொழிலாளர்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற சில தடங்கல்களுக்காக அரச மட்டத்தில் செய்ய வேண்டிய அழுத்தங்கள் தொடர்பிலும் நாம் தலையிடுகிறோம். உதாரணமாக, ஐரோப்பாவுக்கு செல்லும்போது இங்கு தூ தரக அலுவலக வசதிகள் இல்லாததன் காரணமாக, சில நாடுகளுக்கு விசா பெறுவதற்கு இரண்டு வாரங்கள் இந்தியாவில் இருக்க வேண்டி ஏற்படுகிறது. அவ்வாறான பிரச்சினைகளின்போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் தொடர்புகொண்டு முடியுமாயின் வெளிநாட்டு தொடர்பை மீண்டும் கட்டியெழுப்பும் முறைமை ஒன்றை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும்.

அதேபோன்று நல்ல சம்பளம் ஒன்றுக்காக வெளிநாடு செல்வதை ஊக்குவிப்பதற்கு நாம் செயற்படுகிறோம். விட்டுப் பணிப்பெண்களாக எமது பெண்கள் வெளிநாடு செல்வது, இன்று பெரும் சமூக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற விடயமாகும். அது குடும்பத்திற்கும் பிள்ளைகளுக்கும் பாதிப்பை செலுத்தும் உணர்வுமிக்க பிரச்சினை. அதனால் வீட்டுப் பணிப்பெண்களை விடவும், தேர்ச்சி பெற்ற மின் தொழில்நுட்பவியலாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் போன்ற NVQ தரத்திலான தகைமை பெற்ற தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கே, நாம் தற்போது அதிகம் பாடுபடுகிறோம்.

இவ்வாறான திட்டங்களை பரந்த அளவில் செயற்படுத்தும்போது, வேறு பிரச்சினைகளுக்கு காலத்தை செலவிட வேண்டி ஏற்படுவது எமக்கு இருக்கு பெரும் தடங்கலாகும். உதாரணமாக, சுற்றுலா விசாவில் சென்று பிரச்சினைக்கு உள்ளானால் நாடு ஒன்று என்ற வகையில் எம்மால் சும்மா இருக்க முடியாது. விசிட் விசா வழங்குவது சுற்றுலாவுக்கு மாத்திரம் தான். ஆனால் அவ்வாறு சென்று களவாக தங்கியிருந்து பிரச்சினைக்கு உள்ளானால். மீண்டும் வர விமான டிக்கெட் மாத்திரம் அல்ல, அந்நாடு சார்ந்த தண்டப் பணத்தையும் நாம் டொலரில் செலுத்த வேண்டும். இந்த சுற்றுலா விசாவில் சென்று செய்கின்ற அறிவுக்கு ஒவ்வாத வேலைகளை இப்போதாவது நிறுத்த வேண்டும். ஏனென்றால். சரியான பாதையில் செல்ல முடியுமான பணியாளர்களின் பாதுகாப்புக்காக சட்டபூர்வமான முறை ஒன்று உள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பது வருமானம் ஈட்டும் அரச நிறுவனம் ஒன்றாகும். அவ்வாறு ஈட்டுகின்ற வருவாயில் வெளிநாடு செல்கின்ற ஊழியர்களுக்கு மற்றும் அவர்களின் குடுபத்தினருக்கு உச்ச நலன்புரி சேவையை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றாகும். அதேபோன்று அரசுக்கு வருவாய் பெற்றுத்தரும் நிறுவனம் ஒன்றாகும்.

இந்தத் துறைக்கு பொறுப்பான அமைச்சர் கௌரவ மனுஷ நாணயக்கார அவர்களின் ஆலோசனைக்கு அமைய, இலங்கைக்கு சட்டபூர்வமாக அந்நியச் செலாவணி அனுப்பும் தொழிலாளர்களுக்கு, சுங்க வரியற்ற மின்சாரக் கார் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வெளிநாட்டு தொழிலாளர்களின் டியுட்டி பிரீ எலவன்ஸை அதிகரிப்பதற்கு நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அதேபோன்று, தாய்மார் வெளிநாடு சென்றிருக்கும் 2-5 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்புக்காக, பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு துறைசார் அமைச்சரிடம் இருந்து ஆலோசனை கிடைத்துள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலையில் ஈடுபடும் ஊழியர் ஒருவரின் வயது 60ஐ பூர்த்தி செய்த பின் மாதாந்த ஓய்வூதியம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு "மனுசவி" பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையுடன் இணைந்து செயற்படுத்தப்படுகிறது. அது தவிர, வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்களின் நன்மைக்காக மேலும் பல திட்டங்கள் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ளன.

எவ்வாறாயினும், வெளிநாட்டு தொழிலில் ஈடுபடுகின்ற இலங்கை தொழிலாளர்கள் இந்நாட்டுக்கு அனுப்புகின்ற வெளிநாட்டுப் பணம் இந்நாட்டு பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க இடத்தை பெறுகிறது. 2021ஆம் ஆண்டுக்கு முன்னர் 500-700 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இடையே தொழிலாளர் அனுப்பும் வெளிநாட்டுப் பணம் எமது பொருளாதாரத்திற்கு கிடைத்தது. அந்த எண்ணிக்கை 2022 பெப்ரவரி மாதமாகும்போது 204.9 மில்லியன் அமெரிக்க டொலர் என குறைவான அளவை பதிவு செய்தபோதும், 2022 ஒக்டோபர் மாத்தில் இந்நாட்டுக்கு கிடைத்த தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பணம் 355.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை உயர்ந்துள்ளது. அதன்படி இந்நாட்டுக்கு அனுப்புகின்ற தொழிலாளர் வெளிநாட்டுப் பணம் 2022 பெப்ரவரி மாதம் தொடக்கம் 2022 ஒக்டோபர் மாதம் வரை 150.5 மில்லியன் அமெரிக்க டொலர் வரை படிப்படியான அதிகரிப்பை பெற்றுள்ளது.

அதேபோன்று, இலங்கை தொழிலாளர்களை தகைமையுடையவர்களாக வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக செயற்படும் பல்வேறு நிகழ்ச்சிகளில், 2022 ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் 20ஆம் திகதி வரை இஸ்ரேலில் வீட்டை அடிப்படையாகக் கொண்ட செவிலியர் வேலைக்காக 265 பேருக்கு தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதோடு, அதில் 164 பேர் தற்போது புறப்பட்டுச் சென்றுள்ளனர். இது அரச மட்டத்தில் செயற்படுகின்ற சில சந்தர்ப்பங்கள் மாத்திரமே. எமது துறைசார் அமைச்சர் மேற்கொள்கின்ற விஜயங்களில், வெளிநாட்டு அரசுகள் அவர்களின் நாடுகளில் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு இணக்கத்தை வெளிப்படுத்துகின்றனர். எதிர்காலத்தில் அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் எமது நாட்டுக்கு கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றை எதிர்பார்க்கின்றவர்கள், அங்கிகாரத்துடன் அதிக சம்பளம் பெற முடியுமான இடம் ஒன்றுக்கு செல்ல முடியுமான வகையில், திறமையை மேம்படுத்திக்கொள்ளுங்கள். அதற்காக உதவி புரிய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் செயற்படுகிறது என்ற செய்தியையே நாம் வழங்க விரும்புகிறோம்..."

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தற்போது ஜப்பான் அரசின் வேலை வாய்ப்புகள் உட்பட அரச ஒப்பந்த அடிப்படையில் கிடைக்கின்ற வேலைவாய்ப்புகளுக்காக, தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றில் அதிக அவதானம் செலுத்தி உள்ளது.

அந்தப் பயிற்சி இடம்பெறும் முறை தொடர்பில், பிரதிப் பொதுமுகாமையாளர்/ பயிற்சி மற்றும் நியமனம், செனரத் யாப்பா அவர்கள் இவ்வாறு தெளிவுபடுத்தினார்,

"பணியகத்திடம் உள்ள 17 நிலையங்களில், வெளிநாடு செல்லும் தொழிலாளர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். தற்போது அந்த 17 நிலையங்களில் 13இல் ஜப்பான் மொழிப் பயிற்சி நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. அது தவிர, தேசிய நிகழ்ச்சி ஒன்றாக 5,000 பேருக்கு ஜப்பான் மொழி கற்பிக்கும் நிகழ்ச்சித் தொடர் ஒன்றும் செயற்படுகிறது. அதற்காக கற்பித்தல் செயற்பாட்டுக்கு 23 நிறுவனங்கள் தற்போது பணியகத்துடன் பதிவு செய்துள்ளன.

இங்கு ஜப்பான் மொழி கற்பிக்கின்ற ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் சில நிபந்தனைகளின் கீழ் பணியகத்தின் மூலம் முழுமையாக்கப்படுகிறது. சமுர்த்தி திணைக்களம் அதில் ஒரு நிறுவனமாகும். இதன் கீழ் தொலைதூர கிராமங்களில் பொருளாதார பிரச்சினை உள்ள இளைஞர் யுவதிகளுக்கு சமுர்த்தி திணைக்களம் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

ஜப்பானில் தொழில் புரிய எதிர்பார்க்கின்ற ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விடயம் தான், ஜப்பானுக்கு செல்வதற்கு மூன்று முறைகள் தற்போது ஏற்பட்டுள்ளன.

முதலாவது TIT Program எனும் Technical Intern Trainee நிகழ்ச்சி. இதன் கீழ், 140க்கும் மேற்பட்ட துறைகளில் வேலை வாய்ப்புக்காக விண்ணப்பிக்கும் வாய்ப்பு இலங்கையின் இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக ஜப்பான் மொழியை சாதாரணமாக பேச முடியுமாக இருப்பது முக்கியம். அர்ப்பணிப்பைச் செய்து ஓர் ஆண்டு அளவு ஜப்பான் மொழியை கற்று, குறைந்தது NAT பரீட்சைக்கு தோன்றி அதில் சித்தி பெற்று தொழில்நுட்ப பயிற்சி பெற்றவராக ஜப்பானுக்கு செல்வதே, இந்த நிகழ்ச்சியில் இடம்பெறுகிறது. TIT தகைமையின் கீழ் ஜப்பானுக்குச் செல்கின்ற தொழிலாளர் ஒருவருக்கு 5 ஆண்டுகள் வரை ஜப்பானில் பணி புரிய அனுமதி கிடைப்பதோடு, அங்கு இருக்கும் காலத்தில் அடுத்த தரமான, SSW எனும் Specified Skilled Worker நிகழ்ச்சியின் கீழ் தகைமையை பூர்த்தி செய்ய முடியும். SSW தகைமையின் கீழ் ஈடுபட முடியுமான 14 தொழில் துறைகள் உள்ளன. தகைமையை பூர்த்தி செய்த பின், அவர்களுக்கு ஜப்பானில் நல்ல தொழில் ஒன்றில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. தற்போது இலங்கையர்களுக்காக 3 பிரிவுகளின் கீழ் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

அதாவது உணவுச் சேவை, செவிலியர் சேவை மற்றும் விவசாயம் என்ற மூன்று துறைகளின் கீழ் நல்ல சம்பளம் ஒன்றுடன் வேலை செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. இந்தப் பரீட்சையை இலங்கையில் இருந்தே செய்ய முடியும். இதற்காக ஜப்பான் மொழி மற்றும் தேர்ச்சியை காண்பிக்கும் இரு பரீட்சைகளிலும் சித்தி பெற வேண்டும். இதற்காக தனியார் துறை மற்றும் அரச துறையில் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் ஏற்கனவே பயிற்சிகளை ஆரம்பித்துள்ளன.

மூன்றாவது முறை தான், Professionals எனும் தொழில்முறையில் ஜப்பான் செல்ல கிடைக்கும் வாய்ப்பு. இதன் கீழ் பொறியியலாளர், தகவல் தொழில்நுட்பத் துறையில் தொழில்முறையாளர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. சிறந்த சம்பளத்துடன் இந்தப் பதவிகளுக்கு ஜப்பானில் அதிக கேள்வி இருந்தபோதும், அதற்காக செல்கின்ற இலங்கையர்கள் மிகக் குறைவாகும். இந்த ஆண்டில் செயல்திறன் பதிவைப் பெற்று 4,000க்கும் அதிகமானோர் ஜப்பான் வேலை வாய்ப்புக்காக புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறான மூன்று முறைகளில் ஜப்பான் வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்றிருந்தபோதும், எமது இளைஞர் யுவதிகளுக்கு அதற்காக அடிப்படை தயார்நிலை இல்லை என்பது தான், முக்கிய பிரச்சினையாகும். ஓர் ஆண்டு பாடுபட்டு இதற்கு தேவையான தகுதியை பெற்றுக்கொள்ளுங்கள் என்பதையே நாம் இந்நாட்டி இளைய தலைமுறைக்கு சொல்கிறோம். அதற்கு பின்னர் விண்ணப்பியுங்கள். ஜப்பான் நாட்டில் பணி புரிவதற்கு விருப்பத்துடன் இருக்கின்ற எந்த ஒருவருக்கும் நிச்சமாக இந்த முறையில் சென்று, JFT பரீட்சை, JLPT-N4 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையை அல்லது NAT-4 அல்லது அதன் உயர் மட்டம் ஒன்றுக்கேனும் ஜப்பான் மொழித் திறனை கற்க வேண்டும்.

அதேபோன்று SSW முறைமையின் கீழ் செல்வதாயின், தேர்ச்சி பரீட்சையிலும் சித்திபெற வேண்டும். நல்ல சம்பளத்துடன், தகுதி பெற்ற ஒருவராக சட்டபூர்வமாக ஜப்பான் செல்வதற்கு அதன் ஊடாக உங்களுக்கும் வாய்ப்புக் கிட்டுகிறது. அது மாத்திரம அல்ல, உங்களது எதிர்காலம் மற்றும் தொழில் பாதுகாப்பு உறுதியாகிறது.

TIT நிகழ்ச்சி ஊடாக இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு ஜப்பானில் தொழில் வழங்குவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் IM Japan மற்றும் IRO ஆகிய இரு ஜப்பான் நிறுவனங்களுடன் ஒப்பந்தமாகியுள்ளது. தகைமையுடன் இவ்வாறு ஜப்பான் செல்லும் ஒருவர் ஜப்பானுக்கு செல்ல பணம் அறவிடப்படுவதில்லை. தேர்வு செய்யப்பட்டவர்கள் இலங்கையில் மொழிப் பயிற்சி பெறும் காலத்தில் உணவுக்காக மாத்திரம் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும்..." இவ்வாறு மூன்று முறைகளில் ஜப்பான் வேலை வாய்ப்பு கிட்டியபோதும் அதற்காக, அடிப்படை தயார்நிலை இல்லாதிருப்பதே பிரதான பிரச்சினை. ஓர் ஆண்டு பாடுபட்டு தகைமையை பெற்றுக்கொள்ளுமாறே இந்நாட்டு இளைஞர் யுவதிகளுக்கு நாம் கூறிக்கொள்கிறோம். ஜப்பான் தொழில் வாய்ப்பை பெற தேவை உள்ள எந்த ஒருவரும் கட்டாயம் இந்த முறை மூலம் சென்று, Leve 4 என்ற மட்டத்திற்காவது ஜப்பான் மொழித் திறனை மேம்படுத்த வேண்டும். சிறந்த சம்பளத்துடன், தகுதிடைய ஒருவராக சட்டபூர்வமாக ஜப்பான் செல்வதற்கு அதன் வழி உங்களுக்கு வாய்ப்புக் கிட்டுகிறது. அது மாத்திரமல்ல, உங்களது எதிர்காலம் மற்றும் தொழில் பாதுகாப்பு உறுதியானது..."

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு செல்லும்போது தொழிலாளர் ஒருவருக்கு கிடைக்கின்ற நலன்புரி மற்றும் நன்மைகள் அதிகம். எவ்வளவுதான் அறிவூட்டினாலும் பயன்பெறாத ஒரு குழுவினர் இருப்பதால் அது பற்றி பிரதி பொது முகாமையாளர்/ நலன்புரி மற்றும் மீட்சி, ஜகத் பட்டுகெதர அவர்கள் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

"எமது பிரிவின் முக்கிய பொறுப்புத் தான், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியை உறுதி செய்வது. அதன்படி, எமது நலன்புரி செயற்பாடுகள் மையப்படுத்தப்பட்டிருப்பது வெளிநாடு செல்கின்ற இலங்கையர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் நலன்புரி செயற்பாடுகளிலாகும்.

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வருகின்ற தொழிலாளர்களின் சமூக பொருளாதார நிலைமையை கட்டியெழுப்புவதற்கு தேவையான காரணியாக அடையாளம் காணப்பட்டிருக்கும், சுய தொழில் கடன் வழங்கல் தொடர்பில் முக்கியமாக ஞாபகப்படுத்த வேண்டும். ஏனென்றால், பெரும்பாலானவர்கள் வெளிநாட்டில் இருந்து சம்பாதிக்கும் காலத்தில் குழந்தைகளை வளர்க்க மற்றும் வீடு கட்ட செலவிடுகிறார்கள். கடைசியில் இலங்கைக்கு வரும்போது சேமித்த ஒன்றுமில்லை. அதற்குத் தீர்வாக, எமது மீட்சிப் பிரிவு இந்த சுய தொழில் கடனை வழங்குகிறத. அது மீண்டும் செலுத்த தேவையற்ற 50,000 கொடுப்பனவு ஒன்று. அதன் கீழ் அவர்களின் சுய தொழிலை ஆரம்பிக்க தேவையான அடிப்படை உபகரணங்களை நாம் பெற்றுக்கொடுக்கிறோம். அந்த சுய தொழிலை நன்றாக செய்வதாயின் அடுத்த கட்டமாக தவணை அடிப்படையில் செலுத்த வேண்டிய, இரண்டு அல்லது மூன்று இலட்சம் வரையான கடன் தொகை ஒன்றை பணியகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். 2006ஆம் ஆண்டு தொடக்கம் இந்த கடன் திட்டம் செயற்படுகின்றபோதும், அதில் பலன் பெற்றிருப்பது மிகச் சிறிய எண்ணிக்கையானவர்களே. அதனால், பணியத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் இருந்து விட்டு மீண்டும் இலங்கைக்கு வருகின்ற 5 ஆண்டுகள் கடந்திருந்தபோதும் அவர்களுக்கு, நாம் இந்த வசதியை பெற்றுக்கொடுக்கிறோம்.

அதேபோன்று, வெளிநாட்டு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது பிரச்சினை ஒன்றால் வருமானம் இழந்து பாடசாலை கல்வியை தொடர்வதற்கு முடியாத பிள்ளைகளுக்காக, அதிகபட்சம் 5000 ரூபா அடிப்படையில் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில், சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் சித்தி பெற்ற (பல்கலைக்கழக கல்வியை கற்கின்ற) பிள்ளைகளுக்கு முறையே 20000, 25000 மற்றும் 35000 என புலமைப் பரிசில் வழங்குவது தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. ஒருவர் இதற்காக விண்ணப்பிக்கும்போது நாடு முழுவதும் பரந்திருக்கும் குறித்த பகுதிகளில் அபிருத்தி உத்தியோத்தர்கள் இந்த விண்ணப்பதாரர்களின் வீடுகளுக்குச் சென்று தகவல்களை பெற்று அறிவித்த பின் இந்த அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும்.

அது தவிர, புலம்பெயர் கடன் மானியம் வழங்கல், வீட்டுக் கடன் உதவி, முழுமையாக உடல் ஊனமற்றவர்களுக்காக வீடு வழங்கல், தொழிலாளர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ முகாம்கள் நடத்துதல் மருத்துவ பரிந்துரை அடிப்படையில் மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றை பெற்றுக்கொடுத்தல் போன்ற பல்வேறு நிவாரணங்கள் இந்த நலன்புரி பிரிவின் கீழ் புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு பெற்றுக்கொடுக்கிறோம்.

அதேபோன்று துறைசார் அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய "பெமிலி கெயார்" திட்டம் ஒன்றை அறிமுகம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கிறோம். அதன் கீழ் பணியத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டில் உள்ள தொழிலாளர் ஒருவருக்கு அல்லது குடும்பத்தினர் ஒருவருக்கு ஏதேனும் உதவி தேவையெனில் ஊடகத்தில் கூறும் வரை இருக்காமல், நாமே அது பற்றி தேடிப் பார்த்து தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம்..."

வெளிநாடு செல்கின்ற மற்றும் இலங்கைக்கு வருகின்ற இலங்கை தொழிலாளர்களின் வசதிக்காக அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் "சஹன பியச" சேவை தொடர்பில், பணியகத்தின் பிரதி பொதுமுகாமையாளர்/ விமானநிலையம் மற்றும் போக்குவரத்து, இந்திரா பத்தினாயக்க அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

"வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு செல்கின்ற பணியாளர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் தமது விமானத்தை தவறவிட்டு அவர்களுக்கு விமானத்தை மாற்றிக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. அப்படி இல்லையேல் மீண்டும் வீட்டுக்குப் போக வேண்டி ஏற்படுகிறது. அதிக தூரத்தில் இருந்து வந்த ஒருவருக்கு இரவு நேரத்தில் அவ்வாறான ஒன்று ஏற்பட்டால் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. விமானநிலையத்திற்குள் தங்க முடியாது. ஹோட்டல் ஒன்றுக்கு பணம் செலுத்தும் அளவுக்கு வசதி அல்லது மனநிலை சில நேரம் இருக்காது. பிரச்சினையை தீர்ப்பதற்கு காலம் எடுத்துக்கொள்ளவும் முடியாது.

குறிப்பாக தூர இடங்களில் இருந்து வந்து மத்திய கிழக்கை நோக்கி செல்ல வரும் பெண்கள் இவ்வாறான நேரங்களில் அதிகம் நிர்க்கதியாகிறார்கள். ஆவணங்கள் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டு பயணம் ரத்தானால் இதே நிலை தான். இவ்வாறான நேரத்தில் தேவையான பணிகளை செய்யும் வரை உணவு, மருந்து மற்றும் பாதுகாப்பான தங்குமிட வசதியை இலவசமாக வழங்குகின்ற இடம் தான், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் "சஹன பியச" என்பது.

"சஹன பியச" அமைந்திருப்பது விமானநிலையத்திற்கு திரும்புகின்ற சந்தியின் 18ஆவது தூணுக்கு அருகில். நாட்டை விட்டு செல்கின்ற பணியாளர்களுக்கு மற்றும் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வருகின்ற பணியாளர்களுக்கு இரவில் வீட்டுக்குச் செல்ல சிரமம் என்றால், இங்கு தங்க முடியும். சில நேரங்களில் நோயுற்று இலங்கைக்கு வருகின்ற பணியாளர்களுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். அவ்வாறானவர்களை மருத்துவமனையில் சேர்ப்பது, பயணச் செலவை மேற்கொள்வது, மருந்துகள் அல்லது அம்புலன்ஸ் ஒன்றை பெற்றுக்கொள்வது ஆகிய பணிகள் இந்த சஹன பியச செய்யப்படுகிறது. இது ஒரே தடவையில் 50 பேருக்கு மேல் தங்க முடியுமான நிலையம் ஒன்றாகும்.

சில நேரம் வெளிநாடு சென்ற பணியாளர் ஒருவர் உயிரிழந்த சந்தர்ப்பத்தில் உடல் தொடர்பிலான ஆவணங்களை தயாரித்து குடும்பத்தினரிடம் உடலை ஒப்படைக்கும் வரை அனைத்து செயற்பாடுகளையும் பணியகத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்படுகிறது. அதேபோன்று உயிரிழப்பில் 40,000 ரூபா பணம் குடும்பத்தினருக்கு வழங்கப்படுகிறது. ஒரு பணியாளர் பதிவு செய்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் நலன்புரி செயற்பாடுகளும் அவ்வாறே ஒரு பொதியாக வழங்குவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதனால் வேலை ஒன்றுக்காக புறப்பட்டுச் செல்வதாயின் சட்டபூர்வமான மற்றும் பணியகத்தின் பதிவை கட்டாயம் பெற்று செல்ல வேண்டும் என்பதை அனைத்து இலங்கையர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பதிவை பெற்றுக்கொள்வதற்கு தலைமை அலுவலகத்திற்கு வருவது அவசியம் இல்லை. விமானநிலைய அலுவலகத்தில் உங்களுக்காக 24 மணி நேரமும் அதிகாரிகள் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதனால் உங்களுக்கு ஓர் இடத்தில் தவறிப்போனாலும், இலங்கையில் இருந்து புறப்படுவதற்கு முன் விமானநிலையத்திலேனும் இந்த பதிவை பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

தொலைதூரத்தில் இருந்து மத்திய கிழக்கு சேவைக்காக செல்லும் பெண்கள் பெரும்பாலும் குடும்பப் பின்னணி அறிக்கையை பூர்த்தி செய்யாததால் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இரண்டு வயதுக்குக் குறைவான பிள்ளைகள் இருக்கும் தாய்மார்களை வெளிநாட்டு வேலைக்குச் செல்ல அனுமதிப்பதில்லை என்பதோடு, 15 வயதுக்கு குறைந்த பிள்ளைகளை விட்டுச் செல்வதாயின், அவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் அறிக்கையை பணியத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அது கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் உறுதி செய்ய வேண்டும். இந்த விடயங்கள் தெரியாமல் வருகின்றவர்களும் இருக்கிறார்கள். அப்போது அவர்களின் வெளிநாட்டு பயணத்தை நிறுத்த வேண்டி ஏற்படும். அதேபோன்று சுற்றுலா விசாவில் செல்கின்றவர்கள் சந்தேகத்துக்கு உரியதாயின் பணியக அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்துவார்கள்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஒன்றுக்காக செல்வதானால், பதிவுக்குத் தேவையான ஆவணங்களை பூர்த்தி செய்து வரும்படி நாம் கண்டிப்பாக குறிப்பிடுகிறோம். 24 மணி நேரமும் திறந்திருக்கும் எமது 1984 அவசர தொலைபேசி சேவை ஊடாக இது பற்றி எந்த ஒரு தகவலையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோன்று வெளிநாடு செல்கின்ற பணியாளர்களுக்கு, புதிய சிந்தனை ஒன்றாக, "எதிர்பார்ப்பின் வாயின்" ர்ழிந புயவந ஒன்று, கடந்த செப்டெம்பர் மாதம் தொடக்கம் திறக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு பணியாளர் விமாநிலையத்தில் இருந்து விமானத்தில் ஏறும் வரை, படிவங்களை நிரப்புவதற்காக அல்லது வேறு ஏதேனும் உதவி தேவையெனில் அதனை செய்து கொடுப்பதற்கு பணியக அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. வருகை முனையத்தில் அவ்வாறு Hope Gate செயற்படுகிறது. "இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்றே வெளிநாடு செல்கின்ற பணியாளர்களுக்கு நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்..."



பிரதிப் பொதுமுகாமையாளர்/ நலன்புரி மற்றும் மீட்சி ஜகத் பட்டுகெதர



பிரதி முகாமையாளர்/ பயிற்சி மற்றும் நியமனம், செனரத் யாப்பா



பிரதிப் பொதுமுகாமையாளர்/ விமான நிலையம் மற்றும் போக்குவரத்து, இந்திரா பத்தினாயக்க



ஊடக மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல் முகாமையாளர் பிரசன்ன அபேவிக்ரம

**இனோகா பெரேரா பண்டார**
**படம் – மாலன் கருணாரத்ன**

# பொருளாதார சுபீட்சம், சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தின் அனுகூலங்களை பயன்படுத்திக் கொள்வது அவசியமானதாகும்

## SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க



சிக்கல்கள் நிறைந்த பொருளாதார சூழல்கள் மற்றும் பாரதூரமான சவால்களுக்கு இலங்கை முகங்கொடுத்துள்ள நிலையில், நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு, ஆழமான அமுல்படுத்தலினூடாக மனித வாழ்க்கையின் சகல அம்சங்களையும் மேம்படுத்தி, பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கான கொள்ளளவை SLT-MOBITEL கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிகொம் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க தெரிவித்தார். SLT-MOBITEL இன் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

### இலங்கையில் தொற்றுப் பரவலுக்கு பின்னரான, டிஜிட்டல் பொருளாதாரம் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம். டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் பயணத்தில் SLT-MOBITEL எவ்வாறு பங்களிப்பு வழங்கும்?

நிறுவனம் எனும் வகையில், மூன்று தூண்களினூடான இணைப்புத் திறனை ஏற்படுத்திக் கொடுப்பது எனும் எமது தந்திரோபாயத் திட்டத்தை முன்னெடுக்கின்றோம். அதனூடாக டிஜிட்டல் பயணத்தில் முக்கிய பங்களிப்பை வழங்குவதுடன், சர்வதேச இணைப்புத்திறனை வலிமைப்படுத்துவதுடன், எதிர்காலத்துக்கான முதலீடுகளை மேற்கொள்கின்றோம்.

வழமை என நாம் எண்ணிக் கொண்டிருந்ததில் தொற்றுப் பரவல் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்ததுடன், சமூகங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு தமது சௌகரியமான பகுதிகளிலிருந்து வெளியே வந்து, பிரத்தியேகமான சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறான சூழ்நிலைகளில், ஸ்ரீலங்கா ரெலிகொம் தனது குரல் மற்றும் டேட்டா ஆற்றல்களைக் கொண்டு, மக்களிடையே இணைப்புத்திறனை ஏற்படுத்தியிருந்ததுடன், தொடர்ச்சியாக பொருளாதார செயற்பாடுகள், கல்வி மற்றும் களிப்பூட்டும் அம்சங்கள் நாட்டில் தொடர்ந்து இடம்பெறுவதை உறுதி செய்திருந்தது. இந்த நோக்கத்தினூடாக, கடந்த இரண்டு வருடங்களில் பெருமளவலான சவால்களிலிருந்து மக்கள் மீள்வதற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் உதவியிருந்ததுடன், டிஜிட்டல் மாற்றியமைப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை அதிகளவு வினைத்திறனான வகையில் தொற்றுப்பரவலுக்கு எதிராக போராட உதவியிருந்ததுடன், சமூக மீட்சியை அதிகரிக்கச் செய்து, பொருளாதார மீட்சியை ஊக்குவித்திருந்தது.

மேலும், மதிநுட்பமான இலங்கை என்பதை நோக்கி நகர்வதற்கு பெருமளவில் பங்களிப்பு வழங்கியிருந்ததுடன், அதற்காக டிஜிட்டல் உள்ளடக்கமான வழிமுறைகளான டிஜிட்டல் அரசாங்கம், டிஜிட்டல் பொருளாதாரம், டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் உள்ளம்சம் போன்றவற்றை பின்பற்றியிருந்தது. 2021ஆம் ஆண்டில் நாம் பயின்ற விடயங்களைக் கொண்டு, ஓரிடத்திலிருந்து பணியாற்றுவது, பயில்வது, விநியோகிப்பது மற்றும் விநியோக சங்கிலிகள் மற்றும் களிப்பூட்டும் அம்சங்கள் போன்றவற்றில் நாம் இடையிட்டு, இந்த ஆண்டிலும், தொடர்ச்சியான பொருளாதார செயற்பாடுகளை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றி, வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளுக்கு சேவைகளை வழங்குகின்றது.

இதேவேளை, அரச நிறுவனங்கள் பலதுடன் எமது பரந்தளவு பங்காண்மையினூடாக, அத்தியாவசிய அரச சேவைகளை நாடு முழுவதிலும் தடங்கலின்றி வழங்க முடிந்ததுடன், பொது மக்களுக்கு தடங்கலின்றி அவற்றை பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

ஆண்டில் முக்கியமான சாதனையாக, ஸ்ரீலங்கா ரெலிகொம்மினால், பிரத்தியேகமான கட்டமைப்புகளினூடாக, ஒப்பற்ற சேவைகளை பெற முடிந்ததுடன், இலவச அணுகலையும், கவர்ச்சிகரமான புரோட்பான்ட் டேட்டா பக்கேஜ்களையும் வழங்க முடிந்தது. கொவிட்19 பரவல் காரணமாக எழுந்த நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு நெருக்கடிகளுக்கு மத்தியிலும், குழுமத்தினால் நீண்ட கால அடிப்படையில் பெறுமதி உருவாக்கத்தை ஏற்படுத்த முடிந்ததுடன், fibre-to-the-home (FTTH) அடங்கலாக, SLT Data சென்ரர்கள், SLT Multi-Cloud கட்டமைப்புகள் எமது வலையமைப்பை விரிவாக்கம் செய்யவும் மேம்படுத்தவும் முடிந்திருந்தது.

SLT-MOBITELஇல், நாம் பரந்தளவு ICT ஆற்றல்கள் படைத்த சேவைகளை வழங்கி, சகல தொழிற்துறைகளையும் டிஜிட்டல் மயமாக்கலுக்கு கொண்டு செல்ல உதவுகின்றோம். எமது முதலீடுகள் கவர்ச்சிகரமான அனுகூலங்களை இலங்கையின் வியாபாரங்களுக்கு, இல்லங்களுக்கு மற்றும் அரசாங்கத்துக்கு மத்திய முதல் நீண்ட கால அடிப்படையில் ஏற்படுத்தும் என்பதுடன், துரிதமான, பாதுகாப்பான, தங்கியிருக்கக்கூடிய மற்றும் சகாயமான இணைய இணைப்புத்தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். Cochchi.lk மற்றும் Helaviru ஊடாக, விவசாய மற்றும் இதர விநியோக சங்கிலிகளை வலிமைப்படுத்தும் செயற்பாடுகளுக்கும் நாம் ஆதரவளித்திருந்தோம்.

நிலைபேறான புத்தாக்கத்தினூடாக, தொழிற்துறைகளுக்கு தமது விநியோக சங்கிலிகளை டிஜிட்டல் மயப்படுத்திக் கொள்ள நாம் உதவியிருந்ததுடன், சவால்களுக்கு வினைத்திறனான வகையில் முகங்கொடுக்க வழிகாட்டிகளாக அமைந்திருந்தோம். சகல தொழிற்துறைகளிலும் டிஜிட்டல் மாற்றியமைப்பை துரிதப்படுத்த நாம் எதிர்பார்ப்பதுடன், தேசத்தின் டிஜிட்டல் பொருளாதாரத்தை முன்நோக்கி கொண்டு செல்ல பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கின்றோம்.

### ICT தொழில்நுட்பம் என்பது மிகவும் நுட்பமான தொழிற்துறையாகும் என்பதுடன் புத்தாக்கங்களுடன் மேம்பட்ட வண்ணமுள்ளது. இந்த மாற்றங்களுக்கு முகங்கொடுப்பது தொடர்பில் SLT-MOBITEL இன் திட்டங்கள் யாவை?

எதிர்காலத்துக்காக முதலீடுகளை மேற்கொண்டு, நிறுவனங்கள் மற்றும் நுகர்வோருக்கு வலுவூட்டுவதற்காக புத்தாக்கத்தில் நாம் கவனம் செலுத்துகின்றோம். கொவிட் தொற்றுப் பரவலுக்கு பின்னரான உலகில் டிஜிட்டல் தீர்வுகளைப் பின்பற்றி இயங்குவதற்கு வழிகாட்டுகின்றோம். கடந்த ஆண்டுகளில், ளுடுவு-ஆழூடைஜவுநுடு சகல செயற்பாடுகளிலும் வாடிக்கையாளர்களை முன்நிறுத்தி, புத்தாக்கங்களை முன்னெடுத்துச் செல்கின்றது. தொடர்ச்சியான புரட்சிகரமான செயற்பாடுகளினூடாக, நாம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளில் புத்தாக்கங்களை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதுடன், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்துக்கு பெறுமதியை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றோம்.

இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி தொடர்பில் நாம் ஆழமான தகவல்களை கொண்டிருப்பதுடன், அதனூடாக எதிர்காலத்துக்கு உறுதியான வகையில் எமது வியாபாரத்துக்கு முதலீடுகளை உட்கட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தில் மேற்கொள்ள முடிகின்றது. இந்த முதலீடுகள் எமது உள்நாட்டு மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வலையமைப்பு, வேகம், பாதுகாப்பு, தங்கியிருக்கும் தன்மை மற்றும் வினைத்திறன் போன்றவற்றை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

2023 ஆம் ஆண்டளவில் 2 மில்லியன் இல்லங்களுக்கு ஃபைபர் புரோட்பான்ட் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான எமது நோக்கத்துக்கமைய, 2021ஆம் ஆண்டு முதல், எமது FTTH வலையமைப்பை மேலும் விஸ்தரிப்பு செய்வதில் எமது பெருமளவான முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம். SLT-MOBITEL தனது 4G வலையமைப்பை மேலும் விஸ்தரிப்புச் செய்துள்ளதுடன், ஆண்டில் தனது 5G தொழில்நுட்பங்களை மேலும் பரீட்சிக்கும் வகையில் புதிய டேட்டா சென்ரர்கள் மற்றும் multi-cloud கட்டமைப்புகளில் முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. திட்டமிட்டபடி, 2022 இல் பெற்றுக் கொண்ட பிரதான முதலீடுகளில், optical fibre வலையமைப்பு, 4G வலையமைப்பு விரிவாக்கங்களுடன் 5G ஆற்றல்கள், சர்வசேத கேபிள்கள், multi-cloud கட்டமைப்புகளின் விரிவாக்கங்கள் மற்றும் carrier neutral டேட்டா நிலையங்கள் போன்றன அடங்கியுள்ளன.

ஆண்டில் காணப்பட்ட சவால்களுக்கு மத்தியில், எமது சர்வதேச இணைப்புத்திறனை வலிமைப்படுத்துவதில் கவனம் செலுத்தியிருந்தோம். தனது சர்வதேச பிரசன்னத்தை விரிவாக்கம் செய்வதில் ஸ்ரீலங்கா ரெலிகொம் தொடர்ந்து முதலீடு செய்திருந்ததுடன், இதில் எமது கடலடிக் கேபிள் கட்டமைப்புகளும் அடங்கியுள்ளன. சர்வதேச ரீதியில் எமது பிரசன்னத்தை மேலும் விரவாக்கம் செய்யும் நோக்கில், புதிய சர்வதேச கேபிள் கட்டமைப்புகளிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.



### இலங்கை மற்றும் அதன் அரசாங்கத்துக்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் என்பது பெறுமதி வாய்ந்த சொத்தாக அமைந்துள்ளது. நிறுவனத்தின் அண்மைய நிதிப் பெறுபேறுகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

தேசத்துக்கும் அரசாங்கத்துக்கும் நாம் சொத்தாக அமைந்துள்ளோம். ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் இலங்கை அரசாங்கம் 49.5 சதவீதத்தைக் கொண்டுள்ளதுடன், திறைசேரியின் செயலாளரினூடாக, எமது இலாபங்கள் அரசாங்கத்துக்கு பங்களிப்புச் செய்யப்படுகின்றன.

தேசிய சம்பியனாக SLT-MOBITEL இன் வெற்றிகரமான செயற்பாடு என்பது பெருமளவு வரவேற்புக்குரியது, ஆனாலும், அதன் வெற்றி எதிர்பாராததாக அமைந்திருக்கக்கூடாது. நடப்பு ஆண்டில் நிறுவனம் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது. இதனை மூன்றாம் காலாண்டு பெறுபேறுகளுடன் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குழுமம் வருமான வளர்ச்சியாக 3.9மூ ஐ பதிவு செய்திருந்தது. முதல் ஒன்பது மாதங்களில் வருமான வளர்ச்சி ரூ. 79.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. மூன்றாம் காலாண்டில் குழுமத்தின் நிகர இலாப வளர்ச்சி ரூ. 11.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. முதல் ஒன்பது மாதங்களில் இலங்கை அரசாங்கத்துக்கு ளுடுவு குழுமத்தின் பங்களிப்பு 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூ. 21 பில்லியனாக காணப்பட்டது. இதில் நேரடி மற்றும் மறைமுக வரிகள் மற்றும் பங்கிலாபங்கள் போன்றன அடங்கியிருந்தன.

2022 முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் குழுமத்தின் நேர்த்தியான வளர்ச்சியில் செலவுக் குறைப்புகளில் நிர்வாகத்தின் இடையீடு, வலுச் செலவுகளில் குறைப்பு, நிறுவனத்தின் சொந்த வளாகங்களுக்கு நிறுவனத்தின் செயற்பாடுகளை நகர்த்தியிருந்தமை மற்றும் சொத்துக்களை பணமாக்கியிருந்தமை போன்றன அடங்கியிருந்தன.

SLT நிறுவனத்தினால் நிதிசார் மீட்சியும் பேணப்பட்டிருந்தது. நிகர இலாபம் 9.3% நேர்த்தியான வளர்ச்சியை பதிவிட்டிருந்ததுடன், இது மூன்றாம் காலாண்டில் ரூ. 7.2 பில்லியன் வளர்ச்சியாகும். காலாண்டு ஒப்பீட்டளவில் முதல் ஒன்பது மாதங்களில் பெறுபேறுகளும் 7.1% வளர்ச்சியுடன் 20.4 பில்லியன் ரூபாயை பதிவு செய்திருந்தது. மேலும், முன்னைய காலாண்டில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு பெருமளவில் வீழ்ச்சியடைந்ததால், 2022ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் SLT இனால் 2.3 பில்லியன் ரூபாய் அந்நியச் செலாவணி வருமான மீட்டப்பட்டிருந்தது.

ஒட்டுமொத்த நேர்த்தியான வருமானங்களை நாம் பதிவு செய்திருந்ததுடன், 2022ஆம் ஆண்டை இந்த பெறுபேறுகளுடன் வெற்றிகரமாக நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம்.

### ஒவ்வொரு நிறுவனத்திலும் அதன் ஊழியர்களே பிரதான சொத்துக்களாக காணப்படுகின்றனர். SLT-MOBITEL இல் ஊழியர் பெறுமதி ஒதுக்கீடு என்பது அமைந்துள்ளது?

எமது ஊழியர்களுக்கு வலுவூட்டுவது, உற்பத்தித்திறனை மேம்படுத்துவது மற்றும் பயிற்சிகள் மற்றும் தொழில்நிலை விருத்திக்கான வாய்ப்புகளை வழங்குவது போன்ற பிரதான ஊழியர் தந்திரோபாயச் செயற்பாடுகளை நாம் மேற்கொள்கின்றோம். சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றினூடாக, எமது ஊழியர்களின் நலனுக்கு ஆதரவளிப்பதில் பெருமளவான முதலீடுகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

தனது 6500க்கும் அதிகமான ஊழியர்களுக்கு பரிபூரண பெறுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் தொடர்ந்தும் ளுடுவு தன்னை ஈடுபடுத்தியுள்ளது. எமது வாடிக்கையாளர்களுக்கு தடங்கலில்லாத சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும், இணைப்புகளை ஏற்படுத்துவதில் உதவும் பிரதான காரணிகளாக இவர்கள் காணப்படுகின்றனர். புதிய டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு அவசியமான சரியான திறன்கள் மற்றும் உள்ளம்சங்களைக் கொண்டு இவர்களை வளர்ச்சியடையச் செய்ய நாம் எதிர்பார்க்கின்றோம். எதிர்காலத்துக்கு தயாராகியுள்ள பணியாளர் குழுவை கட்டியெழுப்புவதுடன், அதனூடாக அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்தினால் வலுவூட்டப்பட்ட ஊழியர்களை நாம் கொண்டிருப்போம்.

உள்ளக மற்றும் வெளியக சூழலில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், நிறுவனம் தனது கூட்டாண்மை கலாசாரம் மற்றும் பிரதான பெறுமதிகளை பின்பற்றி செயலாற்றுகின்றது. எமது செயற்பாடுகளை வெற்றிகரமானதாக முன்னெடுப்பதற்காக வளங்களை நாம் ஈடுபடுத்தியுள்ளதுடன், பல்-வியாபார நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளை கட்டியெழுப்ப முயற்சிகளை மேற்கொள்வோம். நிறுவனங்கள் தொடர்பான மாற்றங்களை நாம் கட்டியெழுப்பியுள்ளதுடன், நிறுவனசார் ஆற்றல்கள் மற்றும் வினைத்திறனை கட்டியெழுப்புவதற்கு அவசியமான திறன்களையும் கொண்டுள்ளோம். பல சவால்கள் காணப்பட்ட போதிலும், எமது ஊழியர்கள் தமது நம்பிக்கையை பேணி வருவதுடன், எமது நிறுவனம் வெற்றிகரமாக இயங்குகின்றது.

எமது ஊழியர்களின் நலன் தொடர்பில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பெருமளவு முதலீடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம். நிறுவனத்தின் ஊழியர் தக்க வைப்பு வீதம் 95% ஆக காணப்படுவதுடன், இதனூடாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், எமது அணிக்கு விறுவிறுப்பான மற்றும் இயங்கக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் நாம் இயங்குகின்றோம்.

### சந்தை முன்னிலைத்தன்மை என்பது தொடர்பில் SLT-MOBITEL இன் எதிர்காலத்திட்டங்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

வளர்ச்சியை நோக்கி நாம் மீளமைத்து செயலாற்றும் வேளையில், தொழில்நுட்பத்தின் சக்தியை ஊக்குவித்து, நிலைபேறான மற்றும் உள்ளடக்கமான எதிர்காலத்தை அனைவருக்கும் ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம். நுகர்வோர் தேவைகளினூடாக SLT-MOBITEL இயங்கி வருவதுடன், அதனூடாக பொருத்தமான புத்தாக்கங்கள் மற்றும் உயர்ந்த தொழில்நுட்பசார் அனுபவத்தை நுகர்வோர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடிந்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட, பாதுகாப்பான மற்றும் தங்கியிருக்கும் இணைப்பு என்பது சமூக-பொருளாதார வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்கும் முக்கிய கருவிகளாக அமைந்துள்ளன என்பதில் நான் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளேன். இந்த டிஜிட்டல் எதிர்காலத்தை செயற்படுத்துவதில் ஸ்ரீலங்கா ரெலிகொம் முக்கிய பங்கை கொண்டிருப்பதுடன், எமது ஆற்றல்களை பின்பற்றி, உட்கட்டமைப்பு மற்றும் உள்ளார்ந்த அம்சங்களினூடாக இலங்கையை அடுத்த கட்ட டிஜிட்டல் வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்ல எதிர்பார்க்கின்றோம். எமது குறுகிய முதல் நடுத்தர எதிர்பார்ப்புகளினூடாக சகல உள்ளக வியாபார பிரிவுகளிலும் எமது சந்தை நிலையை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், கிராமிய மட்ட ஊடுருவல் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை மாற்றியமைப்பதனூடாக சேவை நிலைகளையும் தக்க வைப்புகளையும் மேம்படுத்தக்கூடியதாக இருக்கும்.

தொழில்நுட்ப நிறுவனம் எனும் வகையில், எதிர்காலத்தை கண்டறிவது என்பது எமது பிரதான சமூக பொறுப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது. எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பெறுமதி மற்றும் டிஜிட்டல் அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் நாம் தொடர்ந்தும் எதிர்கால முதலீடுகளை மேற்கொள்வோம்.











# நிதி நிலைபேராண்மையை ஏற்படுத்த சாதகமான அணுகுமுறைகளை கொண்ட 2023 பட்ஜட்



## எங்களது திறந்த பொருளாதாரக் கொள்கையை நாங்கள் மீண்டும் நிலைநாட்ட வேண்டும்...

## பேராசிரியர் சிறிமல் அபேரத்ன

– இஷாரா ஜெயவர்தன

**எந்த நாட்டிலும் மக்களுக்கு மிகவும் அவசியமானது பாதுகாப்பு. தமக்கும் நாட்டுக்கும் பாதுகாப்பான எதிர்காலத்திற்கான உறுதியான திட்டம் தமது தலைவர்களிடம் உள்ளதா என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் வெளியாகியுள்ளது, மேலும் இலங்கையர்களின் மனதில் உள்ள மிகப்பெரிய கேள்வி – அடுத்து என்ன? 2023ஆம் ஆண்டில் நமக்கெல்லாம் என்ன காத்திருக்கிறது?, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியர் சிறிமல் அபேரத்னவிடம் இதுபற்றிப் பேசுகையில், இந்த நாட்டின் வளர்ச்சிக்கு வரவு செலவுத் திட்டம் ஒரு முற்போக்கான அணுகுமுறையை எடுத்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார். எந்தவொரு அரசாங்கமும் சரியானது அல்ல, தலைவர்களும் மனிதர்கள் என்பதை நிச்சயமாக நாம் மனதில் கொள்ள வேண்டும்.**

**2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நடைமுறைச் சாத்தியமானது என்று நீங்கள் நினைக்கிறீர்களா, மேலும் அது இந்த நாட்டின் அபிவிருத்தி தொடர்பான எரியும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமா?**

“நிதி ஒருங்கிணைப்பை அடைவதற்காக இது ஒரு முற்போக்கான அணுகுமுறையை எடுத்துள்ளது மற்றும் இலங்கையின் அடிப்படைப் பிரச்சினையான ஏற்றுமதி வளர்ச்சிக்கு சில முக்கிய நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளது. சுமார் 10 - 12 வருடங்களுக்கு முன்னர் எங்களிடம் ஒரு நல்ல வரவு செலவு திட்டம் இருந்திருந்தால், இலங்கை தற்போதைய நெருக்கடியைத் தவிர்த்திருக்கும். இருப்பினும், வரி உயர்த்தப்பட்டாலும், பட்ஜெட் பற்றாக்குறை ரூ. 2.4 டிரில்லியனாகும் அதற்கு கடன் வாங்க வேண்டும், அதனால் நாம் இன்னும் ஆபத்தில் இருந்து வெளியேறவில்லை. மேலும், நமது ஏற்றுமதி ஊக்குவிப்பு உண்மையில் எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பது சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பொறுத்தது,” என்று பேராசிரியர் அபேரத்ன கூறினார்.

**இன்னும் ஒரு கேள்வி நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டியது, அதிகாரப் பதவிகளில் சரியானவர்கள் நம்மிடம் இருக்கிறார்களா? தற்போதைய அரசாங்கம் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான ஊக்கியாகுமா? இலங்கை இருக்கும் படுகுழியில் இருந்து வெளிவர அதுவே போதுமானதா?**

”இது சரியானது என்று நான் சொல்லவில்லை, ஆனால் முக்கிய விடயம் என்னவென்றால், மாற்று என்ன? நெருக்கடியிலிருந்து வெளியேறும் வழியை மிகச் சிலரே புரிந்துகொள்வார்கள் என்பதுதான் எனது கவலை, அதேசமயம் பலர் அடுத்த அதிகாரத்தை எப்படிப் பிடிப்பது என்பதில் கவனம் செலுத்துவார்கள். தேர்தல் சுற்று. ஆனால், அதன்பிறகு என்ன செய்யப் போகிறோம் என்று எங்களிடம் கூற மாட்டார்கள். அவர்களில் சிலர் நாட்டிற்கான “சரியான” பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருப்பதாக தங்கள் சொந்த கற்பனைகளில் சிக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் தேர்தலில் வெற்றி பெறாவிட்டாலும், மக்களை தவறாக வழிநடத்தி, கொள்கை வகுப்பதில் செல்வாக்கு செலுத்த முடியும்.

**பொருளாதார மறுமலர்ச்சிக்கு எந்தத் துறைகள் உத்வேகத்தை அளிக்கும்? பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய துறைகள் யாவை?**

“ஒரு பரந்த பொருளில், சர்வதேச சந்தைகளில் போட்டித்தன்மையுடன் நுழையக்கூடிய தனியார் முதலீட்டுடன் கூடிய “வர்த்தக” துறைகள் என்று நான் கூறுவேன். கடன் வாங்குதல் மற்றும் முதலீடு செய்தல் ஆகிய இரண்டிலும் அரசாங்கம் முக்கிய பங்காற்றிய “வணிகமற்ற” துறைகளில் கடன் வாங்கி முதலீடு செய்வது எங்களுக்குப் போதுமானது. ஏற்றுமதிக்கான பெறுமதிசேர் சங்கிலிகளின் உயர் மட்டங்களில் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும். மற்றும் உலகளாவிய பெறுமதிசேர் சங்கிலிகளில் ஒருங்கிணைப்பை அனுமதிக்க வேண்டும். நாங்கள் சேவைகளை ஊக்குவிக்க வேண்டும், சுற்றுலா மட்டுமல்ல, நமது சுகாதாரம், கல்வி மற்றும் ஏற்றுமதிக்கான பல சேவைகளையும் மேம்படுத்த வேண்டும்” என்று பேராசிரியர் அபேரத்ன விளக்கினார்.

**இன்று இலங்கையில் உள்ள பல பிரிவுகள் அரசாங்கத்தின் மீது ”சேறு பூச” முயற்சி செய்கின்றன. ஆனால் இந்த எதிர்ப்புகள்ஃ போராட்டங்கள்ஃவேலைநிறுத்தங்கள் நன்மையை விட தீமை விளைவிக்காதா?**

இப்போது இலங்கைக்குள் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள் என்பதுதான் உண்மை. இது இலங்கைக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பு.

“அவர்கள் எப்போதுமே நாட்டிற்கும் அதன் பொருளாதார முன்னேற்றத்திற்கும் தீங்கு விளைவித்துள்ளனர், அவற்றின் மூல காரணம் எதுவாக இருந்தாலும் சரி. இதன் விளைவாக, இலங்கை முதலீட்டிற்கான ஒரு “அதிக ஆபத்து“ நாடாகக் கருதப்படுகிறது, அரசியல் இடர் காப்புறுதி (PRI) முதலீட்டாளர்களுக்கு ஒரு செலவாகும் என்பதால் இது விலை உயர்ந்தது. அந்நிய முதலீட்டுக்கு எதிராக நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம், ஆனால் வெளிநாட்டுக் கடன்களுக்கு எதிராக அவ்வாறு செய்யவில்லை. நாம் வேறு வழியில் செய்ய வேண்டும்!” என்று அவர் கூறினார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை மதிப்பீடு செய்வதன் மூலம், இலங்கைக்கு செழிப்பான காலகட்டத்தை ஏற்படுத்த அரசாங்கம் கடுமையாக உழைத்து வருவதைக் காணலாம். விருப்பம் இருக்கும் இடத்தில்தான் ஒரு வழி இருக்கிறது.

“நாட்டை அபிவிருத்தி செய்வதில் தீவிர ஆர்வம் உள்ளது, அது பட்ஜெட் உரையிலும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. 2048ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் போது, இலங்கை ஒரு வளர்ந்த நாடாக இருக்க வேண்டும், அதாவது இலங்கை ஒரு “உயர் வருமானம்” கொண்ட நாடாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார். அதற்கு 25 ஆண்டுகள் உள்ளன. இது சாத்தியமற்றது என்று நான் நினைக்கவில்லை, ஏனென்றால் ஆசியாவில் பல நாடுகள் அவ்வாறு செய்துள்ளன. எவ்வாறாயினும், சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதற்கு பரந்த அரசியல் கருத்து ஒருமிப்பு தேவைப்படுகிறது, அதை நாம் இன்னும் ஆரம்பிக்கவில்லை” என பேராசிரியர் அபேரத்ன சுட்டிக்காட்டினார்.

**சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி பெறுவதற்கோ அல்லது ஏனைய நாடுகளின் சர்வதேச உதவிகளை பெறுவதற்கோ இலங்கை அரசியல் ரீதியாக நிலையானது என்பதை இந்த சர்வதேச அமைப்புகளுக்கு காட்ட வேண்டும். கேள்வி என்னவெனில் – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் உள்ள தற்போதைய அரசாங்கம் இலங்கையின் பல்வேறு அரசியல் தரப்பினரையும் திருப்திப்படுத்தும் அதே வேளையில், தனது தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் திறன் கொண்டதா?**

“இப்போது பலர் தங்கள் சொந்த “கொள்கை கற்பனைகளில்” சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து விடுவித்து முற்போக்கான பாதையில் கொண்டு செல்வதற்காக, இன்னும் விரிவான சீர்திருத்தப் பொதியில் இல்லையென்றாலும், ஜனாதிபதியின் கொள்கைகள் சரியான திசையில் இருப்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் அதை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதேநேரத்தில் அவர்கள் தங்கள் அரசியல் அடையாளத்தை தக்கவைத்துக்கொள்ளும் ஒரு வித்தியாசமான நிகழ்ச்சி நிரலில் செயல்பட வேண்டும். இந்த இக்கட்டான நிலை எதிர்காலத்தில் எமது முன்னேற்றத்தை பாழாக்கிவிடாது என நான் நம்புகிறேன்” என பேராசிரியர் அபேரத்ன மேலும் தெரிவித்தார்.

**புதிய வருமான வரி சட்டத்தின்படி, லட்ச ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டுபவர்கள் வருமான வரி செலுத்த வேண்டும். தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதாக சிலர் புகார் கூறுகின்றனர். இந்தக் கூற்று நியாயமானதா? வரிவிதிப்புக்கான வருமான வரம்பு மிகவும் குறைவாக உள்ளதா?**

”பிரச்சினை என்னவென்றால், வரி உயர்வுகள் மிக மோசமான நேரத்தில் வந்தன, அதனால் மக்கள் சட்டியில் இருந்து நெருப்பில் விழுந்தனர். நம்மிடம் முறையான வரி நிர்வாக முறை இல்லாததால், ஒரு தேசமாகிய நமக்கு அது போன்ற ஒரு முறை பழக்கமில்லை. உதாரணமாக, உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தில் 300,000 தனிநபர் வருமான வரிக் கோப்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. 15 மில்லியன் பெரியவர்கள் உள்ள நாட்டில் இது பல மில்லியன்களாக இருக்கக் கூடாதா?

இந்த நாட்டில் மில்லியன்கணக்கானோர் சில வரி செலுத்துவோரின் பணத்தில் பலன்களை அனுபவிக்கின்றனர். மக்கள் இடம்பெயர்ந்து செல்லும் நாடுகளில், ஒவ்வொரு வருமானம் ஈட்டுபவர்களும் வருமான வரி செலுத்தும் வகையில் தொழில்நுட்ப அடிப்படையிலான திறமையான வரி நிர்வாக அமைப்புகள் உள்ளன.

**வட்டி விகிதம் சுமார் 30% வரை உயர்ந்துள்ளது. மின்சார கட்டணம் மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. இதனால் தொழில்முனைவோர் பொருளாதார வளர்ச்சிக்கான முதலீட்டிற்காக கடன் பெறுவதை ஊக்கப்படுத்தியுள்ளனர். இந்த சூழ்நிலையிலிருந்து வெளியேற வழி என்ன?**

“இந்த அபரிமிதமான மாற்றங்கள் அனைத்திற்கும் ஒரு பொருளாதார வேர் உள்ளது. மின்சாரச் செலவையோ, எரிபொருள் விலையையோ, சந்தை விலையையோ குறைக்க அரசாங்கத்தால் சாத்தியமில்லை. கடந்த காலங்களில் நாம் திரும்பத் திரும்பச் சொன்னாலும் அரசாங்கங்கள் மக்களை ஏமாற்றின. விண்ணைத் தொடும் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கிக்கு நாணயக் கொள்கை கருவிகள் வழங்கப்பட்டால், அது அதன் முதன்மை நோக்கமாகும், அது அந்தக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். அதிகாரத்தைப் பெற்ற அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் திறம்பட செயல்படாததாலும், நாமும் இதுபோன்ற விவேகமற்ற ஆட்சியை ஆதரித்ததாலும், இப்போது நாம் அனைவரும் கடந்த கால தவறுகளுக்கு பணம் செலுத்துகிறோம்,”என்று அவர் கூறினார்.

**இலங்கையை ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாற்றுவதற்கு தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் போதுமான ஏற்பாடுகள் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா என்று பேராசிரியர் அபேரத்னவிடம் கேட்டபோது...**

“இல்லை. வருடாந்த பட்ஜெட் அதைச் செய்ய முடியாது. 1977 மற்றும் 1989 ஆகிய இரண்டு சுற்று கொள்கை சீர்திருத்தங்கள் மூலம் இலங்கை கடந்த காலத்தில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக இருந்தது. அதன் பிறகு 25 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் சீர்திருத்தங்களை கைவிட்டோம், எனது புரிதலின்படி இது ஒரு பாதுகாப்புவாத பொருளாதாரம். எடுத்துக்காட்டாக, வர்த்தகத்தின் மீதான எங்கள் வரிகள், 2019இல் அரசாங்க வருவாயில் 18 சதவீதமாக இருந்தது, அது நெருக்கடிக்கு முன்பே. இந்தியாவில் இது 4.5 சதவீதமாகவும், சீனாவில் 1.9 சதவீதமாகவும் இருந்தது. பல வளரும் நாடுகளில், இந்த விகிதம் 2 - 4 சதவிகிதம் ஆகும். இலங்கையை “திறந்த பொருளாதாரம்” என்று நாம் சொல்கிறோம் ஆனால் உண்மையில் நாங்கள் அவ்வாறு இல்லை. நாம் நமது திறந்த பொருளாதாரத்தை மீண்டும் நிறுவ வேண்டும், ஒழுங்குமுறை தடைகளை தளர்த்த வேண்டும், முதலீட்டாளர் நம்பிக்கையை வெல்ல வேண்டும் பின்னர் ஏற்றுமதி சார்ந்த பொருளாதார நிலைக்கு மீண்டும் வருவோம்.

**இளைஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப புதிய பொருளாதாரத்தை உருவாக்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் திறன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு உள்ளதா?**

“2023ஆம் ஆண்டு, நிரல் செயலாக்கம் சீராக நடந்தாலும், நேர்மறையான முடிவுகளைக் காண்பதற்கு நாம் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறோம், இது இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் நமது பொருளாதாரத்தை சுருங்கச் செய்யும். ஆனால், மீண்டும் மீண்டும் வரும் நெருக்கடியான சூழ்நிலையில் நாம் சிக்கிக் கொள்ளாத வரை, நடுத்தர காலத்தில், ஓரளவு முன்னேற்றம் காண முடியும் என்று நம்புகிறேன். அந்த ஆபத்தை நாம் தவிர்க்க வேண்டும், அதற்காக நாம் வேகமாக செயல்பட வேண்டும். நமது பொருளாதாரத்தை நிலையான வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்ற பிறகு, அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு பொருளாதாரம் போதுமானதாக இருக்கும் போது, சிறந்த எதிர்காலத்திற்காக இளைஞர்கள் தங்கள் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்,” என்று அவர் விளக்கினார்.

**இலங்கையை ஏற்றுமதி சார்ந்த நாடாக மாற்ற விரும்புவதாகவும், 2023ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் 3 பில்லியன் டொலர் ஏற்றுமதியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். இது சாத்தியமா?**

“இது நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்தது. முதலீட்டாளர்களை எப்படி ஈர்க்கிறோம் என்பது பற்றியது. ஏனெனில் முதலீட்டாளர்களை ஈர்க்காமல் ஏற்றுமதியை உயர்த்த முடியாது. முதலீட்டாளர்களை ஈர்க்க, கொள்கைச் சீர்திருத்தங்கள் தேவை. முதலீட்டாளர்களின் நம்பிக்கையை நாம் பெற வேண்டும். உதாரணமாக, முதலீட்டை ஈர்ப்பதில் இலங்கைக்கு நல்ல சாதனை இல்லை. கடந்த 40 வருடங்களில் இந்த நாட்டிற்கு 20 பில்லியன் வெளிநாட்டு முதலீடுகள் மட்டுமே கிடைத்துள்ளன. இது சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 500 மில்லியன் ஆகும். கடந்த ஆண்டு, 2021இல் கூட, இலங்கைக்கு 600 மில்லியன் கிடைத்துள்ளது, அதேசமயம் முதல் மூன்று வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்ற நாடுகள் நமது அயலில் உள்ளன. முதலாவது இடத்தில் சீனா - கடந்த ஆண்டு 180 பில்லியன். இரண்டாவது இடத்தில் சிங்கப்பூர் - 99 பில்லியன், மற்றும் இந்தியா - 45 பில்லியன். எங்களுக்கு 600 மில்லியன் மட்டுமே கிடைத்தது. அதாவது எமது வர்த்தகச் சூழலில் ஏதோ தவறு உள்ளது, இலங்கையை கவர்ச்சிகரமான முதலீட்டு இடமாக மாற்றுவதற்கு சரியான வர்த்தகச் சூழலை ஏற்படுத்தினால், வெளிநாட்டு முதலீடுகள் இருக்கும், ஏனென்றால் உலகில் முதலீட்டுக்குப் பஞ்சமில்லை. எனவே இது 3 பில்லியன் மட்டுமல்ல, அதை விட அதிகமாகவும் கூட நாம் அதிகரிக்கலாம். எனவே அனைத்தும் நமது சீர்திருத்த திட்டங்களை எவ்வாறு செயல்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது. அரசியல்வாதிகளைக் குறை கூற முடியாது. நமது மக்களும் கூட, இந்த நாட்டில் அந்நிய முதலீட்டுக்கு எதிராக நாங்கள் போராட்டம் நடத்தினோம் பல்வேறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மத அமைப்புகள், பல்வேறு பரப்புரைக் குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்தன, ஆனால் வெளிநாட்டுக் கடன்களை நாங்கள் ஒருபோதும் எதிர்க்கவில்லை,” என்று அவர் விளக்கினார்.

2023 பட்ஜெட் ஒரு சீர்திருத்த பட்ஜெட் என்று அவர் மேலும் கூறினார். கடந்த 10 - 12 வருடங்களாக இவ்வாறான வரவு செலவுத் திட்டத்தை நாம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியிருந்தால், இன்று நாம் இருக்கும் நெருக்கடியை இலங்கை தவிர்த்திருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த நாட்டின் நிதி வரவு செலவுத் திட்ட நிலைகளை நாங்கள் மேம்படுத்தியிருப்போம். உண்மையில், இது இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிய மிகவும் முற்போக்கான படியாக இருந்திருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எங்களது கடந்த வரவு செலவுத் திட்டங்கள் யதார்த்தமானவை அல்ல, ஆனால் மிகவும் ஜனரஞ்சகமானவை. இம்முறை பட்ஜெட் சீர்திருத்தமான பட்ஜெட்டாகும். அதிலுள்ள எல்லா விடயங்களும் சரி என்று நான் சொல்லவில்லை. ஆனால் பொதுவாக, ஒட்டுமொத்த மதிப்பீடாக, இது சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்ட வரவு செலவுத் திட்டம் என்று நான் கூறுவேன் என்று பேராசிரியர் அபேரத்ன கூறினார்.

**இறுதியாக, வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான இலக்கை அரசாங்கம் அடைய முடியுமா என்ற கேள்விக்கு பேராசிரியர் அபேரத்ன இவ்வாறு கூறினார்**

“இது கடினமான இலக்காகும், ஏனெனில் வருவாய் இலக்குகளும் பொருளாதார செயல்திறனைப் பொறுத்தது. இந்த ஆண்டு, சர்வதேச நாணய நிதியத்தின் கூற்றுப்படி, பொருளாதாரம் 8% க்கும் அதிகமாக சுருங்கப் போகிறது. பொருளாதாரச் சுருக்கத்தின் விளைவுகளில் ஒன்று அரசின் வருமானம் குறைவது. அடுத்த ஆண்டும், பொருளாதாரத்தின் சாதகமான விரிவாக்கத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை, ஏனென்றால் நாங்கள் நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கிறோம், மேலும் நமது பொருளாதாரம் ஒரே இரவில் மாறும் என்று எதிர்பார்க்க முடியாது. அடுத்த ஆண்டும், அதே சுருக்கத்தின் தொடர்ச்சியை நாம் பார்ப்போம், ஆனால் நமது சீர்திருத்தங்களைப் பொறுத்து அது மெதுவாக இருக்கலாம். ஒரு நாடாக, நாம் செயல்படவில்லை என்றால், வருவாய் இலக்குகள் கடினமாகிவிடும். 2.4 டிரில்லியன் டொலர் பட்ஜெட் பற்றாக்குறையை நீங்கள் எடுத்துக் கொண்டால், அதற்கு மேலும் கடன் வாங்க வேண்டியிருக்கும், அது மேலும் உயரக்கூடும்,” என்று அவர் முடித்தார்.



LAKE HOUSE
Concept & Design by
Advertising Supplements Department
: 0112 429 339, 0777 270 076
Coordinated by Eranda Edirimanna

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசெம்பர் மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

### உலகக் கிண்ண கால்பந்து:

# ஆர்ஜன்டீனாவுடனான இறுதிக்கு நடப்புச் சம்பியன் முன்னேற்றம்

உலகக் கிண்ண கால்பந்து அரையிறுதிப் போட்டியில் மொரோக்கோவை 2–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஆர்ஜன்டீனாவுடனான இறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன் பிரான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

கட்டாரின் அல் பைத் அரங்கில் இலங்கை நேரப்படி நேற்று (15) அதிகாலை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் ஐந்தாவது நிமிடத்திலேயே தியோ ஹெர்னான்டஸ் கோல் பெற்றது பிரான்ஸை வலுப்பெறச் செய்தது.

மொரோக்கோ கோல்கம்பத்திற்கு அருகில் தள்ளுமுள்ளு ஏற்பட தன்னிடம் வந்த பந்தை ஹெர்னாண்டஸ் கோலாக மாற்றினார். இதன்மூலம் உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் 1958க்குப் பின்னர் வேகமாக கோல் பெற்றவராக ஹெர்னாண்டஸ் பதிவானார்.

தொடர்ந்து பதில் கோல் திருப்ப மொரோக்கோ கடுமையாகப் போராடியது. போட்டியின் அதிக நேரம் மொரோக்கோவிடமே பந்து சுழன்றது.

எனினும் பிரான்ஸ் மொரோக்கொவின் எதிர்பார்ப்பை 79ஆவது நிமிடத்தில் முழுமையாக சிதறடித்தது. மொரோக்கோ பெனால்டி பகுதிக்குள் ம்பப்பே கடத்தி வந்த பந்தை கோலோ முவானி கோலாக மாற்றினார்.

ஒஸ்மான் டெம்பெலேவுக்கு பதில் மைதானம் வந்து வெறுமனே 44 விநாடிகளிலேயே அவர் அந்த கோலை பதிவு செய்தார். இது உலகக் கிண்ண வரலாற்றில் பதில் வீரராக வந்து பெறப்பட்ட இரண்டாவது வேகமான கோலாக இருந்தது.

இதன்படி வரும் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணி 1978 மற்றும் 1986இன் உலக சம்பியனான லியோனல் மெஸ்ஸியின் ஆர்ஜன்டீனாவை எதிர்கொள்ளவுள்ளது.



1962இல் பிரேசிலுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தை தொடர்ச்சியாக வெல்லும் எதிர்பார்ப்புடனேயே பிரான்ஸ் இறுதிப் போட்டியில் களமிறங்கவுள்ளது.

முன்னதாக முதல் ஆபிரிக்க மற்றும் அரபு நாடாக உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறிய மொரோக்கோ அணி உலகக் கிண்ணத்தின் மூன்றாவது இடத்தை பிடிப்பதற்காக வரும் சனிக்கிழமை (17) குரோசிய அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# தசுனின் தம்புள்ள அணிக்கு தொடர்ந்து 5ஆவது தோல்வி

லங்கா பிரீமியர் லீக் தொடரில் கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு எதிரான போட்டியிலும் தோல்வியை சந்தித்த தம்புள்ள அவ்ரா தொடர்ச்சியாக ஐந்தாவது தோல்வியை எதிர்கொண்டுள்ளது.



பல்லேகலவில் புதன் கிழமை (14) இரவு நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தசுன் ஷானக்க தலைமையிலான தம்புள்ள 89 ஓட்டங்களுக்கே சுருண்டது. கொழும்பு ஸ்டார் 11.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இதன்போதும் சரித் அசலங்க 36 பந்துகளில் ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதன்கிழமை நடைபெற்ற மற்றொரு போட்டியில் நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸை கண்டி பெல்கோன்ஸ் 10 விக்கெட்டுகளால் வீழ்த்தியது.

இதன்போது முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை பெற்றநிலையில் பதிலெடுத்தாடிய ஜப்னா அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களையே பெற்றது.

வனிந்து ஹசரங்க தலைமையிலான கண்டி அணி இந்தத் தொடரில் இதுவரை 6 போட்டிகளில் ஆடி ஐந்தில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் கண்டி அணி 10 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிப்பதோடு ஜப்னா அணி 8 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.



கொழும்பு, சுகததாச அரங்கில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியின் 16 வயதுக்கு உட்பட்ட நீளம் பாய்தலில் இரண்டாம் இடம் பெற்ற பாலமுனை ஹிக்மா வித்தியாலய மாணவர் எம்.எச்.எம். நிப்றானை அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் பாராட்டி கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படத்தை காணலாம். *(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)*

# சச்சின் மகனும் முதல் போட்டியிலேயே சதம்



சச்சின் டென்டுல்கரின் மகன் அர்ஜுன் டென்டுல்கர் தனது தந்தையின் பாணியில் தனது கன்னி முதல்தர போட்டியிலேயே சதம் பெற்றுள்ளார்.

ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் கோவா அணிக்காக 23 வயதான அர்ஜுன் 207 பந்துகளில் 120 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

பிரதான பந்துவீச்சாளராக இருக்கும் அர்ஜுன் ஏழாவது வரிசையில் களமிறங்கி மூன்று இலக்க ஓட்டங்களை பெற்றதன் உதவியோடு கோவா அணி ரஞ்சி கிண்ண போட்டியில் 8 விக்கெட்டுகளை இழந்து 493 ஓட்டங்களை பெற்றது.

1988இல் சச்சின் தனது 15 வயதில் கன்னி முதல் தர போட்டியில் மும்பை அணிக்காக களமிறங்கியபோது அந்த ஆட்டத்தில் சதம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

2013 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து சச்சின் ஓய்வுபொறும்போது டெஸ்ட் போட்டிகளில் 51 சதம் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 49 சதம் என சரியாக 100 சதங்களை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் தலைமையினை துறந்தார் வில்லியம்ஸன்



நியூசிலாந்து டெஸ்ட் அணியின் தலைமை பொறுப்பில் இருந்து கேன் வில்லியம்ஸன் விலகியுள்ளார். அவருக்கு பதில் டிம் சௌதி புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

32 வயதான வில்லியம்ஸன் ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து தலைவராக செயற்படவுள்ளார்.

தற்போது இங்கிலாந்து பயிற்சியாளராக இருக்கும் பிரன்டன் மக்கலமுக்கு பதில் 2016 ஆம் ஆண்டு வில்லியம்ஸன் டெஸ்ட் தலைவராக நியமிக்கப்பட்டார். 40 போட்டிகளில் தலைவராக செயற்பட்டிருக்கும் அவர் 22 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளார்.

"டெஸ்ட் கிரிக்கெட்டில் நியூசிலாந்து அணிக்கு தலைவராக செயற்பட்டது கௌரவமாகும்" என்று வில்லியம்ஸன் கூறினார்.

"மைதானத்திலும் மைதானத்திற்கு வெளியிலும் தலைமைப் பதவி பணிச்சுமையை அதிகரித்திருப்பதோடு இந்தத் தருணத்தில் நான் எடுத்திருக்கும் முடிவு சரியானது என்று கருதுகிறேன்" என வில்லியம்ஸன் தனது விலகல் குறித்து தெரிவித்துள்ளார்.

# ஜனவரி 14 அன்று கால்பந்து தேர்தல்





இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தல் வரும் ஜனவரி 14ஆம் திகதி கொழும்பிலுள்ள விளையாட்டுத் துறை அமைச்சின் டன்கன் வைட் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்பது வரும் டிசம்ர் 20 ஆம் திகதி நிறைவடையும் என்று இலங்கை கால்பந்து சம்மேளன தேர்தல் குழு அறிவித்துள்ளது.

இலங்கை கால்பந்து தேர்தல் குழு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி யூ.எல். மஜீத் தலைமையில் செயற்படுவதோடு அதில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து மற்றும் ஓய்வுபெற்ற மூத்த அரச அதிகாரி சிறிபால மெடவெவ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேநேரம் கண்டி, குருநாகல் மற்றும் அக்கரைப்பற்று கால்பந்து லீக்குகளின் வாக்குரிமையை இலங்கை கால்பந்து சம்மேளன தேர்தல் குழு இரத்துச் செய்திருப்பதோடு கம்பளை, கிளிநொச்சி மற்றும் அரச சேவைகள் கால்பந்து லீக்குகளுக்கு வாக்குரிமையை அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமியை கொன்ற ஆடவருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்



பதினாறு வயது சிறுமியை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தி கொலை செய்ததாக ஒப்புக்கொண்ட முன்னாள் அமெரிக்க கடற்படை வீரர் மீது தெற்கு மாநிலமான மிசிசிப்பியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

விச ஊசி செலுத்தப்பட்ட 58 வயதான தோமஸ் எட்விக் லொடன் புதன்கிழமை மாலை 6.12க்கு உயிரிழந்ததாக மிசிசிப்பி குற்றவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் லீசா கிரேய் என்ற சிறுமியை கடத்திச் சென்ற குற்றத்தை லொடன் ஒப்புக்கொண்டார். தனது வேனில் வைத்து லீசாவை தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய பின் கழுத்தை நெரித்துக் கொன்றதாக அவர் குறிப்பிட்டார்.

செய்த குற்றத்திற்காக அவர் தனது மார்புப் பகுதியில் 'என்னை மன்னித்துவிடு" என்று பச்சை குத்தி இருந்தார் என்று நீதிமன்ற பதிவுகள் குறிப்பிடுகின்றன.

# ஒரு கோடி யாத்திரிகரை தொடும் ஜம்மு ஆலயம்



கொவிட் பெருந்தொற்று காரணமாக இரண்டு ஆண்டுகள் மூடப்பட்டிருந்த ஜம்மு மாகாணத்தில் உள்ள மாதா வைஷ்னோ தேவி ஆலயம் இந்த ஆண்டு ஒரு கோடிக்கும் அதிகமான யாத்திரிகர்களை வரவேற்கவுள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை இந்த ஆலயத்துக்கு 86 இலட்சம் யாத்திரிகர்கள் வருகை தந்திருக்கும் நிலையில் இந்த மாத இறுதியில் இந்த எண்ணிக்கை ஒரு கோடியை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச செய்திகள்

### 'கொவிட் இனியும் அச்சுறுதல் இல்லை'

# உலக சுகாதார அவரச நிலையை கைவிட சுகாதார அமைப்பு திட்டம்

அடுத்த ஆண்டில் கொவிட் தொற்று தொடர்ந்தும் உலகளாவிய சுகாதார அவசர நிலையாக இருக்காது என்று உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

கொவிட்–19 அவசரநிலையை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனம் குறித்து உலக சுகாதார அமைப்பின் கொவிட்–19 அவசரக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் நடத்தப்படவுள்ளதாக ஜெனீவாவில் கடந்த புதனன்று (14) நடந்த செய்தியாளர் மாநாட்டில் அந்த அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசஸ் தெரிவித்தார்.




"அடுத்த ஆண்டின் ஒரு கட்டத்தில் கொவிட்–19 உலகளாவிய சுகாதார அச்சுறுத்தல் இல்லை என்று எம்மால் கூற முடியுமாக இருக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

எனினும் கொவிட்–19 தொற்றுக்குக் காரணமான 'சார்ஸ்–கொவ்–2' வைரஸ் அழிந்துவிடாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"இந்த தொற்றுடன் பல நாடுகளிலும் தற்போது தீவிரமாக பரவியிருக்கும் காய்ச்சல் மற்றும் ஆர்.எஸ்.வி. (சுவாச நுண்குழல் அலற்சி வைரஸ்) உட்பட சுவாச நோய்களை கையாள்வதற்கு அனைத்து நாடுகளும் கற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் கெப்ரியேசஸ் கூறினார்.

கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி முடிவில் கொவிட்–19 தொற்றை சர்வதேச அவதானத்திற்குரிய பொது சுகாதார அவசர நிலை ஒன்றாக உலக சுகாதார அமைப்பு பிரகடனம் செய்தது. சர்வதேச சட்டத்தின் கீழ் இது உச்ச எச்சரிக்கை அளவாகும்.

அப்போது சீனாவுக்கு வெளியில் 100க்கு குறைவான தொற்றுச் சம்பவங்களே பதிவாகி இருந்ததோடு எந்த உயிரிழப்பும் பதிவாகி இருக்கவில்லை.

முதல் கொவிட் தொற்று சம்பவம் பதிவானது தொடக்கம் இதுவரை 645 சம்பவங்கள் உறுதி செய்யப்பட்டிருப்பதோடு, கிட்டத்தட்ட 6.64 மில்லியன் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. நோய்த்தொற்றுக்கு எதிராக 13 பில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்தபோதும் உலகில் குறைந்த வருமானம் உடைய நாடுகளில் ஐந்து பேரில் ஒருவரே தடுப்பூசி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய சுகாதார அவசரநிலை அறிவிக்கப்பட்டதன் மூலமே நோய்க்கான சிகிச்சை மற்றும் தடுப்பூசியை பகிர்வதற்கான சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நிதி சேகரிக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கிழக்கின் குரல்



## பொத்துவில் கனகர் கிராமத்தில் 76 குடும்பங்களுக்கு காணி பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு

திருக்கோவில் தினகரன் நிருபர்



அம்பாறையின் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கனகர் கிராமத்தில் காணிக்காக கோரியவர்களில், 76 குடும்பங்களுக்கு காணி வழங்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் பிரதேச செயலாளர் எஸ்.பிரனாஸின் ஒழுங்கமைப்பிலும் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டி.வீரசிங்கவின் தலைமையிலும் இதற்கான கூட்டம், பொத்துவில் பிரதேச செயலகத்தில் நேற்று (15) நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து கொண்டார்.

தாம் பூர்வீகமாக வாழ்ந்து வரும் காணியை தமக்கு வழங்குமாறு கோரி கனகர் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், கடந்த 2018ஆம் ஆண்டு முதல் வீதியோரத்தில் கொட்டகை அமைத்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்ததைத் தொடர்ந்து, அவர்கள் வாழ்ந்து வரும் காணியை அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், கொரோனா காரணமாக தடைப்பட்டிருந்த இவ்வேலைத்திட்டம் தற்போது மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குடும்பமொன்றுக்கு குடியிருப்புக்காக 20 பேர்ச் காணியும் விவசாய நடவடிக்கைக்காக ஓர் ஏக்கர் காணியும் வழங்க தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களுக்கு காணி வழங்குவதற்கான திருவுலச்சீட்டு முறைத் தெரிவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவர்களுக்கு வழங்குவதற்குரிய காணி அளவை செய்யப்பட்டு விரைவாக அதில் மக்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இக்கூட்டத்தில் ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

## கல்முனையில் காணாமல் போன தங்கச்சங்கிலி உரியவரிடம் ஒப்படைப்பு



ஒலுவில் விசேட நிருபர்

கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற இ.போ.ச. பஸ்ஸில், பெண்ணொருவரின் சுமார் 2 பவுண் தங்கச் சங்கிலி காணாமல் போனதைத் தொடர்ந்து, அதைக் கண்டெடுத்தவர் உரியவரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றது.

சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியே இவ்வாறு காணாமல் போனதுடன், ஒலுவிலைச் சேர்ந்த தாதி மேற்பார்வை உத்தியோகத்தர் எஸ். ஜலால்டீன் அதைக் கண்டெடுத்துள்ளார்.

இது தொடர்பில் பஸ் நடத்துனரிடம் தங்கச் சங்கிலியைக் கண்டெடுத்தவர் தெரியப்படுத்தி, உரியவரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

இதற்கிடையில் தனது தங்கச் சங்கிலி காணாமல் போனதை அறிந்த அப்பெண், சங்கிலியைத் தேடி பஸ் ரிக்கட்டிலிருந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, நடத்துனரிடம் சம்பவத்தைத் தெரிவித்தார்.

இதனையடுத்து, தங்கச் சங்கிலி கண்டெடுக்கப்பட்ட விடயத்தை அப்பெண்ணுக்கு நடத்துனர் தெரியப்படுத்தியதுடன், அதைக் கண்டெடுத்தவர், உரியவரிடம் ஒப்படைக்க விரும்புவதாகவும் தெரியப்படுத்தினார்.

இந்நிலையில், கல்முனை பொலிஸ் நிலையத்தில் வைத்து சங்கிலியைத் தொலைத்த பெண்ணிடம், சங்கிலியைக் கண்டெடுத்தவர் ஒப்படைத்துள்ளார். தங்கச் சங்கிலியை கண்டெடுத்து ஒப்படைத்த மேற்பார்வை உத்தியோகத்தரை கல்முனை பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

## கிண்ணியா கல்வி வலய ஆசிரியர்களுக்கு வருடாந்த இடமாற்ற விண்ணப்பம் கோரல்

கிண்ணியா மத்திய நிருபர்

கிண்ணியா கல்வி வலயத்துக்குட்பட்ட மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்கள், விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி, எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிண்ணியா வலய கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பில் சகல பாடசாலை அதிபர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பாடசாலையொன்றில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் அல்லது அதற்கு மேல் சேவையாற்றி இருக்கும் பட்சத்திலேயே இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியுமென, கிண்ணியா வலய கல்வி அலுவலகம் தெரிவித்தது.

## காரைதீவில் அன்னை சாரதா 170ஆவது ஜனனதின நிகழ்வு



காரைதீவு குறூப் நிருபர்

இராமகிருஷ்ணமிஷன் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 170ஆவது ஜனனதின நிகழ்வு காரைதீவில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றது. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த இல்லத்தில் அன்னையின் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

## கல்முனையில் நத்தார் ஒளி விழா



காரைதீவு குறூப் நிருபர்

கல்முனை ஆதார வைத்தியசாலையின் ஒளி விழாவானது அவ்வைத்தியசாலையின் அத்தியட்சகர், வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது, சிறுவர்களுக்கானநிகழ்வுகளில் நத்தார் தாத்தா கலந்து சிறப்பித்தார்.

ஒவ்வொரு விடுதிகளுக்கும் நத்தார் தாத்தா சென்று சிறுவர்களையும் நோயாளர்களையும் மகிழ்வூட்டியதுடன், பரிசுப் பொருட்களையும் வழங்கினார்.

## தோப்பூர் அல்லைக்குளத்தில் படர்ந்துள்ள சல்பீனியாவை அகற்ற வேண்டுகோள்

தோப்பூர் குறூப் நிருபர்



தோப்பூர் பிரதேசத்திலுள்ள அல்லைக்குளத்தில் சல்பீனியா தாவரம் படர்ந்துள்ளதால், அக்குளத்தை தமது தேவைகளுக்கு பயன்படுத்த முடியாதுள்ளதாக, பொதுமக்கள் தெரிவித்தனர்.

தோப்பூரில் குழாய் நீர் விநியோகமானது இரண்டு நாட்களுக்கு வழங்கப்பட்டும், அடுத்த இரண்டு நாட்களுக்கு அக்குழாய் நீர் விநியோகம் துண்டிக்கப்படும் நிலைமை மாறி மாறி இடம்பெறுகின்றது. இந்நிலையில், இக்குளத்தை பொதுமக்கள் குளிப்பது உள்ளிட்ட தமது அன்றாடத் தேவைகளுக்கு அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இருந்தபோதிலும், இக்குளத்தில் சல்பீனியா தாவரம் படர்ந்துள்ளதால், தாம் சிரமத்தை எதிர்நோக்குவதாக, பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இத்தாவரத்தை குளத்திலிருந்து முழுமையாக அகற்றி, குளத்தை தாம் பயன்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் உதவ முன்வர வேண்டுமென, பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## திருமலை பொதுநூலகத்தில் பட்டிமன்றம், பயிற்சிப் பட்டறை

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தின் செயற்பாடுகளாக சிறப்புப் பட்டிமன்றமும் பயிற்சிப் பட்டறையும் நேற்று (15) நடைபெற்றது.

திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலகத்துக்கான பிரதம நூலகர் வரதகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 'இன்றைய நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் அரசியல்வாதிகள்' எனவும் மறுதரப்பு வாதமாக 'அரசியல்வாதிகள' அல்லர்' எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

மாணவர்களுக்கிடையில் வாதத்திறனை அதிகரிக்கும் வகையிலும் வாசிப்புத்திறனை மேம்படுத்தும் வகையிலும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## அட்டப்பள்ளத்தில் விபத்து; கார் சாரதி உயிரிழப்பு

கல்முனை மத்திய தினகரன், காரைதீவு குறூப் நிருபர்கள்



கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியில் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் நேற்று (15) இடம்பெற்ற வாகன விபத்தில் கார் சாரதி உயிரிழந்துள்ளார்.

மேற்படி கார், வீதியோரத்தில் இருந்த மரத்துடன் மோதியதால் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இவ்விபத்து தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பெண்கள், சிறுவர்களின் பாதுகாப்பு கருதி பெயர்ப்பதாகை காட்சிப்படுத்தல்



காரைதீவு குறூப் நிருபர்

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஆபத்துகள் ஏற்படும் போது, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் உடனடியாக அழைக்க வேண்டிய அதிகாரிகளின் பெயர்களும் தொலைபேசி இலக்கங்களும் அடங்கிய பெயர்ப் பதாதைகளை காட்சிப்படுத்தும் நடவடிக்கை பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில், மேற்படி இடங்களிலுள்ள பிரதேச செயலகங்களிலும் வைத்தியசாலைகளிலும் இந்நடவடிக்கை அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

பெண்கள் வலையமைப்பின் அம்பாறை மாவட்ட தலைவி கலைவாணி தயாபரன் தலைமையிலான குழுவினர், இப்பதாகைகளை காட்சிப்படுத்தினர்.

## வாசிப்பு மாத பரிசளிப்பு விழா



சாய்ந்தமருது விசேட நிருபர்

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி நூலகத்தினால் வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை, சித்திரம் வரைதல், கவிதை வாசிப்பு, வீட்டு நூலகம் அமைத்தல் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கான பரிசளிப்பு விழா அக்கல்லூரியில் நேற்று (15) நடைபெற்றது. இதில் விசேட அம்சமாக சிறந்த ஆளுமையுள்ள மாணவர்களுக்கான விசேட விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்லூரி முதல்வர் யூ.எல்.எம்.அமீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மருதமுனை பிரதேசத்தில் கலாசார இலக்கிய விழா



பெரியநீலாவணை விசேட நிருபர்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கல்முனை பிரதேச செயலகமும் பிரதேச கலாசார அதிகார சபையும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த பிரதேச மட்ட கலாசார இலக்கிய விழா, மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேசக் கலைஞர்களின் கலாசார நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டதுடன், பிரதேச மட்ட இலக்கியப் போட்டித் தொடர்களில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களுக்கும் விசேட பரிசில்களில் வழங்கி வைக்கப்பட்டன.

## மூதூர் நாணல்சேனையில் யானைகள் அட்டகாசம்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நாணல்சேனை கிராமத்தில் வசிக்கும் மக்கள் இரவில் வரும் யானைகளினால் பெரும் அச்சத்தில் வாழ்ந்து வருவதாக, மூதூர் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்றச் சங்கத்தின் செயலாளர் எம்.ஏ.அன்வர் சதாத் தெரிவித்தார்.

கடந்த இரு தினங்களில் பன்வெட்டான் காடுகளிலிருந்து இறால்குழி பால்துறை ஆற்றைக் கடந்து நள்ளிரவில் வந்த யானைகள், பயன்தரு மரங்களை சேதப்படுத்தியுள்ளன.

இதேவேளை, இரவானதும் இக்கிராமத்தில் வசிக்கும் மக்கள் தமது குடியிருப்புக்கு வெளியில் தீ மூட்டியும் பட்டாசு கொளுத்தியும் காவல் காப்பதாகவும் தொடர்ந்தும் யானைக்கு அஞ்சிய நிலையில் நிம்மதியற்று வாழ்வதாகவும், அவர் தெரிவித்தார்.

# 'சர்வதேச நீர் மாநாடு 2022' வைபவரீதியாக ஆரம்பம்

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பிரதம அதிதியாக பங்கேற்பு

பி.எம். முக்தார்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் 'சர்வதேச நீர் மாநாடு 2022' நேற்று முன்தினம் 14ஆம் திகதி புதன்கிழமை சுகாதார மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது, இரத்மலானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு சிறப்பு மையம் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிநீர் போத்தலும் இதன்போது அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.






இந்நிகழ்வில் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, அமைச்சின் செயலாளர் மொன்டி ரணதுங்க, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்க, பிரதி தலைவர் சஞ்சீவ விஜேதுங்க, பொது முகாமையாளர் திலின விஜேதுங்க உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

நேற்று முன்தினம் (14) ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச நீர் மாநாடு எதிர்வரும் 16ஆம் திகதிவரை நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு சிறப்பு மையத்தில் நடைபெறும். அதையடுத்து 17ஆம் திகதி கண்டி சுற்றுலாவுடன் நிறைவுறும்.

# புத்தளம் பாலர் பாடசாலை மாணவர்களின் கண்காட்சி



புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் சிங்கிதி பாலர் பாடசாலை மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு அண்மையில் ஆசிரியை அமிதா எதிரிசிங்க தலைமையில் நடைபெற்றது. புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் இதில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக நகரசபை உறுப்பினர்கள் ரனீஸ் பதுர்தீன், விஜேதாச மற்றும் மங்கலிகா ஜயசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வில் சிறார்களின் சித்திரம், கைப்பணிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. நிகழ்வில் நகர சபை உயரதிகாரிகள் மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

கெகிராவ கல்வி வலயத்தில் சா/த பரீட்சையில்;

# நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயம் முதலிடம்

கல்நேவ தினகரன் விசேட நிருபர்

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி கெகிராவ கல்வி வலயத்தில் தமிழ் மொழிப் பாடசாலைகளில் முதலாவது இடத்தை நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயம் பெற்றுள்ளது.

இப்பாடசாலையில் இருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களில் 92% வீதமான மாணவர்கள் உயர்தரப் பிரிவுகளில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளனர். அத்தோடு இப்பாடசாலை கெகிராவ கல்வி வலய பலாகல கல்வி கோட்டத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பாடசாலைகளில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது.

பரீட்சை பெறுபேறுகளின்படி அனுராதபுரம் மாவட்டத்தில் மதவச்சி அல் மதீனா முஸ்லிம் வித்தியாலயம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி 100% சித்தியினை பெற்று தமிழ்மொழிப் பாடசாலைகளில் மாவட்டத்தில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது.

மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான கலென்பிந்துனுவெவ கல்வி வலய ஹொரவப்பொத்தான கல்விக் கோட்ட பாடசாலையான வீரச்சோலை வித்தியாலயம் 94% வீதமான சித்தியினை பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கெகிராவ கல்வி வலயத்தில் தமிழ்மொழிப் பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளில் இரண்டாம் இடத்தை 84% வீதமான சித்தியினை கலாவெவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் பெற்றுள்ளது. மூன்றாம் இடத்தை 80% சித்தியினை கல்லாஞ்சியகம அறபா முஸ்லிம் மகா வித்தியாலயம் பெற்றுள்ளது.

# கல்னேவயில் கோர விபத்து ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் கல்னேவ ஹிரிபிட்டியாவ பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கல்னேவ பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர் சிகிச்சைக்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கல்னேவ தமுத்தேகம பிரதான வீதியில் கல்னேவ பகுதியில் இருந்து புள்னேவ பகுதி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டினை இழந்து மரத்தில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். 25 வயதுடைய கல்னேவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வங்கி உதவிச் சேவை

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வங்கி உதவி (வங்கிச் சேவை) கடந்த (14) அநுராதபுரம் மாவட்ட சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவு உதவிப் பணிப்பாளர் ஜி.ஆர்.யு.கே. கமகே தலைமையில் அநுராதபுர மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோரின் நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவு உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நாட்டின வளர்ச்சிக்கு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெரிதும் உதவுகின்றன. அவர்களின் தேவைகள் எவ்வாறானதாக இருந்தாலும் அவர்களின் நிதித் தேவைகளை கையாள்வதில் ஏற்படும் சிரமங்களையும் பிரச்சினைகளையும் இதன் மூலம் தவிர்க்க முடியும் என நம்புவதாக திருமதி கமகே மேலும் தெரிவித்தார்.



ஏழு அரச மற்றும் தனியார் வங்கிகள் வங்கி உதவிச் செயற்பாடுகளில் இணைந்திருந்தன. இந்த வங்கிகளின் ஊடாக 44 தொழில் முனைவோர் நிவாரணத்திற்காக காத்திருந்தனர். குறைந்த வட்டி விகிதத்தில் தொழில் முனைவோருக்கு கடன் வழங்குவதற்கான உணர்வு பூர்வமான முயற்சிகள் இங்கு இடம் பெற்றன.

இதன்போது அநுராதபுரம் மாவட்ட சிறுதொழில் அபிவிருத்தி பிரிவின் தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் எஸ். ஜயரத்ன, ஆர்.எம்.எஸ். அஜித்குமார், ஆர்.டி.யு.என். குணவர்தன, பி.எச்.எம்.ஏ. சடமாலி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். ரணசிங்கவுடன் சிறு தொழில் அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், வங்கி அதிகாரிகள் மற்றும் தொழில் முனைவோர் அடங்கிய குழுவொன்றும் இதில் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஐம்பது பாலர் பாடசாலைகளுக்கு பிரதேச செயலாளர் அயிராங்கனீ வீரசிங்க தலைமையில் குடிநீர் வடிகட்டிகள் (water Filter) அண்மையில் வழங்கி வைக்கப்பட்டபோது எடுத்த படம். (பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# மிக நீண்ட நாட்களாக குற்றச்செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

மிகநீண்ட நாட்களாக கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அறலகங்வில முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வு தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (14 ) ஹிங்குரங்கொட பொலிஸ் பிரிவின் தெவனசெத்தபுமு பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் ரிவோல்வர் ரக தன்னியக்க துப்பாக்கியொன்றையும் அதற்குப் பயன்படுத்தும் மி.மீட்டர் 09 ரக தோட்டாக்கள் நான்கு மற்றும் கூரிய வாள் என்பவற்றை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 49 வயதுடைய ஹிங்குரங்கொட பகுதியைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபரை ஹிங்குரங்கொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். ஹிங்குரங்கொட பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் ஹிங்குரங்கொட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




சீன அரசாங்கத்தின் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற சிறுநீரக நோய்களை கண்டறியும் நடமாடும் பரிசோதனை ஆய்வக அம்புலன்ஸ் ஒன்றை அநுராதபுரம் தந்திரிமலை பிரதேச வைத்தியசாலைக்கு வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தினால் மாகாண சபை வளாகத்தில் வைத்து அண்மையில் வழங்கிவைத்த போது பிடித்த படம்.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# புத்தளம் 'MWDT' அமைப்பின் ஏற்பாட்டில் வன்முறை தொடர்பான ஒன்றுகூடல்

புத்தளம் தினகரன் நிருபர்)



ஒவ்வொரு வருடமும் புத்தளம் பாலாவியில் அமைந்துள்ள முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையத்தினால் (MWDT) அவ்வருடங்களின் கருப்பொருள்களுக்கேற்ப பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இம்முறை "வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வர அனைவரும் ஒன்றிணைவோம்" எனும் சர்வதேச கருப்பொருளில் புத்தளம் நகர மண்டபத்தில் அண்மையில் (12) பெண்களுடனான ஒரு நாள் ஒன்றுகூடல் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

முதற்கட்டத்தில் புத்தளம் மாவட்டத்தில் MWDT உடன் இணைந்து 10 வருடங்களுக்கும் மேலாக கிராம மட்டங்களில் பெண்களின் உரிமைக்காகவும் எழுச்சிக்காகவும் பணியாற்றிய மற்றும் பணியாற்றி வருகின்ற 25 பெண் ஆர்வலர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து வன்முறைகளில் இருந்து தப்பிப்பிழைத்த பெண் போராளிகள் அத்தினம் பிரச்சினைகளை மறந்து மகிழ்ச்சியாக இருப்பதற்கான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. புத்தளம் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள், புத்தளம் மாவட்ட உதவி செயலாளர், மாவட்ட மற்றும் பிரதேச பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், புத்தளம் தள வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அங்கத்தவர்கள், தேசிய அபிவிருத்தி வங்கியின் புத்தளம் பிராந்திய முகாமையாளர் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# தர்கா நகர் அமீர் ஆலிம் குர்ஆன் மத்ரஸாவின் மீலாத் தின நிகழ்வு

பேருவளை விசேட நிருபர்

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் இயங்கும் அமீர் ஆலிம் குர்ஆன் மத்ரஸாவில் மீலாதுன் நபி விழாவும் பரிசளிப்பு வைபவமும் அதிபர் மௌலவி இஸ்மதுல் ஹாரூன் முஹம்மது ஸுஹைர் (முஅய்யதி) தலைமையில் மத்ரஸா மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

மத்ரஸா சிறார்களிடையே சன்மார்க்க அறிவுப் போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதோடு வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற நிகழ்வில் நிலைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களான டொக்டர் ஹுஸ்னா நஜீப், ஏ.ஜே. எம். அக்பர், எம்.லியாஸ் ஹாஜியார்,



முகத்தமுஷ் ஷாதுலி எம்.ஹுஸைன் ஹாஜியார் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

குர்ஆன் மத்ரஸாவில் இணைந்து ஒரு மாத காலத்திற்குள் தஃலிமுல் குர்ஆனை ஓதி முடித்த சிறுமியொருவரும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருட்டில் ஈடுபட்ட இளைஞன் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் மகன் பெண்களின் மோட்டார் சைக்கிள் இருக்கையின் கீழ்ப் பகுதியை போலி திறப்புக்களைக் பயன்படுத்தி திறந்து அதற்குள் வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசி மற்றும் பணம் என்பனவைகளை திருடிய சம்பவம் தொடர்பில் கடந்த (09) கைது செய்யப்பட்டுள்ளார் பெண்கள் பயன்படுத்திவரும் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குச் சென்று மோட்டார் சைக்கிள்களின் இருக்கையின் கீழ்ப் பகுதியை போலி திறப்புக்களைப் பயன்படுத்தி திறந்து அங்கிருந்த கைத்தொலைபேசி மற்றும் நான்கு இலட்சம் ரூபா பணத்தினையும் திருடிய நிலையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். அநுராதபுரம் வன்னியங்குளம் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

303

உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை

பொதுவான சேவைகள்

DR. Z.A.M. SHUAIB, NEW THIHARIYA ABDEEN MEDICAL CENTRE, 116C, COLOM BO KANDY ROAD, THIHARIYA JUNCTION பெற்றோல் நி லையம் அருகே. 074 06 56 333. உடல்நிறையைக் குறைத்தல், உடல்நிறையை அதி கரித்தல், புகைப்ப ழக்க த்தை நிறுத்துதல், பாலியல் நோய்கள், மாதவிடாய்க் கோளாறுக ள், தோல் நோய்கள் அ னைத்துக்கும் விரைவான சிகிச்சை. 076677

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் நபருக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப் பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | இடம் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|---|
| E/AL/N/22/47 | மீமுரே கைகாவல ஏகாபந்த விதுலி பாரிபோகிக பிரைவேட் லிமிடெட் | மீமுரே கைகாவல 100 KW மினி நீர் மின் நிலையம் | உடுதும்பர, மீமுரே, கைகாவல | 0.1 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2022.12.16

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# இலங்கை வங்கி

**பின்வரும் நகரத்தில் CRM இயந்திரத்துக்கான அறையை நிறுவுவதற்கு பொருத்தமான கட்டடம் நீண்டகால குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.**

## வாத்துவ நகரம்

**குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடத்தின் முகப்பானது பிரதான வீதியிலிருந்து குறைந்தபட்சம் 8 அடி அகலத்தைக் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.
- தரைப்பகுதி 8X14 அடிகளாக இருத்தல் வேண்டும். (112 சதுர அடிகள்)
- 30 அம்பியர் மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- இலகுவில் சென்றடையக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- காற்றுப் பதனாக்கி இயந்திரத்தை பொருத்த போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம், அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "CRM **இயந்திரத்துக்கான அறை - வாத்துவ நகரம்**" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(மேல் மாகாணம்-தெற்கு),
இலங்கை வங்கி,
மேல் மாகாணம்-தெற்கு காரியாலயம்,
இல: 175, ஹைலெவல் வீதி,
நுகேகொடை.
தொலைபேசி : 011 280 9125/011 280 9126
தொலைநகல் : 011 280 9238
மின்னஞ்சல் : bocwps@boc.lk

1975 BOC

AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

Highland

## மில்கோ (பிறைவட்) லிமிடட்
### (அரசுரிமை தொழில்முயற்சி)

MILCO

இலங்கையில் ''ஹைலண்ட்'' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பால் உற்பத்திகளை தயாரித்தல், பால் பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் அரசு உரிமையுள்ள முதன்மையான அமைப்பே மில்கோ (பிறைவட்) லிமிடட் என்பதாகும். பின்வரும் சாதனத்தை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தர அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கேள்விக் குழுவின் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உருப்படி / விபரங்கள் | முத்திரையிடப்பட்ட கேள்வி இல. | முடிவுறுதல் திகதி மற்றும் நேரம் | ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபா | விலைக் கோரல் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | திகன பாற் பண்ணைக்கு டீசல் எரிபொருள் நிலையமொன்றை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | SQ/2022/P/359 | 04/01/2023 பி.ப. 3.00 மணி | 2,000.00 | 100,000.00 |

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை பின்வரும் வங்கி விபரங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும் (எக்காரணம் கொண்டும் ரொக்கப் பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**வங்கிக் கணக்கின் பெயர்** : மில்கோ (பிறைவட்) லிமிடட்
**கணக்கிலக்கம்** : 004100180210331
**வங்கி மற்றும் கிளை** : மக்கள் வங்கி கோப்பரேட் வங்கிப் பிரிவு
**காரணம்** : **SQ/2022/P/359** கேள்விக்கான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம்

**பொது நிபந்தனைகள்**

1) முழு விபரங்களுடன் கூடிய கேள்விப்பத்திர ஆவணங்கள்/ விபரங்கள், ஆகியவற்றை மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவான ஐந்தாம் மாடி, இல. 345, காலி வீதி, கொழும்பு-3, என்ற முகவரியில் 2022-12-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00 மணி வரையில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றுடன் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்தியதற்கான வங்கி வைப்புத் துண்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் அல்லது வேறு ஆவணங்கள் என்பன கோரிக்கைக் கடிதம் இல்லாமல் வழங்கப்படமாட்டாது.
2) 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு (இயைபுடைய ஒவ்வொரு வகுதிக்கும்) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சலுகையுடன் கூடிய விலைக் கோரல் பிணை முறி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மில்கோ (பிறைவட்) லிமிட்டட்டின் கொள்வனவுப் பிரிவில் 2023-01-04ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் நேரத்தில் அங்கு சமுகமளித்திருக்கலாம்.
4) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை கொள்வனவுப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5) எக்காரணமும் காட்டாமல் எந்தவொரு கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
6) மில்கோ நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் இந்த முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வியில் பங்குபற்ற முடியாது.

இந்த கேள்வி கோரல் பற்றிய மேலதிக தகவல், விபரம் அல்லது விளக்கம், தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-4500530-4.

**தலைவர் - கேள்விக்குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**ஐந்தாம் மாடி,**
**இல. 345, காலி வீதி,**
**கொழும்பு-03.**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக புகழ்வாய்ந்த மற்றும் தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் (EOM&MD) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்தக் காலஎல்லை (நாட்காட்டி நாட்கள்) | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| RDA/EOM&M/CLS/CKE&OCH/2022/44 | EOM&M பிரிவின் கொட்டாவயிலிருந்து கடவத்தை, கெரவலப்பிட்டிய மற்றும் தொரண சந்தி (Etc) பேலியகொடவிலிருந்து சீதுவ வரையும் சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்கல் (துப்புரவாளர்கள் மாத்திரம்) | 365 | 200,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை அலுவலக நேரங்களில் தேவைப்படின், பண்டராகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை EOM&M பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-3047806. தொலைநகல்: 038-2289560)
4. **EOM&M** பிரிவின் சீதுவ **EOM&M** பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மேலதிக பணிப்பாளரின் அலுவலகத்தில் 2023.01.03 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும். அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு சமுகமளிப்பது கட்டாயமானதாகும். விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு பங்கேற்காதது விலைமனுவை தகைமையற்றதாக்கும்/ ஒப்பந்தத்தை வழங்குவதை தகைமையற்றதாக்கும்.
5. 2022.12.19 ஆம் திகதியிலிருந்து 2023.01.10 ஆம் திகதிவரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,500 ரூபா மற்றும் 675 ரூபாவை (பெசேவ) செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (**EOM&M** பிரிவு) பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர் மற்றும் கேள்வியின் சித்திகரமான வெற்றியாளர் கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
6. மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் ஒவ்வொரு விலைமனுவும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.05.10 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. 2023.01.11 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், **EOM&M** பிரிவு பெறுகைக் குழு,பணிப்பாளர் மே/பா, **EOM&M** பிரிவு, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2023.04.12 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

மேலே குறியீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்,**
**EOM&M பிரிவுபெறுகைக் குழு,**
**பணிப்பாளர் EOM&M பிரிவு மே/பா.,**
**வீதி அபிவிருத்தி சபை,**
**கஹட்டகஹஹேன ,வல்கம,**
**பண்டாரகம.**

போக்குவரத்து சேவை

# லேக் ஹவுஸ் மூவர்ஸ்



## சலுகை விலைகளின் கீழ்...

- சாரதியுடன் வாகனம்
- சாரதி மற்றும் சாரதி உதவியாளருடன் வாகனம்
- பஸ் மாதாந்த வாடகை அடிப்படையில்

பத்திரிகை இல்லத்தினால் மேற்கொள்ளப்படும் மற்றொரு சேவை.

தொடர்புகள் :
011-2429673/ 077 9702749



## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

### பொது அறிவித்தல்

### ஏஎஸ்கே கேபள் விசன் (பிரைவட்) லிமிடடின் அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் நிறமாலையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க இணைய மற்றும் கேபள் டெலிவிசன் சேவைகள் உள்ளடங்கலாக **தரவு தொடர்பாடல் சேவைகள்** வழங்குவதற்கு தொலைத்தொடர்புத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு **ஏஎஸ்கே கேபள் விசன் (பிரைவட்) லிமிடட்** விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க மேலொமொரு ஐந்து வருட காலப் பகுதிக்காக **ஏஎஸ்கே கேபள் விசன் (பிரைவட்) லிமிடடிற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப்** புதுப்பிப்பதற்கு, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு கருதுகின்றது என்பது சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஏஎஸ்கே கேபள் விசன் (பிரைவட்) லிமிடடிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை **2023.01.14** ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணைய தளமான **www.trc.gov.lk** இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

பணிப்பாளர் நாயகம்,
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,**
இல. 276, எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 08.

தொலைபேசி : 011-2689345 பெக்ஸ் : 011 – 2689341
மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk

## அறிவித்தல்

### மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின்

### மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அறிவித்தல் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உதியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் அதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திதகி 2022.12.28 ஆகும்.

**டீ.ஏடி.டப்லிவ் தயானந்த**
**செயலாளர்**
**அரச சேவைகள் ஆணைக்குழு**
**மத்திய மாகாண சபை**

**2022 டிசம்பர் மாதம் 14ஆம் திகதி**
**மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு**
**இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,**
**கண்டி.**

## கேள்வி அறிவித்தல்

### 2023ஆம் ஆண்டிற்கு கலிகமுவ பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் சொத்துக்களை குத்தகைக்கு விடல்

01. கலிகமுவ பிரதேச சபையின் தலைவரான என்னால் கீழே அட்டவணையில் விபரிக்கப்படும் சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விப் பத்திரங்கள் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களிடமிருந்து 2022.12.30 பி.ப. 1.00 வரை ஏற்கப்படும்.
02. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களுக்கு வருகை தருவதற்கு அனுமதி அளிக்கப்படுவதுடன் பிரதேச சபை, அலுவலகத்தில் 2022.12.30ம் திகதி கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும்.
03. தலைவருக்கு எழுத்துமூல வேண்டுதலை மேற்கொண்டு குறித்த மாதிரிப் பத்திரங்களை 2022.12.30 மு.ப. 10.00 வரை பெற்றுக்கொள்ளலாம். சகல கேள்விகளும் 02 பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் கேள்விகள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்வியின் பெயர் மற்றும் குறித்த தொடர் இலக்கத்தை" குறிப்பிடுதல் வேண்டும்.
04. கேள்விகள் பதிவுத் தபாலில் அல்லது சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு ஒப்படைக்கலாம். கேள்வி சம்பந்தமாக செலுத்த வேண்டிய வைப்புத் தொகை பற்றி கீழே அட்டவணையில் குறிப்பிடப்படுவதுடன் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு மேற்படி தொகையைச் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இக் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட ஏனைய கேள்வி நிபந்தனைகள் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் விநியோகிக்கப்படும் வேளையில் வழங்கப்படும்.

| தொடர் இல. | கேள்வியின் பிரகாரம் குத்தகை வழங்கப்படும் இடம் | வருடாந்த குறைந்தபட்ச கேள்வி ரூ. | சதம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை ரூ. | சதம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூ. | சதம். |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கலிகமுவ மீன் தட்டு குத்தகைக்கு விடல் | 1,600,600 | - | 10,000 | - | 2,000 | - |
| 02 | பிட்டகஸ்தெனிய வார சந்தை மீன் தட்டு குத்தகைக்கு விடல் | 287,550 | - | 3,000 | - | 1,500 | - |
| 03 | தேவலேகம மீன் தட்டு குத்தகைக்கு விடல் | 15,000 | - | 2,000 | - | 1,000 | - |
| 04 | பல்லபான மீன் தட்டு குத்தகைக்கு விடல் | 51,500 | - | 2,000 | - | 1,000 | - |
| 05 | கொட்டியாகும்புர மீன் தட்டு குத்தகைக்கு விடல் | 875,973 | - | 5,000 | - | 2,000 | - |
| 06 | கலிகமுவ பொது மலசலகூடம் குத்தகைக்கு விடல் | 180,000 | - | 2,000 | - | 500 | - |
| 07 | எதுராபொத்த வலவ்வத்த காணி சேனைப் பயிர்ச் செய்கை துண்டு இல. 34/35 குத்தகை விடல் | 22,500 | - | 1,000 | - | 250 | - |
| 08 | விமலாகம மயான பூமி விளைச்சல் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கைக்காக குத்தகைக்கு விடல் (தானியங்கள்) | 6,500 | - | 500 | - | 250 | - |
| 09 | பெயாபீல்ட் தெகிரிஹேன காணி விளைச்சல் மற்றும் சேனைப்பயிர்ச் செய்கைக்காக குத்தகைக்கு விடல் (தானியங்கள்) | 7,700 | - | 500 | - | 250 | - |
| 10 | ஹெலமட மயான பூமி காணி விளைச்சல் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கைக்காக குத்தகைக்கு விடல் (தானியங்கள்) | 2,750 | - | 500 | - | 250 | - |
| 11 | எதுராபொத மயான பூமிக் காணி விளைச்சல் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கைக்காக குத்தகைக்கு விடல் (தானியங்கள்) | 1,870 | - | 500 | - | 250 | - |
| 12 | தியபல்லன்வல சேனை மற்றும் கதுருகஹலன்தவத்த காணி விளைச்சல் மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை குத்தகைக்கு விடல் (தானியங்கள்) | 2,510 | - | 500 | - | 250 | - |
| 13 | மொனராகல மயானபூமி காணி விளைச்சல் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கைக்காக குத்தகை விடல் (தானியங்கள்) | 4,800 | | 500 | - | 250 | - |
| 14 | எதுராபொத்த வலவ்வத்த காணியில் சேனைப் பயிர்ச் செய்கைக்காக குத்தகைக்கு விடல் (தானியங்கள்) துண்டு இல. 52 | 2,600 | | 500 | - | 250 | - |

இது சம்பந்தமான மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினை அழைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

(035 2289075- 077 2070997-0718220272)

**திகதி : 2022.12.16**

**சமன் ஜயசிங்ஹ**
**தலைவர்,**
**கலிகமுவ பிரதேச சபை.**

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

### கண்டியில் உள்ள தேசிய அடிப்படை கல்வி நிறுவனத்தில் (NIFS) நிலையற்ற சரிவை சீர்படுத்துதல்

**RFT குறிப்பீட்டிலக்கம்: NBRO/GED/2022/30/27602**

1. கண்டி, ஹந்தானை, தேசிய அடிப்படை கல்வி நிறுவகத்தில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். மதிப்பீட்டுக் கிரயம் அவசர பணிகள் மற்றும் வரிகள் நீங்கலாக 160 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.

   இந்த ஒப்பந்தத்தின் நிர்மாணக் காலப்பகுதியானது 240 நாட்காட்டி நாட்களாகுமென்பதுடன் குறைபாடுகள் பொறுப்புக் காலப்பகுதியானது நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்த பின்னர் 365 நாட்களாகும்.

   ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   அ) உள்நாட்டு கேள்விதாரர் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA/ ICTAD - முன்பு ICTAD என்றழைக்கப்பட்டது) கட்டிடம் மற்றும் சிவில் பொறியியலின் கீழ் C-3 அல்லது மேற்பட்ட தரத்தில் அல்லது soil nailing and Stabilization இன் கீழ் SP-1 தரத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ) பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள கேள்விதாரர்கள் மாத்திரமே இக்கேள்வியில் பங்குபெறலாம்.

   **A. நிதியிடல்:**

   i. ஏனைய தேறிய ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகள் மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்து மற்றும் / அல்லது கடன் வசதிகள் 60 மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

   ii. கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் ஆகக் குறைந்தது சராசரி வருடாந்த பெறுமதி ஆகக் குறைந்தது 239 மில்லியன் இலங்கை ரூபாவாக இருத்தல் வேண்டும்.

   **B. நிர்மாண அனுபவம்:**

   **பொதுவான அனுபவம்.**

   i. 2017 ஜனவரி 1ஆம் திகதியில் ஆரம்பித்து ஆகக் குறைந்தது கடந்த 05 வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரர், கூட்டுமுயற்சி அங்கத்தவர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக நிர்மாண ஒப்பந்தங்களில் அனுபவமிருத்தல் வேண்டும்.

   **திட்டவட்டமான அனுபவம்:**

   ii. ஆகக் குறைந்த பெறுமதியில் 118 மில்லியன் இலங்கை ரூபாவிற்கான ஒரு ஒப்பந்தத்தை திருப்திகரமாக, பிரதான ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி அங்கத்தினராக, முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் கேள்விக்கான இறுதி திகதிக்குமிடையில் கணிசமான அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

   ஆகக் குறைந்தது 3 ஒப்பந்தங்கள் நிகரான நிர்மாண நுட்பங்கள் சமகாலத்தில் பூர்த்தி செய்யப்பட்டதும் மொத்த பெறுமதி 118 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டதாகவும் நிகராகவும் பிரதான ஒப்பந்தக்காரராக, கூட்டு முயற்சி அங்கத்தவர், முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உப-ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் கேள்வியை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையிலுள்ளவைகளும் பரிசீலிக்கப்படும்.

   iii. மேலே குறிப்பிட்டுள்ளவைக்கும் வேறேதாவது ஒப்பந்தங்களுக்கும் (கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்) பிரதான ஒப்பந்தக்காரராக அல்லது கூட்டு முயற்சி அங்கத்தவர் அல்லது உப ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையில் பின்வரும் முக்கிய செயற்பாடுகளில் ஆகக் குறைந்தளவு நிருமாண அனுபவத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏதாவது ஒரு வருடத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   Construction of Soil nails/Soil Anchoring மற்றும் இணைந்த வேலைகள்: 1700 மில்லியன் செங்குத்து நிரையிலுள்ள வடிகால்களின் நிர்மாணம்: 100 மில்லியன்.

   ஊ. **முக்கியமான உபகரணம் மற்றும் ஆளணியிநர்:**

   கேள்வி ஆவணத்தின் 4.2(d) மற்றும் 4.2(e)ஆம் பிரிவின் 5ஆம் இலக்க அம்சங்களில் பட்டியலிடப்பட்ட அவசியமான உபகரணம் மற்றும் பணியாளர்களை தகுந்த நேரத்தில் கையேற்பதற்கான முன்மொழிவுகள்.

2. தேசிய போட்டி ரீதியிலான (NCT) கேள்வி சமர்ப்பித்தல் ஊடாக கேள்வி நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர்கள் GED பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2588946 நீடிப்பு 595) மற்றும் வேலை நாட்களில் கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையும் கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்வி ஆவணங்களை www.nbro.gov.lk என்ற இணையத்திலும் 2022.12.19ஆம் திகதியிலிருந்து 2023.01.13ஆம் திகதி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம். இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
4. கேள்வியை சமர்ப்பிப்பதற்காக, ஆங்கில மொழியிலுள்ள கேள்வி ஆவணங்களை 2022.12.19ஆம் திகதியிலிருந்து 2023.01.14ஆம் திகதி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக 30,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு வியாபார தலைப்புக் கடிதத்தில் கேள்வி ஆவணங்களை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையில் பேணப்படும் 086100121189756 எனும் கணக்கிலத்திற்கு நிகழ்நிலை (online) ஊடாக செலுத்துதல் வேண்டும்.

   மேலும், PCA-3 படிவத்தை பெறுவதற்காக www.drc.gov.lk என்ற கம்பனிகளின் பதிவாளரின் நிகழ்நிலையின் (online) மூலம் தொடர்பு கொள்ளலாம். பதிவு செய்தல் செயற்பாடானது ஒன்லைன் முறைமைக்கு eroc.dre.gov.lk என்ற இணையத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது.
5. 2022.12.13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன கேட்போர் கூடத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் நடைபெறும். தள விஜயம் 2022.12.28ஆம் திகதி முன்மொழியப்பட்ட மண்சரிவு அமைவிடங்களில் மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
6. கேள்விகள் 2022.12.13ஆம் திகதியன்று கீழேயுள்ள முகவரிக்கு பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் கேள்விதாரரின் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சமுகமளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டோர் முன்னிலையில் பின்வரும் முகவரியில் பகிரங்கமாக திறக்கப்படும்.
7. அனைத்து கேள்விகளுடனும் 3 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான கேள்வி பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்வி பிணையானது கேள்வி படிவங்களில் தரப்பட்டுள்ள வடிவத்தில் தொழில்தருநரினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதொரு நிபந்தனையற்ற பிணையாகவிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்றிட்ட முகவரி(முகவரிகளானது) பின்வருமாறாகும். பணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், இல. 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05, இலங்கை.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**இல. 99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-05, இலங்கை.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
BOC Lake House Branch Acc. No. 000000377
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10**

## இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு சலவையக இரசாயனப் பொருட்களை வழங்குதல்

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | விபரங்கள் | குறிப்பீட்டிலக்கம் |
|---|---|---|
| 1. | சலவையக இரசாயனப் பொருட்கள் | SI/08/2022 |

மேற்படி வழங்கல்களுக்காக தகைமை வாய்ந்த பதிவு செய்துள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் சவர்க்காரங்களுக்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2022-12-17ஆம் திகதி முதல் 2023-01-03ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் நிபந்தனைகள் சகிதமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2023-01-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டப்ளியூ. கே. விக்ரமசிங்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

போக்குவரத்துச் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

# கேள்விமனு கோரும் அறிவித்தல்

**2023ஆம் ஆண்டில் நுகேகொடை தலைமை அலுவலகத்திலும் நாடெங்குமுள்ள 25 கிளைகளிலும் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்வதற்கு தகுதியும் அனுபவமும் கொண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைகூறல் மனுக்கள் கோரப்படுகின்றன.**

விலைகூறல் மனு நிபந்தனைகள்

(1) மனுப் பத்திரங்களை இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்குப் பிரிவைச் சேர்ந்த கணக்காளரிடமிருந்து 2022 டிசெம்பர் 19 தொடக்கம் 2023 ஜனவரி 06 வரை வார நாட்களில் மு.ப.9.00க்கும் பி.ப. 2.00க்கும் இடையே பெற்றுக்கொள்ளலாம்.

(2) மனுப் பத்திரங்களைப் பெறும்போது மீளப் பெறமுடியாத வைப்பாக ரூ.1,000/- செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் விலைகூறல் மனுவைச் சமர்ப்பிக்கும்போது மீளப் பெறக்கூடிய வைப்பாக ரூ.50,000/- வணிக வங்கியொன்றின் ஊடாக நிபந்தனையற்ற முறையில் போக்குவரத்து வைத்திய நிலையத்தின் பெயருக்குச் செலுத்தப்படுவதோடு, பிணையொன்றும் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும். அவ்வாறில்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

(3) சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மனுக்கள் "அலுவலகங்களின் சுத்திகரிப்பு நடவடிக்கை 2023" என்று இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட கடித உறையில் இடப்பட்டு, கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டிக்குள்ளும் மனுக்களைப் போடலாம்.

(4) விலைகூறல் மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் 2023 ஜனவரி 11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவடையும் என்பதுடன், உடனடியாகவே மனுக்கள் திறக்கப்படும். இந்த வேளையில், மனுதாரர்கள் அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

(5) பூர்வாங்க விலைகூறல் மனு கோரல் கூட்டம் 2022.12.30 அன்று முற்பகல் 11.00க்கு போக்குவரத்து வைத்திய நிலையத்தின் தலைமை அலுவலகத்தில் பணிப்பாளர்கள் கூட்ட அறையில் இடம்பெறும்.

நுகேகொடை, வேரஹர, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, நுவரெலிய, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை மற்றும் பதுளை.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**
**இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.**
**தொலைபேசி: 0112 814862**

---

# பிழை திருத்தம்

**ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளிற்கான அமைச்சு**

## 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

மேற்படி தலைப்பில் கடந்த 2022.11.14ம் திகதி தினகரன் நாளிதழ் 12ம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் 2ஆம் பாகத்தில்

02. விண்ணப்பப் படிவமொன்றிற்காக ரூபா 1000.00 இற்கான கட்டணம் அறவிடப்படும். இக்கட்டணத்தை காசோலை மூலம் அல்லது **269100138440487** எனத் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**செயலாளர்,**
**ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன,**
**கால்நடை உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி**
**அமைச்சு**

---






---

பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனம்

# பெறுகை அறிவித்தல்

# பாதுகாப்பு சேவைகளை வழங்கல்

2022 டிசம்பர் 30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்ற மற்றும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வருடாந்த உரிமத்தைக் கொண்டுள்ள புகழ் வாய்ந்த பாதுகாப்பு நிறுவனங்களிடமிருந்து பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனத்தின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

2022 டிசம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 30 ஆம் திகதியன்று வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 2000 ரூபாவை (இரண்டாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளக்கூடிய உத்தியோகபூர்வ பணப்பற்றுச்சீட்டை **sarpgiar@kln.ac.lk** என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பவதன் மூலம், பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவன பொது நிருவாகத்திற்கான உதவிப் பதிவாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேற்கூறப்பட்டுள்ள பணக்கொடுப்பனவானது இலங்கை வங்கி டொரிங்டன் கிளையிலுள்ள 6406077 என்ற PGIAR இன் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 90 நாள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையில் 2020.10.28 ஆம் திகதியிடப்பட்ட 5.3.11 என்ற பெறுகை வழிகாட்டி குறிப்பீட்டிற்கான அநுபந்தத்தில் திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள வகையில் முகவராண்மையொன்றிலிருந்து பெறப்பட்ட மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையான 20,000 ரூபாவிற்கான (இருபத்தாயிரம் ரூபா) விலைமனுப்பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 407 ஆம் இலக்கத்திலுள்ள பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவன சபை அறையில் 2022 டிசம்பர் 30 ஆம் திகதியன்று விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

விலைமனுக்கள் பதிவுத் தபாலில் முத்திரையிடப்பட்ட தபாலுறைகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனம், 407, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 407 ஆம் இலக்கத்திலுள்ள பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவன பொது நிருவாகத்திற்கான உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். (தொலைபேசி இல.: 011-2685217/ 011-2673108).

விலைமனுக்கள் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கும் PGIAR பொறுப்பேற்க மாட்டாது. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி/மின்னஞ்சல் வழியாக பொது நிருவாகத்திற்கான உதவி பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம் (தொலைபேசி இல.: 011-2685217/ 0112673108 அல்லது sarpgiar@kln.ac.lk)

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**பட்டப்பின் படிப்பிற்கான தொல்லியல் நிறுவனம்,**
**இல. 407, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.**
**2022 டிசம்பர் 16 ஆம் திகதியன்று.**

---


**The largest Job Market in Sri Lanka**

**www.observerjobs.lk**




**Widest reach for your employment advertisement**
**Email : info@observerjobs.lk Hotline: 1949**
**For more information**
**0777270012 / 0112429314**


---

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு (Division of Biomedical Engineering Services)

## மருத்துவ உபகரண துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல்

1. தேவைப்படுத்தப்பட்டுள்ள அம்சங்களுக்கான இணையொத்த துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை கொண்டுள்ள எந்தவொரு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இந்த ஒப்பந்தங்களின் தொழில்வழங்குநரின் சார்பாக, கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27 ஆம் இலக்கத்திலுள்ள உயிரியல் பொறியியல் சேவைகளின் பிரிவின் பிரிவு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| No. | Item | Qty | Estimated cost (Rs. in Million) |
|---|---|---|---|
| 01. | MICROMOTOR HAND PIECE | 25 | 1.25 |
| 02. | ACCESSORIES FOR BP APPARATUS | 3000 | 2.85 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கும் தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27 ஆம் இலக்கத்திலுள்ள உயிரியல் பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், உடனடியாகவே திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்காக ஒவ்வொரு விலைமனுவிற்கும் கேள்வியிடக்கூடிய தொகையானது 5 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்படின், விலைமனுதாரரானவர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகளின் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழை வழங்கல் வேண்டும்.
6. மேலேயுள்ள ஒவ்வொரு அம்சத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமான 500 ரூபாவை 2022.12.16 ஆம் திகதியிலிருந்து 2023.01.05 ஆம் திகதி வரையும் அரசாங்க வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் செலுத்திய பின்னர், கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27 ஆம் இலக்கத்திலுள்ள உயிரியல் பொறியியல் சேவைகள் பிரிவிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதியென'' அடையாளமிடப்படல் வேண்டும். இவ்விரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2023.01.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிரிவு பெறுகைக் குழு, உயிரியல் பொறியியல் சேவைகள், 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-7 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2023.04.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் கோரும்போது இலகுவில் பெற்றுக் கொள்ளத்தக்கதான வங்கி உத்தரவாதமுமாகவும் 2023.05.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
9. மேலதிக தகவலை 2684732 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக உயிரியல் பொறிமுறை சேவைகளின் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தீர்மானம் மேற்கொள்பவர்:**
**தலைவர்,**
**பிரிவு பெறுகைக் குழு,**
**உயிரியல் பொறிமுறை சேவைகள்,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10.**

---

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**Accelerating Higher Education Expansion and Development Operation (AHEAD)**

## INVITATION FOR BIDS (IFB)

**Supply, Installation and Maintenance of iPad, Digital Pencil, Magic Keyboard and Printer for Smart Computer Laboratory at Faculty of Technology, SEUSL, Oluvil**

**(SEU/AHEAD/RA1/R3/FT/GOODS/NCB/2022/45)**

1. The **Chairman, Project Procurement Committee** of the South Eastern University of Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for procurement of the following items.

| Item No. | Description | Quantity | Bid Security Amount |
|---|---|---|---|
| 01 | iPad | 25 | Rs. 350,000/= |
| 02 | Digital Pencil | 25 | |
| 03 | Magic Keyboard | 25 | |
| 04 | Printer | 25 | |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.
3. Interested eligible bidders may obtain further information from Deputy Director / Procurement, OTS, AHEAD Operation, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360 (Telephone: 067 22 55177 / 067 22 55189) from 9.00 a.m. to 2.30 p.m. on weekdays.
4. A Bid Security obtained from a Central Bank approved commercial bank to the value as stated above to be valid until 31st May 2023 should be submitted along with the bid.
5. A complete set of bidding documents in English Language may be purchased by interested bidders on submission of a written application and upon payment of a non-refundable fee of **LKR 5,000/=** from 9.00 a.m. to 3.00 p.m. up to **02.01.2023.** The mode of payment shall be either by cash payable at the Shroff of the University or bank draft in favour of "Bursar, South Eastern University of Sri Lanka".

   Bidding documents can also be requested by email till 3.00 p.m. on 02.01.2023 on a request letter to dradmin@seu.ac.lk with the scanned copy of the receipt for payment of the non-refundable fee to the University Collection Account Number : **228 1001 9000 1704** at People's Bank, Addalaichenai at any branch of People's Bank.
6. Sealed bids should be marked, **"Supply, Installation and Maintenance of iPad, Digital Pencil, Magic Keyboard and Printer for Smart Computer Laboratory at Faculty of Technology, SEUSL, Oluvil (SEU/AHEAD/RA1/R3/FT/GOODS/NCB/2022/45)** and placed in the tender box kept in the OTS Office, AHEAD Operation, South Eastern University of Sri Lanka, Oluvil or sent under registered cover to be received before **2.00 p.m. on 05.01.2023** at the following address. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at 2.15 p.m. **on the same day** at OTS Office, AHEAD Operation, South Eastern University of Sri Lanka, Oluvil. Late bids will be rejected.

**Chairman**
**Project Procurement Committee**
**South Eastern University of Sri Lanka**
**Oluvil**
16.12.2022

---

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# பெறுகை அறிவித்தல்

**சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக சேவை வழங்குநரொருவரை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுகோரல்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுய சேவை உணவகத்திற்கு (Cafeteria) ஒரு (1) வருட காலப்பகுதிக்கு உணவகச் சேவைகளை வழங்குவதற்காக பொருத்தமான சேவை வழங்குநர்களிடமிருந்து 2023-01-05ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். சேவை வழங்குநர் காலை உணவு மற்றும் பகல் உணவுகளை வழங்குதல் வேண்டும். பகல் உணவு பரிமாறல் Buffet style/counter type வகையில் இருத்தல் வேண்டும்.

கொழும்பு-07, வோட் பிளேஸ், 20ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயலகத்தின் புதிய சபை அறையில் (New Boardroom) 2023-01-05ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது முடிவடைந்த பின்னர் உடனடியாகவே பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

2022-12-16ஆம் திகதி முதல் 2023-01-05ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐந்நூறு ரூபாவை (500.00 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்தியமைக்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதி செயலாளர்/ பொது நிர்வாகம் அவர்களிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுப்பிணையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் இரண்டாயிரம் ரூபா (2,000.00 ரூபா) செலுத்தப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணைக்காக செலுத்தப்பட்ட பணக்கொடுப்பனவிற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை 2023-01-05ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''சுய சேவை உணவகச் சேவைகள் வழங்குவதற்கான பெறுகை'' என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல.: 20, வோட் பிளேஸ், கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, வோட் பிளேஸ், 20ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பிரதி செயலாளர்/ பொது நிர்வாகம் அவர்களின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்களை தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக விலைமனுதாரர்களினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கிரயத்திற்கு அல்லது செலவினங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு, 011-2685183 என்ற தொலைபேசி எண்ணினூடாக பிரதி செயலாளர்/ பொது நிர்வாகம் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர் / நிறுவன பெறுகைக்குழு,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோர்ட் பிளேஸ், கொழும்பு-07.**
2022-12-16.

# பெறுகை அறிவித்தல்

**வனசீவி மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

**தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்**

## மாட்டிறைச்சி வழங்கல் – 2022/ 2023

**IFB No.: DNZG/A/07/22/119**

1. ஆறு (06) மாத காலத்திற்கு கீழேயுள்ள மிருகக்காட்சிச்சாலைகளுக்கு மாட்டிறைச்சியை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|
| 1. | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்கு மாட்டிறைச்சியை வழங்கல் | 340,000 | 4000 |
| 2. | பின்னவல மிருகக்காட்சிச்சாலைக்கு மாட்டிறைச்சியை வழங்கல் | 60,000 | 2000 |
| 3. | ரிதியகம சவாரி பூங்காவிற்கு மாட்டிறைச்சியை வழங்கல் | 640,000 | 13,000 |

2. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 2896779, 2710807) 2022 டிசம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 4 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2023 சனவரி 4 ஆம் திகதியன்று வரையும் மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள ஒவ்வொரு வகுதிக்குமான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2023 சனவரி 5 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 சனவரி 5 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்,**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை.**

---

**கைத்தொழில்கள் அமைச்சு**

**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

## வழங்குநர்களை பதிவு செய்தல் – 2023

01. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்படும் பின்வரும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் வழங்களுக்காக தம்மை பதிவு செய்ய விரும்பும் புகழ் வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023 ஆம் ஆண்டிற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**A. வழங்கல்கள்:**

1. அலுவலக இயந்திரங்கள் (தொலைநகல், பிரதியாக்கல்கள், அச்சுப்பொறிகள், போன்றவை)
2. அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதி (பஞ்சர், ஸ்டேப்ளர், தாள் போன்றவை)
3. Computers, devices, Accessories and software (License software)
4. Computer Toner (Original & Compatible only)
5. டயர்கள் மற்றும் டியுப்புக்கள்
6. வாகன ஆசனங்களுக்கு குஷன் பதித்தல் மற்றும் கார்கள் மற்றும் டபிள் கெப்களுக்கான ஆசன உறைகள்)
7. வளிச் சீராக்கிகள்
8. மரம் மற்றும் உருக்கு தளபாடங்கள்

**B. சேவைகள்:**

01. அச்சடித்தல் (இறப்பர் முத்திரை இயந்திரங்கள், வெளியீடுகள், பதாதைகள், காட்சிப் பலகைகள் போன்றவை)
02. கணனிகள், அச்சுப்பொறிகள் மற்றும் நிகரான முறைமைகளின் பழுதுபார்த்தல், சேர்விசிங் மற்றும் பராமரிப்பு
03. Internet service provision/Network service provision
04. கட்டிடங்களின் பழுதுபார்த்தல்கள் (சிவில்/ மின்னியல்/ குழாய் இணைத்தல்/அலுமினிய வேலை/ உள்ளக பிரித்தடுப்புக்கள் வேலை)
05. கார்கள், டபிள் கெப்கள் மற்றும் வேன்களை பழுதுபார்த்தல்
06. கார்கள், டபிள் கெப்கள் மற்றும் வேன்களை சேர்விசஸ் செய்தல்
07. Wheel balancing/Wheel Alignment of Cars, Double Cabs and Vans
08. வாகன வளிச்சீராக்கல், பழுது பார்த்தல்கள் மற்றும் சேர்விஸ் செய்தல்
09. PABX சேவை வழங்குநர்கள்
10. வளிச்சீராக்கல் முறைமைகளை பழுது பார்த்தல்
11. அலுவலக அடையாள அட்டைகளை தயாரித்தல்
12. Media marketing Agencies (Channels/Products/Social Media Agencies)
13. விழா முகாமைத்துவ நிறுவனங்கள் (வர்த்தக விழாக்கள் போன்றவை) (நிகழ்வு முகாமைத்துவம்)
14. பதவிநிலை அலுவலர்களுக்கான போக்குவரத்து மற்றும் ஏனைய நிகரான போக்குவரத்து சேவைகள்.

02. இல. 1 B ''சேவைகளின்'' கீழ் 05, 06, 07, 08 ஆகிய அம்ச இலக்கங்கள் தொடர்பாக பதிவு செய்தலுக்காக பரிசீலனை செய்தல்.
கொழும்பு-05, இராஜகிரிய, பிட்டகோட்டே மற்றும் நுகேகொட, பத்தரமுல்ல, பொறளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள நிறுவனங்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே பரிசீலனை செய்யப்படும்.

03. இல. 1 B ''சேவைகளின்'' கீழான 05, 06, 07 மற்றும் 08 ஆகிய அம்சங்கள் தொடர்பாக, கொழும்பு-05, இராஜகிரிய, பிட்டகோட்டே மற்றும் நுகேகொட ஆகிய இடங்களில் அமைந்துள்ள நிறுவனங்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே பரிசீலனை செய்யப்படும். விண்ணப்பங்கள் மற்றும் தகவல் தாள்கள் ஆகியனவற்றை 2022.12.16 ஆம் திகதியிலிருந்து 2023.01.05 ஆம் திகதி வரையும் முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையொன்றை கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 561/3 என்ற முகவரியிலுள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், **www.neda.lk** என்ற உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து விண்ணப்ப படிவங்கள் மற்றும் தகவல் தாள்களை பதிவிறக்கமும் செய்யலாம்.

04. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒவ்வொரு அம்சத்திற்கும் செலுத்தப்படும் மீளளிக்கப்படாத தொகையாகிய 1,000 ரூபாவானது 0005525878 என்ற இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளை இலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டு வங்கியினால் வழங்கப்படும் வரவு பற்றுச்சீட்டானது மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். இத்தொகையானது ரொக்கப் பணத்தில் செலுத்தப்பட்டால், கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, அல்விட்டிகல மாவத்தை, 561/3 என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகத்தில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் செலுத்தப்படலாம்.

05. விண்ணப்பங்கள் ஒன்றில் மேலேயுள்ள முகவரிக்கு 2023.01.15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபாலில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Registration of Suppliers – 2023" என குறிப்பிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, அல்விட்டிகல மாவத்தை, 561/3 என்ற முகவரியிலுள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகத்தில் நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

**தலைவர்/ பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 561/3, அல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**

---

# இலங்கை வங்கி

**இலங்கை வங்கி மேல் மாகாண (வடக்கு) பிரிவினால் நிர்வகிக்கப்படும் CRM அலகொன்றை நிறுவுவதற்கு பின்வரும் இடங்களில் பொருத்தமான கட்டடம் அல்லது வெற்றுக்காணி ஒன்று 10 வருட குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.**

## மல்வான சந்தி, மல்வதுஹிரிபிட்டிய சந்தி, நிவன்தம வடக்கு – ஜா-எல

**குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் உத்தேசக் கட்டடம்/காணி நகர மத்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- பிரதான வீதிக்கும் கட்டடத்துக்கும் இடையில் குறைந்தபட்சம் 10'.6" அடிகளாக இடைவெளி காணப்படுதல் வேண்டும். கட்டடத்துக்கு பின்புற நுழைவாயில் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்டடத்தின் அகலம் குறைந்தபட்சம் 12 அடிகளாக இருத்தல் வேண்டும்.
- தரைக்குத் தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- இலகுவில் சென்றடையக் கூடிய இடத்தில் இருத்தல் வேண்டும்.
- வெற்றுக் காணியாக இருந்தால், 10'.6"X18' அடிகளாக இருத்தல் வேண்டும். (189 சதுர அடிகள்)

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்/காணி உரிமையாளர் கட்டட வரைபடம்/காணித்துண்டின் வரைபடம், அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் (குத்தகைக் காணியாக இருப்பின்) போன்ற ஆவணங்களின் பிரதிகள் உள்ளிட்ட விபரங்களை இவ்விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"CRM இயந்திரத்தை நிறுவுதல் (இடத்தின் பெயரைக் குறிப்பிடவும்)"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம்-வடக்கு),
இலங்கை வங்கி,
2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
கொழும்பு 3.
தொலைபேசி : 011 238 1366/011 586 5151
தொலைநகல் : 011 232 6830
மின்னஞ்சல் : bocwpn@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

# கைத்தொழில் அபிவிருத்தி சபை

## உணவு அடிப்படையிலான கைத்தொழில் துறையில் R&D செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்குவதற்கான செயற்றிட்டமொன்றிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

இலங்கையில் கைத்தொழில்களுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கலாசாரத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) செயற்பாடுகளுக்கான உள்ளூர் உணவு கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காகவும் ஆதரவு வழங்குவதற்காகவும் கைத்தொழில் அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ் செயற்படும் கைத்தொழில் அபிவிருத்தி சபையானது நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு பின்வரும் கைத்தொழில் இனங்கள் விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| Beverages | Bakery | Tea Processing Fish/Meat processing |
| Spices | Dairy Products | Snacks Fruits and Vegetables related |
| Cereals | Confectionary | other Food and allied products |

**செயற்றிட்டத்தின் பாரிய செயற்பாடுகள்**

- சாத்தியமான முதலீட்டுக்காரர்களுக்காக ஆராய்ச்சி நிறுவனங்கள்/ பல்கலைக்கழகங்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிமுகம் மற்றும் ஊக்குவித்தலுக்கான ஆராய்ச்சி ஆய்வரங்கு.
- அவ்வாறான ஆராய்ச்சியை வர்த்தகரீதிமயப்படுத்துவதற்காக முதலீட்டுக்காரர்களுக்கு ஆதரவு சேவைகளை வழங்கல்.
- உணவு கைத்தொழில்களில் அதே இடத்தில் R&D அலகுகளை தாபிப்பதற்காக ஊக்குவித்தல் மற்றும் ஆதரவு வழங்கல்

**தகுதித்தன்மை:**

1. கைத்தொழிலானது உள்ளூர் பங்குதாரரின் உரித்துடமையானது ஆகக் குறைந்தது 60% ஐக் கொண்டுள்ள உள்ளூர் கைத்தொழிலொன்றாக இருத்தல் வேண்டும்.
2. உணவு அல்லது இணைந்த உற்பத்திகளை தயாரித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் கைத்தொழிலானது ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
3. புதிய தொழில்நுட்பவியல்கள், வடிவமைப்பு மற்றும் பொறியியல், பதனிடல்/ உற்பத்தி/வடிவமைப்பு மேம்படுத்தல்கள், பகுப்பாய்வு மற்றும் பரீட்சித்தல் ஆகியவற்றில் புதிய முறைமைகளை அபிவிருத்தி செய்தல், பிரதான உபகரணம், பண்டங்கள் மற்றும் சக்திவலு, மாசடைதலை கட்டுப்படுத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவுப் உற்பத்திகளுக்கான மீள்சுழற்சி அல்லது ஆராய்ச்சியின் வேறேதாவது விடயங்கள், வளங்களின் பாவனையில் அதிகரிக்கப்பட்ட செயற்றிறனுக்கான ஆராய்ச்சி ஆகியவற்றில் கைத்தொழிலின் வியாபாரத்திற்கு அமைவாக புதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் கைத்தொழிலானது ஈடுபடுவதற்கு எதிர்பார்ப்பது விரும்பத்தக்கது.
4. விண்ணப்பிக்கும் வேளையில் கைத்தொழிலானது சித்திகரமாக செயற்படுத்தியிருத்தல் வேண்டும்.
5. இதனைப் பெறுவதற்காக எந்தவொரு அரச நிறுவனத்துடனும் கைத்தொழிலானது பதிவு பெற்றிருத்தல் கூடாது.

**செயற்றிட்டத்தில் பதிவு பெற்றவர்களுக்கான அனுகூலங்கள்:**

- புதிய உற்பத்தி/முன்னேற்ற அபிவிருத்திகளை முன்வைப்பதற்காக ஆராய்ச்சி ஆய்வரங்கு மற்றும் சந்தர்ப்பமொன்றை இலவச பங்குபெறுதலுக்காக வழங்கல். (செயற்றிட்டத்தின் கீழ் பதிவு பெற்ற அனைத்து கைத்தொழில்களுக்குமானது)
- புதிய வியாபார யோசனைகளை வர்த்தகரீதியிலாக்குவதற்கான ஆதரவு.
- அதே இடத்தில் R&D அலகுகளை தாபிப்பதற்கும் பராமரிப்பதற்குமான இலவச பயிற்சி மற்றும் உசாத்துணை சேவைகள். (செயற்றிட்டத்தின் கீழ் பதிவு பெற்ற அனைத்து கைத்தொழில்களுக்குமானது)
- அதே இடத்திலுள்ள R&D அலகுகளுக்கான R&D செயற்பாடுகளை அமுல்நடாத்துவதற்கான அங்கீகரித்தல்.(தெரிவு செய்யப்பட்ட 03 கைத்தொழில்கள்)
- நடுவர் குழாமொன்றினால் மதிப்பீடு செய்யப்பட்டு சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அதே இடத்திலுள்ள R&D அலகுகள் மற்றும் R&D செயற்பாடுகளின் அபிவிருத்திக்காக 1,000,000 ரூபா நிதியிடல் மானியம்.

**தெரிவிற்கான தகவுத்திறன்:**

விண்ணப்பத்தில் மற்றும் நேர்முகப்பரீட்சையில் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும். கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழாமொன்றின் மூலமாக பொருத்தமான உணவு தயாரிக்கும் கைத்தொழில்கள் தெரிவு செய்யப்படும்.

**விண்ணப்பம்:**

**www.idb.gov.lk** என்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பமானது பதிவிறக்கம் செய்யப்படலாம்.
2023 சனவரி 5 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக தகவலுக்காக 0112605111/0718087863 ஆகிய இலக்கங்களை அழைக்கவும் அல்லது **www.idb.gov.lk** என்பதை பார்வையிடவும்.

**பணிப்பாளர் நாயகம்**
**கைத்தொழில் அபிவிருத்தி சபை**
**இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ.**
**மின்னஞ்சல்: info@idb.gov.lk**

---

Marriage Proposals
Decades of Trusted Service
For 15 Words - Rs. 1,000/-
For each additional word Rs. 25/-
SUNDAY OBSERVER For 15 Words - Rs. 800/-
For each additional word Rs. 25/-
வாரமஞ்சரி For 15 Words - Rs. 300/-
For each additional word Rs. 25/-

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

Repeat Your Ad For Better Offers

---

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### SUPPLYING AND FIXING OF ROLLER SHUTTER DOORS FOR PROPOSED MAIN STORES BUILDING AT PORT OF COLOMBO

**Supplying and fixing of Roller Shutter Doors for proposed main stores building at Port of Colombo (Contract No.: EW/SW/12/2022/01)** என்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தலைவரின் சார்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

1. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கானது.
   (அ) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழொன்றுடன் பதிவானது மேற்கூறப்பட்டுள்ள சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்றது.
2. விலைமனுப்பிணைத் தொகையானது 50,000 ரூபாவென்பதுடன் விலைமனுப்பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. 2022.12.19 ஆம் திகதியிலிருந்து 2022.12.28 ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் அடங்கலானது) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 3,500 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, சிவில் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளரினால் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
4. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பாதுகாப்பான முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"Supplying and fixing of Roller Shutter doors for proposed main stores building at Port of Colombo (Contract No.: EW/SW/12/2022/01)"** என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, பிரதான பொறியியலாளர் (சிவில்) மே/பா., சிவில் பொறியியல் பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளரின் (சிவில்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
5. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.12.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
6. எந்தவொரு மேலதிக விபரங்களும் மேலேயுள்ள முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளரிடமிருந்த (சிவில்) பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2483446).

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை),**
**பிரதான பொறியியலாளர் (சிவில்) மே/பா,,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

**மே.மா/ ஜய/ மாதிவெல ராஹுல வித்தியாலயம் மற்றும் மே.மா/ கோ/ பராக்கிரமபாஹு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விசிரும் நீர் தொகுதியை நிறுவுதல் (Irrigation System)**

**PRDA/WP/PRO/2022/49**

| தொடர் இலக்கம் | விபரம் | எண்ணிக்கை | கேள்விப் பிணையத்தின் பெறுமானம் | |
|---|---|---|---|---|
| | | | காசாக (ரூபா) | வங்கி/ காப்புறுதிப்பிணை மூலம் ரூபா |
| 01 | 18 m Radius Pop up Sprinkler | | | |
| 02 | 3” Steel Wheel Type gate valve with nut & bolt | | | |
| 03 | Valve Boxes (Concrete) | | | |
| 04 | 3” Metal Screen Filter | | | |
| 05 | Water pump with starter switch (3” x 3”, 25 H.P.) - Jinasena / Solex) | | | |
| 06 | 90mm PVC main line S.S. (PNT 07) with fittings and trenching black filling (63mm Depth) | | | |
| 07 | 63mm PVC main line S.S. (PNT 07) with fittings and trenching black filling (63mm Depth) | இதற்கான எண்ணிக்கை கேள்விப் படிவங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளன. | 55,000.00 | 110,000.00 |
| 08 | 50mm PVC main line S.S. (PNT 07) with fittings and trenching black filling (63mm Depth) | | | |
| 09 | 32mm PVC main line S.S. (PNT 11) with fittings and trenching black filling (63mm Depth) | | | |
| 10 | Tube well pump, panel. PVC piping for connecting stock tanks and automation water filling | | | |
| 11 | Testing and commission | | | |

02. 2022.12.16 முதல் 2022.12.23 நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை படிவக் கட்டணம் ரூபா 1,150.00ஐ இல் அதிகார சபையின் பெறுகைப்பிரிவில் செலுத்தி இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான பிணையத்தை காசாக, பெறுகைப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கமைவாக மேற்படி பெறுமானத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
03. விலைமனுத் தொகையானது, 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பங்களில் ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, சித்திகரமான விலைமனுதாரர், 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் சான்றிதழொன்று, கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. 2022.12.23 அன்று நண்பகல் 12.00 இற்கு கேள்விப்படிவங்களை வழங்கள் முடிவுறுவதுடன் திறத்தல் 2022.12.23 அன்று பி.ப. 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12.**
**தொ.பே.இல. : 011-5676903**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# அறிவித்தல்

## பொது சேவை ஆணைக்குழு - தென் மாகாணம்

## தென் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தல்

தென் மாகாண சபையின் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் மாதிரி விண்ணப்பமும் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.psc.sp.gov.lk) வெளியிடப்பட்டுள்ளன. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 26.12.2022 ஆகும்.

**செயலாளர்,**
**மாகாண பொது சேவை ஆணைக்குழு,**
**தென் மாகாணம்.**

# சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை

## கேள்வி கோரலுக்கான அழைப்பு

| தொடர் இலக்கம் | பெறுகை கோவை இலக்கம் | விபரம் | கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் இறுதித் தினம் | கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத படிவம் ஒன்றிற்கான கட்டணம் ரூபா | கேள்விப் பிணையம் (கடை அறை ஒவ்வொன்றிற்கும் புறம்பாக பிணைகள் வைக்கப்படல் வேண்டும்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | SNSCA/ PRO/ 374/2021 | சுகததாச அதிகார சபையின் திறந்த விளையாட்டரங்கின் ஆதர் த சில்வா மாவத்தைக்கு முன்னோக்கி உள்ள கடை அறைகள் 02ஐ குத்தகைக்கு விடுதல் | 2023.01.05 மு.ப. 10.00 வரை | 2023.01.06 பி.ப. 14.00 மணிக்கு | 2,500/- | கடை அறை இல. 01 க்கு ரூபா 50,000/- கடை அறை இல. 02க்கு ரூபா 25,000/- |

1. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் ஆதர் த சில்வா மாவத்தைக்கு முகப்பாக அமைந்துள்ள பின்வரும் கடை அறைகளைக்குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
   - கடை அறை இலக்கம் 01 - 667 ச.அடி
   - கடை அறை இலக்கம் 02 - 317 ச. அடி
2. இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தம் கடிதத்தலைப்பில் (டுநடடநச ர்நயன) எழுத்துருவ விண்ணப்பம் ஒன்றின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப்படிவங்களில் காணப்படும் அறிவுறுத்தல்களிற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது பின்வரும் முகவரியின் நிருவாகக் கட்டிடத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.
3. இதற்கான கேள்விப் படிவங்களை, மீளளிக்கப்படாத கட்டணத்தைக் காசாக இவ் அதிகார சபையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், தேவையானவர்களிற்கு அவை வேலை நாட்களில் 9.30 மணி முதல் 14.30மணி வரை வழங்கப்படும்
4. கேள்வி ஆவணங்கள் 2022.12.19 அன்று மு.ப. 09.30 முதல் 2023.01.05 அன்று மு.ப. 10.00 வரை வழங்கப்படும்.
5. இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பெற்றுள்ள எந்த ஒரு வணிக வங்கியிலிருந்தும் வழங்கப்பட்ட மேற்படி பெறுமானத்திற்கான செல்லுபடிக்காலம் 90 நாட்கள் உடைய (2023.04.05 வரை) கேள்விப் பிணையமொன்று, கேள்விகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (02 கடை அறைகளுக்கும் தனித்தனியான கேள்விப்பிணையங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)
6. கேள்விகளின் செல்லுபடிக்காலம் 60 நாட்கள் ஆகும் (2023.03.06 வரை)
7. இது தொடர்பான மேலதிக விபரங்களை சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதியின் கொள்வனவுப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், தேவையானவர்கள் அக் கேள்விப் படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

**மேலதிகக விபரங்களிற்காக**
**பெறுகை முகாமையாளர்**
**தொ.பே.இலக்கம், 2445677/2384584 நீடிப்பு 120**
**தொலைநகல் இல: 2445675**

**தலைவர், பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை**
**த.பெ. 2211, ஆதர் த சில்வா மாவத்தை, கொழும்பு-13**

மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் (புறக்கோட்டை)
புறப்படுதல் இரவு 07.00 மணிக்கு
காலி வீதி ஊடாக
கதிர்காமம் பஸ் நிலையத்திலிருந்து
புறப்படுதல் முற்பகல் 9.15 மணிக்கு

தினமின கதிர்காமம்
கடுகதி பஸ் சேவை மீண்டும்




கொழும்பு - கதிர்காமம் பயணிகள் போக்குவரத்து பஸ் சேவை

பஸ் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு
076 808 8056
076 808 8065

ஆசனங்களை ஒதுக்கிக் கொள்வதற்கு
011 2429673
047 2235291

# பண்டாரகம பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

பண்டாரகம பிரதேச சபைக்கு உரித்தான பின்வரும் அட்டவணையில் காணப்படும் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுவதற்காக மற்றும் 2023ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2023.01.05 அன்று பி.ப. 2.00 வரை என்னால் கோரப்படுகின்றது. அன்றைய தினம் பி.ப. 2.05 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன், இதற்கான கேள்விப்படிவங்களை, 2022.12.12 முதல் 2023.01.04 அன்று பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் பண்டாரகம பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

| தொடர் இலக்கம் | கேள்வி விபரம் | காலம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2023ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சேவைகளை வழங்கல் | (2023.02.15 - 2023.12.31) | - | 5,000.00 | 2,000.00 |
| 02 | பண்டாரகம சுப்பர் மார்கட் தொகுதியின் இல. 24 கடையை ஆடு, கோழி இறைச்சி விற்பனைக்காக குத்தகைக்கு விடுதல் - 2023 | (2023.02.08 - 2023.12.31) | 525,956.75 | 5,000.00 | 2,000.00 |

- இக்கேள்வி கோரல் அறிவித்தலின் நிபந்தனைகளிற்கு மற்றும் விபரக்குறிப்புகளிற்கு மேலதிகமான நிபந்தனைகள் மற்றும் அ விபரக்குறிப்புக்கள் கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் அலுவலகத்தில் வழங்கப்படும்.
- 2023ஆம் ஆண்டிற்கான சபையின் வழங்குநரொருவராகப் பதிவு செய்துகொண்டிருப்பின் கேள்விப்படிவக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- அலுவலகத்தினால் வழங்கப்படும் கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் தயாரித்து ஒவ்வொரு உறையினதும் வலது பக்க மேல் மூலையில், “மூலப் பிரதி” மற்றும் “நகல் பிரதி” எனக்குறிப்பிட்டு, இவ் இரு உறைகளையும் ஒருறையில் சேர்த்து அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு, 2023.01.05 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர், தலைவர், பண்டாரகம, பிரதேச சபை, பாணந்துறை வீதி, பண்டாரகம” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.

01. 2023ஆம் ஆண்டிற்கான பாதுகாப்புச் சேவையை வழங்கல்.
    - இதற்காக விண்ணப்பிக்கும் நிறுவனமானது, 2023ஆம் ஆண்டிற்காக தேசிய பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.
    - தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர், பாதுகாப்புச் சேவைக்காக அறவிடும் அண்மித்த மாதாந்த தொகையின் ஒரு வருடத்திற்கான தொகையைக் கணக்கிட்டு, அத்தொகையின் 5% ஐ செயற்பாட்டுக் காப்புறுதி வைப்பு ஒன்றாக, இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வணிக வங்கியொன்றின் பிணையம் மூலம் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
    - அரச நிறுவனமொன்றிற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் 05 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
02. பண்டாரகம சுப்பர் மார்கட் கட்டிடத் தொகுதியின் 24ஆம் இலக்க கடை அறையை ஆடு, கோழி இறைச்சி விற்பனைக்காக குத்தகைக்கு விடுதல்.
    - கேள்வி அங்கீகரிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதன் பின்னர், விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள மாதாந்த குத்தகைத் தொகையின் 06 மாத காலத்திற்கான தொகையை ஒரே முறையில் இச்சபையின் நிதியத்தில் செலுத்துதல் வேண்டும்.
    - கேள்விதாரர், சுப்பர் மார்கட் கட்டிடத் தொகுதியின் இக்கடைகளிற்கான நீர் மற்றும் மின்சார விலைப்பட்டியல்களிற்கான கட்டணங்களை செலுத்துதல் வேண்டும்.

இக் கேள்வி அறிவித்தலின் நிபந்தனைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் இவ் அறிவித்தலின் தொகுதி ஒன்றெனக்கருதுதல் வேண்டும்.
மேலதிக விபரங்கள் தேவையெனின், அலுவலக நேரங்களில் இவ் அலுவலகத்தில் நேரில் சமுகமளித்து அல்லது தொ.பே. இலக்கம் 038-2290975 ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.
சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் மற்றும் கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் சபைக்கு உரித்தாகும்.

**எச்.ஏ.எச். தேவேந்திர பெரேரா,**
**தலைவர்,**
**பண்டாரகம பிரதேச சபை**

**2022.12.12**
**பண்டாரகம பிரதேச சபை,**
**பண்டாரகம.**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது மருத்துவமனை - நீர்கொழும்பு

## 2023 ஆண்டிற்காக பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டிற்கு இவ் மருத்துவமனையில் ரூபா மூன்று இலட்சம் (ரூ. 300,000.00) இற்கு மேற்படாத கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செயவதற்காக இலங்கை நிர்மாண பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.12.30ம் திகதி மு.ப. 10.00 வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும். விண்ணப்பங்கள் திறத்தல் அன்றே அந்நேரத்திலேயே பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறுவதுடன் அவ் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்வி ஆவணங்களை 2022.12.19 முதல் 2022.12.29 வரை வேலை நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் வழங்கல்கள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தமது தகைமைகளை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் கேள்விக் கட்டணங்களை செலுத்தியமை சார்பாக நீர்கொழும்பு மாவட்ட பொது மருத்துவமனையினால் விநியோகிக்கப்பட்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

எந்தக் கட்டணமும் இன்றி கேள்வி ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

| தொடர் இல. | உருப்படி | தகைமை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2023ஆம் ஆண்டிற்காக கட்டிடங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்தல் (ரூ. 300,000.00 இற்கு மேற்படாத சிறிய பராமரிப்பு மற்றும் 02 மில்லியனுக்கு மேற்படாத நிர்மாணங்களுக்காக) | C9<br>C8 (திருத்தப்படும் பதிவு செய்தல் முறையின் பிரகாரம் EM 05 மற்றும் அதற்கு மேல்) | ரூ. 2500.00 |

விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்' என்று குறிப்பிடப்படும் விண்ணப்பங்களை 'தலைவர், பிரதேச பெறுகைக் குழு, மாவட்ட பொது மருத்துவமனை, நீர்கொழும்பு' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது அலுவலகத்திற்கு கொண்டு வந்து ஒப்படைக்க முடிவதுடன், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியதென்பதை தயவுடன் கவனிக்கவும்.

இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் இல. 031-2280777/ 031-2222261 நீடிப்பு 103 ஐ அழையுங்கள்

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது மருத்துவமனை,**
**நீர்கொழும்பு.**

# கேள்வி அறிவித்தல்

## மினுவங்கொடை பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கு இறைச்சிக்கடை, வாரச்சந்தை, மீன் கடைகளை மற்றும் விளைச்சலை குத்தகைக்கு விடல்

2023 ஜனவரி 01 முதல் 2023 டிசம்பர் 31 வரையான காலத்திற்கு இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் இறைச்சிக்கடை, வாரச்சந்தை, மீன் கடைகள் மற்றும் விளைச்சலை குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.12.29 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். கேள்வி விண்ணப்பங்கள் 2022.12.28ம் திகதி பி.ப. 2.00 வரை தனது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்த பின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்விகள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அப் பிரதிகள் இரண்டையும் வேறுவேறு இரு உறைகளில் இட்டு சீல் இட்டு செயலாளர், மினுவங்கொடை பிரதேச சபை, உடுகம்பொல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் குறித்த தினத்திற்கு முன் அனுப்புதல் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்திற்கு உள்ளிடல் வேண்டும். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரையும் கேள்வியின் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த கேள்விக்காக குறித்த குறைந்த பட்ச கேள்விக்கு குறைவாக விண்ணப்பிக்கும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு பிணைத் தொகை சபைக்கு உரியதாக ஆக்கப்படும்.

3. கேள்விகள் திறத்தல் 2022.12.29 மு.ப. 10.30 இற்கு இடம்பெறும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம். எந்த கேள்விப் பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச் சபைக்கு உரியது. அங்கீகரிக்கப்பட்ட கேளவிதாரர்களுக்கு கேள்விகள் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்பு கேள்வித் தொகையின் 25% இற்கு சமமான பிணைத் தொகையை இவ் அலுவலகத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

4. மினுவங்கொடை பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லாத வேளையில் குறித்த வியாபாரத்தை நடத்திச் செல்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்கள் என்னால் தீர்மானிக்கப்படும் விதத்தில் கட்டிடங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். சகல கேள்விதாரரும் மினுவங்கொடை பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர் காலத்தில் விதிக்கப்படவுள்ள இடைக்கால மசோதா சட்டதிட்டங்களுக்கு மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இவ் அலுவலகத்தில் விசாரித்து அறியலாம். கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த கட்டணங்கள் காசாக மாத்திரம் ஏற்கப்படும்.

6. தாம் கோரும் தொகைக்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்கள் முத்திரைக் கட்டணம் மற்றும் அரசினால் விதிக்கப்படும் வேறு வரிகளையும் செலுத்துதல் வேண்டும்.

**எல். பத்மகுமார அரங்கல்ல**
**தலைவர்,**
**மினுவங்கொடை பிரதேச சபை.**

**2022.12.14ம் திகதி**
**மினுவங்கொடை பிரதேச சபையில்.**
**தொ.பே. இலக்கம்: 033-2222335**

**மினுவங்கொடை பிரதேச சபை**

**2023ஆம் ஆண்டிற்கு இறைச்சிக்கடை, வாரச்சந்தை, மீன் கடை மற்றும் விளைச்சலை குத்தகைக்கு விடல்**
**கேள்விக்கட்டண அட்டவணை**

| தொடர் இல. | விபரம் | குறைந்த பட்ச கேள்வி (ரு) | கேள்விப் பிணை வைப்பு (ரு) | கேள்விப் படிவக் கட்டிணம் (ரு.) |
|---|---|---|---|---|
| 1 | உடுகம்பொல புதிய வாரச்சந்தை | 390,937.50 | 39,093.75 | 500.00 |
| 2 | கொரஸ பன்றியிறைச்சிக்கடை | 248,207.92 | 24,820.79 | 500.00 |
| 3 | தெவலபொல வாரச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 29,531.25 | 2,953.12 | 500.00 |
| 4 | உடுகம்பொல வாரச்சந்தை மீன் கடை | 48,600.00 | 4,860.00 | 500.00 |
| 5 | உடுகம்பொல வாரச்சந்தை பன்றியிறைச்சிக்கடை | 318,965.62 | 31,896.56 | 500.00 |
| 6 | நய்வல வாரச்சந்தை | 82,012.50 | 8,201.25 | 500.00 |
| 7 | தெவலபொல வாரச்சந்தை மீன் தட்டு | 11,385.00 | 1,138.50 | 500.00 |
| 8 | நய்வல வாரச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 93,750.00 | 9,375.00 | 500.00 |
| 9 | நய்வல வாரச்சந்தை மீன் தட்டு | 20,250.00 | 202.50 | 500.00 |
| 10 | உடுகம்பொல வாரச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 50,836.87 | 5,083.68 | 500.00 |
| 11 | கொரஸ கோழியிறைச்சிக்கடை | 31,507.50 | 3,150.75 | 500.00 |
| 12 | மாரபொல ஔடத பூங்காவில் அமைந்துள்ள தென்னை விளைச்சல் | 15,950.00 | 1,595.00 | 400.00 |
| 13 | ஹொரம்பெல்ல கிறீன் கார்டின்ஸ் காணியின் பிரிவில் தென்னை விளைச்சல் | 4,750.00 | 475.00 | 400.00 |
| 14 | நெதகமுவ ஓகிட் கார்டின்ஸ் பகுதியில் காணியின் தென்னை விளைச்சல் | 4,650.00 | 465.00 | 400.00 |
| 15 | அஸ்கிரி வல்பொல ஜஸ்மின் கார்டின்ஸ் காணியின் தென்னை விளைச்சல் | 5,700.00 | 570.00 | 400.00 |
| 16 | வீதியவத்த கொஸ்கஹவத்த காணியின் தென்னை விளைச்சல் (வெலமெத வீதி த பினான்ஸ் காணி) | 4,000.00 | 400.00 | 400.00 |
| 17 | கெஹெல்பத்த/கி. சனசமூக மண்டபத்தில் அமைந்துள்ள காணியின் தென்னை விளைச்சல் | 1,100.00 | 110.00 | 400.00 |
| 18 | கெஹெல்பத்த கொஸ்கஹவத்த காணியின் தென்னை விளைச்சல் (நாகஸ்மண்டிய வீதி த பினான்ஸ் காணி) | 1,210.00 | 121.00 | 400.00 |
| 19 | கெஹெல்பத்த பரகஹலந்த காணியின் தென்னை விளைச்சல் (நாகஸ்மண்டிய வீதி டபிள்யூ.பீ. ரூபசிங்க காணி) | 1,210.00 | 121.00 | 400.00 |
| 20 | தெதகமுவ கொள்ளகஹவத்த காணியின் தென்னை விளைச்சல் (கல்ஹெரகந்த த பினான்ஸ் காணி) | 1,400.00 | 140.00 | 400.00 |
| 21 | கொய்கம கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹலந்த காணியின் தென்னை விளைச்சல் (பெரியகொட தேவாலயத்திற்கு அருகில் டபிள்யூ.பீ. ரூபசிங்க காணி) | 3,000.00 | 300.00 | 400.00 |
| 22 | உடுகம்பொல கிராமத்தில் அமைந்துள்ள கஜுகொல்லவத்த காணியின் தென்னை விளைச்சல் (ரஜவத்த ஏல விற்பனை காணி) | 5,100.00 | 510.00 | 400.00 |
| 23 | தொரணகொட கிராமத்தில் அமைந்துள்ள கொஸ்கஹலந்த காணியின் தென்னை விளைச்சல் (கெலும் உயன) | 4,000.00 | 400.00 | 400.00 |
| 24 | வதுமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள நிவ்சிட்டி வெந்தேசிவத்த காணியின் தென்னை விளைச்சல் (த பினான்ஸ் காணி) | 3,000.00 | 300.00 | 400.00 |
| 25 | நய்வலயில் அமைந்துள்ள புஞ்சி நய்வலவத்த பொதுக் காணியின் விளைச்சலை குத்தகைக்கு விடல் | 1,000.00 | 100.00 | 400.00 |
| 26 | பலபோவவில் அமைந்துள்ள பலபோவ எஸ்டேட் பொதுக் காணியின் விளைச்சலை குத்தகைக்கு விடல் | 12,000.00 | 1,200.00 | 400.00 |

# வடமத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

## வ/ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காக சேர்த்துக் கொள்ளல்

வடமத்திய மாகாணத்திற்குள் அமைந்துள்ள கீழ்க்காணும் வ/ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வெற்றிடமாகவுள்ள பொது முகாமையாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்கு தகைமை உள்ள வடமத்திய மாகாணத்திற்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து 2023.01.13 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொது முகாமையாளர் பதவி வெற்றிடமாகவுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்**

| இல. | கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் | தரப்படுத்தல் | வெற்றிட பதவிகள் |
|---|---|---|---|
| 01 | வ/ப நுவரகலாபிய புடவைக் கைத்தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | சீ தரம் | பொது முகாமையாளர் |
| 02 | வ/ப கெக்கிராவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | டி தரம் | பொது முகாமையாளர் |

**02. பொது முகாமையாளர் பதவிக்கான கல்வித் தகைமைகள்**

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வர்த்தகமாணி அல்லது வியாபார முகாமைத்துவ பட்டத்தைப் பெற்றிருத்தல் (அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபையில் முகாமைத்துவ மட்டத்தில் 02 வருட அனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்) அல்லது
02. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் வர்த்தகக் கல்வி உயர் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

**03. பொது முகாமையாளர் பதவியின் சம்பள அளவுகள்**

| ஏ தரம் | பீ தரம் | சி தரம் | டி தரம் |
|---|---|---|---|
| 40850 - 47750<br>8x425 - 7x500 | 35850 - 42750<br>8x425 - 7x500 | 30850 - 37750<br>8x425 - 7x500 | 25850 - 32750<br>8x425 - 7x500 |

**பொது நிபந்தனைகள்:**

**01. வேறு தகைமைகள்:**

i. வயதெல்லை: 2023.01.13ம் திகதிக்கு வயது 22 -45 இற்கு இடையில் இருத்தல்.
ii. 2023.01.13ம் திகதிக்கு கிட்டிய 03 வருட காலத்தில் வடமத்திய மாகாணத்திற்குள் நிரந்தர வதிவை உறுதி செய்தல்.

**02. விண்ணப்பங்களை அனுப்புதல்:**

i. விண்ணப்பங்களை வடமத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அல்லது மாகாணத்திற்குள் அமைந்துள்ள எந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். அவ்விண்ணப்பங்களை செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, 352, மைதிரிபால சேனாநாயக்க மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரிக்கு 2023.01.13 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சங்கத்தின் பெயர் மற்றும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.
ii. ஒரு விண்ணப்பதாரி பல சங்கங்களுக்கு அல்லது பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் ஒவ்வொரு பதவிக்கும் வேறு வேறாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**03.** சகல வெற்றிடங்களையும் அல்லது ஏதேனும் எண்ணிக்கையை நிரப்புதல் அல்லது நிரப்பாது இருக்கும் உரிமையை வடமத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு கொண்டிருக்கும்

**(பீ.எம்.ஜீ.என்.ஜே. மல்வெவரஶ்ரீ)**
**செயலாளர்,**
**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,**
**வடமத்திய மாகாணம்.**

**2022.12.13ம் திகதி அநுராதபுரத்தில்.**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6419(MP) | 03 Nos. Brake Thruster for Mitsui and ZPMC STS Crane at JCT | 32,000.00 | 1,000.00 | 12-01-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6420(MP) | 03 Nos. Rotary Actuators Fitted to Ram Spreaders at JCT | 37,000.00 | 1,000.00 | 12-01-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/08/028 | 12 Nos. Vehicle Mounted Data Terminals | 300,000.00 | 3,500.00 | 23-12-2022 பி.ப. 1.30 மணி |
| CES/LP/22/PT/16/060 | 04 Nos. 35 Ton Load Cells for the weighbridge | 19,000.00 | 1,000.00 | 10-01-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/22/PT/20/061 | Spares for Hangcha CPCD25N RW15A Fork Lift Trucks - 11 | 70,000.00 | 1,000.00 | 10-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/07/055 | Spares for TCM FD 25 – T6 Fork Lift Truck List - 11 | 18,000.00 | 1,000.00 | 10-01-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 டிசம்பர் 16ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.